பக்கங்கள்: இருபத்தெட்டு + 4

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 02 வெள்ளிக்கிழமை (19.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 266



09
முகாம் அமைக்க தேவையில்லை கிறீஸ் பூதம்



14
இவர்கள் மீதும் இலக்கு



25
அசைக்க முடியாது

**கல்விச்சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.16 இன் வினாத்தாள்-I,II இன்றைய உதயனின் I - IV ஆம் பக்கங்களில் வெளியாகி உள்ளது.



எம்ஐ 171 ஹெலி: அடிப்படையில் ஒரு துருப்புக்காவி. 37 படையினரைக் அவர்களுக்கான இருக்கையில் காவிச் செல்லும். பயணிகளாயின் 26 பேரைக் காவும். 4,000 கிலோ வரையான பொருள்களைக் காவும். படுக்கையுடன் சேர்த்து காயப்பட்ட 12 பேரை எடுத்துச் செல்ல முடியும். வானில் இருந்து தரைக்குத் தாக்குதல் நடத்தக் கூடியது. 12.7 மிமீ இயந்திரத் துப்பாக்கி, 57/68 மிமீ வழிகாட்டல் இல்லாத ரொக்கெட் லோஞ்சர்கள், 250/500 கிலோ குண்டுகள், ரி.வை-90 வானிலிருந்து வானுக்குப் பாயும் ஏவுகணை ஆகிய வற்றை தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## ரஷ்ய போர் ஹெலிகள் 14 அரசு திடீரென கொள்வனவு

### போர் முடிந்து 3வருடங்களின் பின்னர்

கொழும்பு, ஒக. 19

போர் முடிந்து கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், ரஷ்யாவிடம் இருந்து திடீரென எம்.ஐ-171 ரக ஹெலிகள் பதின்னான்கை இலங்கை கொள்வனவு செய்துள்ளது.

மன்னாரில் மசகு எண்ணெய் அகழும் பணியில் ரஷ்ய நிறுவனம் ஒன்று ஈடுபடுவது தொடர்பாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து ஹெலி கொள்வனவு தொடர்பான அறிவிப்பு வெளியாகி உள்ளது.

''இராணுவத் தேவைக்கான 14 ஹெலிகளை இலங்கை கொள்வனவு செய்துள்ளது. இவை மிகச் சிறந்ததோர் போக்குவரத்து வாகனங்கள். அனைத்தும் முழுமையான செயல்திறனுடன் இருக்கின்றன'' - என்றார் ரஷ்ய அரசின் ஆயுத ஏற்றுமதி அமைப்பான ரொசபோர்னின் பணிப்பாளர் அனற்றோலி இசெய்க்கின் ரொய்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இந்த ஹெலிகளின் கொள்வனவு தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது என்று பாதுகாப்பு அமைச்சு

பக் 27

## அரசு - ரணில் இடையே ரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை

கொழும்பு, ஒக.19

சஜித் பிரேமதாஸ கூறுவது போல அரசுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எதுவித இரகசிய ஒப்பந்தமும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு மறுப்புத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாஸவின் போராட்டம் தொடர்பாகவும், சிறிகொத்தாவுக்கு முன்பாகத் திடீரென 'கார்பெற்' இடப்பட்டமை குறித்தும் ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், கட்சி களின் உள்விவகாரங்

பக் 27

# முள்ளிவாய்க்காலில் குடியமர முடியாது

### அரசு நேற்று ஆணித்தரமாக அறிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 19

**வன்னியில் நடந்த இறுதிப் போரின் போது பெருமளவில் மனித உரிமை மீறல்களும் போர்க் குற்றங்களும் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகி இருக்கும் புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கப் போவதில்லை என்று அரசு அறிவித்துள்ளது. "போர் முடிவடைந்த பகுதிகளான முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை, தேசியப் பாதுகாப்புக் கருதி அந்த இடங்களில் மீளக்குடியமர்த்த முடியாதுள்ளது'' என்றார் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல.**

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்தக் கூட்டம் நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முடியாது என்று அந்தப் பகுதி இராணுவத்தினர் அறிவித்துள்ளனரே என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

''தேசிய பாதுகாப்பு மற்றும் அரசின் தேவைகளைக் கருத்தில் கொண்டும் அந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த முடியாதுள்ளது. மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் நிலவும் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்த முடியாது'' என்றார் அமைச்சர்.

மீள்குடியமர்வுக்கு அனுமதிக்க முடியாது என்று அரசு அறிவித்துள்ள இந்த இடங்களிலேயே போர்க் குற்றங்கள் அதிகம் நிகழ்ந்தன என்று மனித உரிமைக் குழுக்கள் குற்

பக் 27

## மனிதாபிமானப் பணிகளில் இலங்கைக்கு ஐ.நா. உதவும்

### உலக மனிதாபிமான தினத்தை முன்னிட்டு அறிக்கை

கொழும்பு, ஒக. 19

இலங்கையில் நல்லிணக்க மற்றும் மனிதாபிமானப் பணிகளை மேம்படுத்துவதற்கு ஐ.நா. சபை இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவும் என்று ஐ.நா. மனிதாபிமானப் பணிகளின் இலங்கைக்கான இணைப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

இன்று உலக மனிதாபிமான தினம் கொண்டாடப் படுவதையொட்டி ஐ.நா. மனிதாபிமானப் பணிகளின் இலங் கைக்கான இணைப்பாளர் விடுத்துள்ள

பக் 27

## தமிழரின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் செயற்பாடே இது

### குற்றஞ்சாட்டுகிறார் சிறீதரன் எம்.பி.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களது பூர்வீக நிலங்களை அபகரிக்கும் செயற்பாடாகவே அரசின் இந்த அறிவிப்பை நோக்க முடிகிறது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வடக்கின் சில பிரதேசங்களில் தற்போதைக்கு மீள்குடியேற்றம் செய்வது சாத்தியம் இல்லை என நேற்று அரச முடிவுகளை அறிவிக்கும் ஊடகவிய லாளர் சந்திப்பில்

பக் 27

## பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடும் தென்மராட்சியின் சில ஆசிரியர்கள்

தென்மராட்சி, ஒக. 19

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரபல பாடசாலைகளில் உள்ள சில ஆசிரியர்களால் மாணவிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஆகியோரினால் இந்த முறைப்பாடுகள் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்தகைய ஆசிரியர்களை கைது செய்வதற்கு வேண்டிய சட்ட ஏற்பாடுகளைக் கவனிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா பொலி ஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆசிரியர்களினால் சில பெண் பிள்ளைகள் இவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றபோதும், அவர்களின் எதிர்கால நலன் கருதி அவற்றை வெளிக்கொணர பிள்ளைகளின் பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பக் 27

## மேயர் பதவிக்கு ஐ.தே.க. சார்பில் மூவர்

கொழும்பு, ஒக. 19

கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மேயர் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
ஆவணி 18, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7,030.85↑
மிலங்கா(MPI) 6,410.12↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 6,394.48Mn
பங்குகளின் அளவு(No.) 196.74Mn
வியாபாரம்(No.) 49,924
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5.gainers)விலை Rs.
எச் வி எ பூட் 33.60
நண்டன் இன்வெஸ்மன் 21.40
ஈ.பி கிரேசி 2600.00
செலான் மேச்சன்(w16) 0.50
சென்றல் இன்வெஸ்மன் 12.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சொப்லொயிக் பைனான்ஸ்(r) 0.10
செலான் மேச்சன்(x) 0.70
மொறிசன் 3500.00
சிங்கலங்கா 441.00
றிவரீனா ஹொட்டல் 123.00
லங்கா கொஸ்பிற்றல் 84.90
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# உயிரோடு உள்ளவரை இறந்ததாகக் கூறி 5 பரப்புக் காணியை அபகரித்த ஆசாமிகள்

## வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபையில் மாட்டிக் கொண்டனர்

அச்சுவேலி, ஓக.19

உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும் முதியவரை இறந்துவிட்டதாகக் கூறி அவரின் 5 பரப்புக் காணியை சட்டவிரோதமாக உரிமை மாற்றம் செய்தவர்கள், அவர்களுக்கு உடந்தையாக இருந்த தென்மராட்சியைச் சேர்ந்த பிரபல நொத்தாரிசு ஆகியோரின் மோசடி வலி. கிழக்குப் பிரதேச மத்தியஸ்தர் சபையில் அம்பலத்துக்கு வந்தது.

தமது குட்டு வெளிப்பட்டதை அடுத்துக் காணி உரிமை முழுவதையும் மத்தியஸ்தர் சபையின் ஆலோச்னைக்கு ஏற்ப முதியவரிடம் கையளிப்பதற்கு எதிராளிகள் இணங்கிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அறியப்படுவதாவது:

வலி.கிழக்கில் வசிக்கும் 70 வயது முதியவருக்கு 5 பரப்புக் காணி மாவிட்டபுரத்தில் உள்ளது. இந்தக் காணி மீது கண் வைத்திருந்த உறவினர்கள் சிலர் தென்மராட்சியில் உள்ள பிரபல நொத்தாரிசு மூலம் காணியை உறுதி எழுதி உரிமை மாற்றம் செய்துவிட்டனர்.

அண்மையில் முதியவர் காணி தனக்குத் தெரியாமல் உறுதி எழுதி உரிமை மாற்றம் செய்யப்பட்டதை அறிந்து வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபைக்கு முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட மத்தியஸ்தர் சபை மேற்படி உரிமை மாற்றம் செய்த எதிராளிகளை அழைத்து விசாரித்தது.

உயிருடன் இருப்பவரை இறந்ததாக அறிவித்து உரிமையாளருக்குத் தெரியாமல் - அவரின் கையொப்பம் இல்லாமல் காணியை உரிமை மாற்றம் செய்தது, முழுமையான தகவல்களைக் கண்டுகொள்ளாமல் காணியை உறுதி எழுதி உரிமை மாற்றம் செய்த நொத்தரிசுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் என்பவற்றை விளக்கிக் கூறி இணக்கப்பாட்டுக்கு வந்து சட்டரீதியாகச் சந்திக்கக் கூடிய தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்கள்.

வரக்கூடிய பாதிப்புகளை உணர்ந்த எதிராளிகள் காணி உரிமை அனைத்தையும் முதியவரிடம் ஒப்படைத்துவிட்டுத் தப்பிக் கொண்டனர்.

மேற்படி சம்பவத்தை உறுதிப்படுத்திய வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபையின் தலைவர் இ.மயில்வாகனம் இந்த வகையான சட்ட விரோதமான காணி உரிமை மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் மத்தியஸ்தர் சபைக்கு வருவது அதிகரித்துச் செல்கிறது எனத் தெரிவித்தார். (த-11)

# கிளிநொச்சி, கண்டி சாரணரின் நட்புறவுப் பாசறை பள்ளேகலவில்

கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கமும் கண்டி சார ணர் மாவட்ட சங்கமும் இணைந்து நட்புறவு ரீதியிலான சாரணர் பாசறையை கண்டி பள்ளேகல பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறும் சாரணர் பாசறையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், முழங்காவில் ம.வி., திருவையாறு ம.வி., முரசு மோட்டை முருகானந்தா ம.வி., தர்மபுரம் ம.வி. ஆகியவற்றின் சாரணர்களும் சாரணத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் உதவி பிரதம சாரணர் ஆணையாளர் ச.நா. போஜன் ஆகியோர் சாரணர் குழாமை அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (த-207)

# சிறிகொத்தாவுக்கு முன்னால் உள்ள வீதிக்கு அவசரமாக 'காப்பெற்' போட்டது ஏன்?

கொழும்பு, ஓக.19

ஐ.தே.கட்சி செயற்குழு நடைபெற்ற தினத்தன்று (நேற்று முன்தினம்) அவசரமாக சிறிகொத்தாவுக்கு முன்பாகவுள்ள வீதிக்கு 'காப்பெற்' போடப்பட்டது ஏன்?

- இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் மாலை 2 மணிக்கு ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் சஜித் தரப்பினர் சிறிகொத்தா முன்னால் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில, சிறிகொத்தாவுக்கு முன்னால் உள்ள வீதி அன்றைய தினம் மூடப்பட்டது. 'காப்பெற்' போடும் பணிகள் அவசர கதியில் இடம்பெற்றன.

இதேவேளை, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல சிறிகொத்தவுக்கு அண்மையில் வாழும் மக்களின் வேண்டுகோளின்படியே அந்த வீதிக்கு 'காப்பெற்' போடப்பட்டது எனத் தெரிவிக்கின்றார்.

# அடுத்த ஆண்டு முதல் பரீட்சை முறையில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிக்கிறார்

கொழும்பு, ஓக. 19

2012 ஆம் ஆண்டு கல்வி முறையில் விரிவான மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன. இன்றைய பரீட்சை முறையில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்படும்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த தகவலை வெளியிட்டுள்ளார். ஹொரணை நகர மண்டபத்தில் ஜப்பானிய ஷிதோரியோ கராத்தே பாடசாலை பயிலுனர்களுக்கு கறுப்பு பட்டிகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்ட நிகழ்வில் அமைச்சர் உரை நிகழ்த்தினார்.

அடுத்த வருடம் பரீட்சைகளில் மாற்றம் கொண் டுவரப் படவிருக்கின்றது. இப்போதுள்ள முறை மாற்றி அமைக்கப்படும் மாணவர்கள் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு பரீட்சைகளில் பெறும் புள்ளிகளுடன் பாடசாலை வாரியான பகுப்பாய்வில் பெற்றுக் கொள்ளும் 25 புள்ளிகளும் சேர்த்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்தங்களின் கீழ் ஆங்கிலம் போதித்தல் மற்றும் வேறு வெளிநாட்டு மொழிகளை கற்பித்தல், தகவல் தொழில் நுட்பம், அழகியல் கலைகள், போன்ற அம்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் அத்துடன் ஜீடோ, கராத்தே, உடற்பயிற்சி போன்ற அம்சங்களும் பயிற்றுவிக்கப்பட இருக்கின்றது. இவை மாணவர்களை ஆரோக்கியமாக இருக்க செய்வதுடன் அவர்களின் மனங்களும் ஆரோக்கியமாக இருக்க உதவும் என்றும் அமைச்சர் கூறினார். (ப)

# கிளிநொச்சியில் இன்று நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஓக. 19

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் கிளிநொச்சி மலையாளபுரம், கிருஸ்ணபுரம், பாரதிபுரம் மற்றும் விவேகானந்தநகர் கிராம மக்களுக்கான நடமாடும் சேவை இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை கிளிநொச்சி பாரதிவித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தப்பகுதி மக்கள் நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன்மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதுடன் இதில் பங்குபற்றும் பத்து நிறுவனங்களைப் பற்றிய விழிப்புணர்வையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

சட்ட உதவி ஆணைக் குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், கரைச்சி உதவி அரச அதிபர் பணிமனை, கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கிளிநொச்சி சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸ் நிலையம், பால் நிலைவன்முறைக்கு எதிரான அமைப்பு, கரைச்சிப் பிரதேச சபை, மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, தொழிற் பயிற்சி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களே இதில் கலந்து கொள்ளவுள்ளன. (ம-15)

# நிகழ்வுகள்

### இரத்த தான முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 19

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாபெரும் நடமாடும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறைச் சந்தியிலுள்ள பார்வதி இலவச ஆங்கி லக் கல்வி நிலையத்தில் நடை பெறவுள்ளது.

**இதில் பிரதேசத்தைச் சேர்ந்த குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்யுமாறு யாழ்.போ தனா வைத்திய சாலை இரத்த வங்கி பருத்தித்துறை ஆதார** வைத்தியசாலை இரத்த வங்கி ஆகியவற்றின் வைத்திய அதிகாரிகளின் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-313)

### பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபையின் கலாசார மண்டத் தில் இடம்பெறவுள்ளது. (ம)

### நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஓக. 19

[illegible] ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 10 மணிக்கு 16 ஆம் திருவிழாவில் 'குற்றியின் செல்வன்' எனும் இசை நாடகத்தை கலாலயம் நாடக மன்றம் ஆற்றுகை செய்ய வுள்ளது.

தொல்புரம் மத்தியில் கடந்த 35 வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் கலாலயம் நாடக மன்றம் வலிகாமம் மேற்கில் குந்தியின் செல்வன், இரணியன் செல்வன் இயமதர்ம ர்ப்பு, தசரதன் செல்வன், பக்த குசேலர், ருக்குமணி கல்யாணம் போன்ற சரித்திர இசை நாடகங்களை பல கோயில் அரங்குகளிலும் பொது அரங்குகளிலும் ஆற்றுகை செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் பிரச்சினையை திரைப்படமாக்குகிறார் மணிரத்தினம்

இலங்கைக் கடற்படையினரிடம் சிக்கி தமிழக மீனவர்கள் படும்பாடுகளைத் திரைப்படமாக உருவாக்குகிறார் மணிரத்னம். இந்தப் படத்துக்கான கதை வசனத்தை எழுத்தாளர் ஜெயமோகன் எழுதுகிறார்.

தமிழக மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் பல ஆண்டுகளாகப் பிரச்சினை இருந்து வருகிறது.

நடுக்கடலில் தமிழக மீனவர்களை மடக்கி நிர்வாணப்படுத்தி துன்புறுத்தும் இலங்கைக் கடற்படையினர், பல சந்தர்ப்பங்களில் சுட்டுக் கொன்று விடுவதும், கைது செய்து இலங்கைச் சிறைகளில் அடைப்பதும் தொடர்கிறது.

இதனை இந்திய அரசு இதுவரை தட்டிக் கேட்கவில்லை. தமிழக அரசின் எதிர்ப்புக் குரலை பொருட்படுத்துவதும் இல்லை. இந்த தொடர் அவலத்தை ஜெயமோகனின் கதை வசனத்தில் ஒரு திரைப்படமாக உருவாக்குகிறார் மணிரத்னம்.

இந்தப் படத்தில் ஹீரோ ஹீரோயின் என அனைவரும் புதியவர்களே. ஏ. ஆர்.ரஹ்மான் இசையமைக்க, ராஜீவ் மேனன் ஒளிப்பதிவு செய்கிறார்.இந்தப் படத்தை முழுக்க முழுக்க கன்னியாகுமரி மற்றும் இராமேஸ்வர கடற்கரைகளில், கடல்பகுதிகளில் எடுக்கிறாராம் மணிரத்னம்.

கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டம் குறித்து அரைகுறையாக கருத்துச் சொல்லி தமிழ் உணர்வாளர்களின் கண்டனத்துக்கு ஆளானவர் மணிரத்னம்.

இந்த முறை மீண்டும் ஒரு உணர்ச்சிப்பூர்வமான விடயத்தைக் கையிலெடுக்கிறார். அதை எப்படி கையாளப் போகிறார் என்பதை தமிழ் ரசிகர்கள் ஆவலு டன் எதிர்ப்பார்க்கிறார்கள்!. (த-10)

# ராஜரட்ணத்தின் மனு நிராகரிப்பு



நிறுவனங்களின் உள்தகவல்களை பெற்று பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க சமஷ்டி விதிமுறைகளைவிட குறைந்த தண்டனையை வழங்குமாறு நீதிபதியிடம் கோரியிருந்தார்.

இந்நிலையில் இவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீண்டகாலச் சிறைத்தண்டனையானது மரணதண்டனைக்கு நிகராக அமையும் எனவும் இது குற்றத்தின் தீவிரத்தன்மையை மிகைப்படுத்துவதாக அமையும் எனவும் ராஜரட்ணம் தெரிவித்திருந்தார்.

கடந்த செவ்வாய்கிழமை அமெரிக்க மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரிச்சட் ஹோல்வெல் இந்த மனுவை நிராகரித்துள்ளார். இதுகுறித்து ராஜரட்ணத்தின் பாதுகாப்புக்குழு கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது.

ராஜரட்ணத்திற்கு எதிரான வழக்கின் தீர்ப்பு செப்ரெம்பர் 27 ஆம் திகதியன்று வழங்கப்படும்.கெலியன் குழுமத்தின் நிறுவுனரும் அமெரிக்க கோடீஸ்வரருமான ராஜ் ராஜரட்ணம் நிதி மோசடி மற்றும் சதிச் செயல் செய்ததாக 14 குற்றச் சாட்டுகளில் அவர் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ராஜரட்ணத்துக்கு 15 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரை சிறை தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் இடைமறிக்கப்பட்ட தொலைபேசி உரையாடல்களே பெருமளவில் சாட்சியங்களாக வைக்கப்பட்டன.

அவர் மீதான 14 குற்றச் சாட்டுகளில் ஐந்து சதித்திட்டம் தீட்டியது, இதர 9 நிதி மோசடிகள் தொடர்பிலானது. (த-10)

இணையச் செய்திகள்

# பிரிட்டன் பிரஜைகளான தாயும் மகளும் பொலிஸாரால் கைது

லண்டனில் இருந்து கடந்த 14 நாள்களுக்கு முன்னர் தனது மகளோடு கொழும்புக்குச் வந்த வாசுகி கருணாநிதி என்பவர் இரகசியப் பொலி ஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரை கடந்த 12 நாள்களாக குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைமையகம் அமைந்துள்ள 4ஆம் மாடியில் தடுத்து வைத்துள்ளனர்.

அவரது மகளைத் தற் போது விடுவித்துள்ள அரசு வாசுகியை எப்போது விடுவிப்போம் என்பது குறித்து தகவல் வழங்க மறுத்து வருகின்றது.

வாசுகி கருணாநிதி பிரிட்டனில் நடைபெற்ற பல ஜனநாயக ரீதியான மனிதநேய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாசுகியைக் கைதுசெய்த இரகசியப் பொலிசார் அவர் பிரிட்டனில் நடைபெற்ற போராட்டம் ஒன்றில் கலந்துகொண்டதற்கான ஆதார வீடியோ ஒன்றையும் காட்டியுள்ளனர்.

இலங்கைக்கான பிரதிப் பிரிட்டன் தூதுவர் இவரது கைது குறித்து இலங்கையு டன் பேச்சு நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

5 நாள்களில் அவரை விடுவிப்பதாக முதலில் அரசு வாக்குறுதியளித்திருந்த போதிலும், இதுவரை அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பிரிட்டன் பிரஜையான இவர் பிரிட்டனில் வட்பேட் பகுதியில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

# படைமுகாம்களை அமைப்பதற்கு கிறீஸ் பூதங்கள் தேவையில்லை

## அமைச்சர் ஹெகலிய கூறுகிறார்



நாடு முழுவதிலும் இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம்கள் அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே கிறீஸ் பூதங்களை அரசு பயன்படுத்தி வருகின்றது என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

மேற்படி பூதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியமும் அரசுக்கு இல்லை என்று அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு, நேற்று வியாழக்கிழமை பிற்பகல் அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர், நாட்டின் பாதுகாப்பைப் பேண வேண்டிய பொலிஸார் பலவீனப்பட்டுள்ளனர் என்பதை நாட்டு மக்களுக்கு புரிய வைத்து, அதன் பின்னணியில் நாடு முழுவதிலும் பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் இராணுவ முகாம்களை அமைக்கும் திட்டத்தை அரசு முன்னெடுத்து வருவதாகவும், இதற்காகவே கிறீஸ் பூதங்கள் என்ற சிலரைக் கட்டவிழ்த்து விட்டு அரசு வேடிக்கைப் பார்ப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளனவே, இதன் உண்மைத் தன்மை என்ன? என்ற கேள்வியை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் நாடு முழுவதிலும் பாதுகாப்பு படை முகாம்கள் அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை உண்மையானதே. இருப்பினும் இவற்றை அமைக்க கிறீஸ் பூதங்களை ஏவி விட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை.

கிறீஸ் பூதங்கள், மர்ம மனிதர்கள் என்ற போர்வையில் சிற்சில தீய சக்திகள் செயற்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறான தீய சக்திகளின் தேவை என்ன? அவர்கள் யார்? என்பது தொடர்பில் பொலிஸார் உட்பட அனைத்து தரப்பினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில், கிறீஸ் பூதங்களை அடக்கும் பின்னணியில் சட்டத்தைக் கையில் எடுக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை. அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்கப் போவதும் இல்லை. அவ்வாறு சட்டத்தைக் கையில் எடுத்து செயற்பட முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (த-10)



புறக்கோட்டை போதிராஜ மாவத்தையில் நடைபாதை வியாபாரிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார். அருகில் விமல் வீரவன்ஸ மற்றும் வாசுதேவ நாணயக்கார.

# கரையோரப் பாதுகாப்புக்காகவே போர் விமானங்கள் கொள்வனவு

இலங்கை ஒரு தீவு என்ற ரீதியில் அதன் கரையோரப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதனாலேயே, யுத்தம் முடிவடைந்துள்ள நிலையிலும் போர் விமானங்கள் உள்ளிட்ட ஆயுத உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன என்று அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு, நேற்று வியாழக்கிழமை பிற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் ரஷ்யாவிடமிருந்து ராணுவ ஹெலிகொப்டர்களை அரசு கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் கரையோரப் பாதுகாப்பில் காணப்பட்ட பலவீனம் காரணமாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் பாரியளவு போர் ஆயுதங்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

இவ்வாறானதொரு நிலைமை மீண்டும் கட்டவிழ்வதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது. அதனால் நாட்டுக்குள்ளேயும், நாட்டுக்கு வெளியேயும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அதற்காக கரையோரப் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே வெளிநாடுகளிலிருந்து ஹெலிகளையும், போராயுதங்களையும் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது என்றார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்

## ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கில் ஐந்து வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். நகரில் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ரான்லின் தலைமையில் இடம்பெற்ற ஒன்றுகூடல் நிகழ்வின்போதே முக்கியமான இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களை உள்ளடக்கிய இலங்கை ஆசிரியர் சங்கங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களுக்கிடையிலேயே இந்தச் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன்போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

* வன்னிப் பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்து வசதிகள் சீர்செய்து கொடுக்கப்படவேண்டும்.
* வடக்கு மாகாணத்தில் ஐந்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.
* ஆசிரியர் உதவியாளர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.
* அனைத்து வகையான ஆசிரியர் இடமாற்றங்களுக்குமான விண்ணப்ப முடிவு திகதி செப்ரொம்பர் மாதம் 30 ஆம் திகதி ஆகும்.
* அதிக கஷ்ட பிரதேசத்தில் நான்கு வருடங்களுக்கு மேலும், கஷ்டப் பிரதேசத்தில் ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படவேண்டும்.
* எதிர்வரும் செப்ரொம்பர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 44 ஆவது பொதுக்கூட்டம் அனுராதபுரத்தில் இடம்பெறும். அதில் ஆசிரியர்கள் பங்குபற்றுவதுக்கு ஏற்பாடு செய்தல். (ம-14)

# ரமழான் சிந்தனை

ரமழானின் முக்கியத்துவம் பற்றி அல்லாஹ் கூறும்போது அது மனித வாழ்வை நெறிப்படுத்தி சீர்செய்து சுவன வாழ்வை வழங்கும் திருமறை அருளப் பெற்ற மாதம் என்று அறிமுகப் படுத்தியுள்ளான்.

ரமழான் மாதம் அது எத்தகையது என்றால் அந்த மாதத் தில்தான் மக்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் நன்மை தீமை களைப் பிரித்தறியக்கூடியதாகவும் உள்ள புனித அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றதாகும்.(அல் பகரா: 183)

வஹி அருளப்பெற்ற மகத்தான மாதத்தை இறைவன் வஹியை முழு மனித வாழ்விலும் சுமந்துகொள்வதற்கான ஒரு பயிற்சிப்பட்டறையாக ஆக்கியுள்ளான். வஹியின் வாழ்வை யாரெல்லாம் கட்டிக் காக்கின்றார்களோ அவர்கள் சுவனம் நுழைவிக்கப்படுவர்.

மனித வாழ்வின் இறுதி முடிவு சிறப்பாக அமையவேண்டு மாயின் வஹியின் வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வது இன்றி யமையாத ஒன்றாகும். வாழ்வின் அடிப்படைத் தேவையும் இறைவழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதே. இதைத்தான் ஒரு முஸ்லிம் ஒவ்வொரு தொழுகையிலும் ஓதுகின்ற ஸூரதுல் பாத்திஹாவில் அவன் கேட்கும் அடிப்படைத் தேவையான தௌவா எமக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக! என்ற பிரார்த்தனை குறிக்கின்றது. (ம)

- சத்தார் எம்.ஜாவித்-

# தரம் 5 பரீட்சை இடம்பெறும் சுற்றாடலில் வெளியார் செல்லத்தடை

கொழும்பு, ஓக. 19

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகள் இடம்பெறும் நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலைகளின் சுற்றாடலுக்குள் பிரவேசிக்க குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ அல்லது வேறும் எந்தவொரு நபருக்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாதென்று கல்வியமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு சில பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல்வேறு கடமைகள் தொடர்பாக பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலை வளாகத்துள் தங்கி நிற்பதாகவும் அவர்களது அந்தச் செயல்களின் மூலம் பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்தே இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-22)

# ரயில் வலைப்பின்னல் சமிக்ஞை; இந்தியா - இலங்கை உடன்படிக்கை

கொழும்பு, ஓக. 19

இலங்கையில், வடமாகாணத்தில் உள்ள தொடருந்து வலைப் பின்னலுக்கான சமிக்கைகள் மற்றும் தொலைதூரத் தொடர்பாடல்களை வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்று நேற்றுமுன்தினம் கைச்சாத்தாகியுள்ளது.

இந்த உடன்படிக்கையில் இலங்கை தொடருந்து பொது முகாமையாளர் அரிய ரத்னா இந்திய அரசின் பிரதிநிதி மோகனன் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையானது போக்குவரத்து அமைச்சர் முகார வெல்கம மற்றும் உயர் ஸ்தானிகர் அசோக்.கே. காந்தா, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் டம்மிக்க பெரேரா ஆகியோர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திட்டம் 86.51 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானதாகும். இது இந்திய அரசால் இலங்கைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்ட 800 மில்லியன் அமெரிக்க டொலரின் ஒரு பகுதியாகும். இந்தக் கடனானது 20 ஆண்டு காலப் பகுதியில் திருப்பிக்கொடுக்கப் படவேண்டிய ஒன்றாகும். இந்தத் திட்டத்தின் கிழ் அனுராதபுரம் - மதவாச்சி - தலைமன்னார்ப் பகுதி ஆகியவற்றைச் சூழவுள்ள 341 கிலோமீற்றர் நீளமான பகுதிகளும் 28 ரயில் நிலையங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இடைச்சுறுகிடும் நிற ஒளி அமைப்பு மற்றும் மத்தியப் படுத்தப்பட்ட கட்டுப் பாட்டுப் பொறி முறை என்பனவற்றை இந்தத் திட்டத்தின் கீழான சமிக்கை வேலைகள் உள்ளடங்குகின்றன.

இந்தத் திட்டமானது ஏற்கனவே மதவாச்சி - மடு வீதி, மடுவீதி - தலைமன்னார், ஓமந்தை - பளைப் பகுதி களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் காந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முழு ஒத்துழைப்பும் இலங்கை அரசிடமிருந்து கிடைப்பதாகவும், ஏற்கனவே திட்டமிட்டபடி இந்தத்திட்டத்துக்கான பணிகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்படும் என்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ம)

**வாடகைக்கு**

சகல வசதிகளும் உள்ள 3 அறை வீடு, யாழ்நகர், சுண்டுக்குளிப் பகுதியில் வாடகைக்கு உண்டு. கனரக மற்றும் சாதாரண வாகனத்தரிப்பிட வசதிகள் கொண்டது. தனியார் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) தொடர்பு கொள்ளலாம்.

T.P. 071 7763564
0717362757

# கடையில் விலைப்பட்டியல் வைக்காத மூவருக்கு தண்டம்

வர்த்தக நிலையங்களில் உள்ள பொருள்கள் தொடர்பான விலைப்பட்டியலை காட்சிக்கு வைக்காத வர்த்தகர்கள் மூவருக்கு யாழ். நீதிமன்றம் 1500 ரூபா வீதம் 4500 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

அபராதம் செலுத்தத் தவறின் ஒவ்வொருவருக்கும் தால ஒரு மாதகால சாதரண சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ். நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த மூவருக்கு எதிராக யாழ் மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த ஏ.ஏ.ஆனந்தராஜா மூவருக்கும் இந்தத் தீர்ப்பை வழங்கினார். (த-4)

**அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் (வ-து)**
**பதிவு எண் K/N-150**

**கிளைப் பொதுச்சபை கூட்டம் தொடர்பானது**

நாளை (20.08.2011) சனிக்கிழமை நடைபெறவிருந்த அக்கராயன் பொதுச் சபைக் கூட்டம் தவிர்க்க முடியாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை எமது சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்
அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்

(சி/3073)

**Computer Express**
**Institute of Information Technology**

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 3000/= |
| * Dip.in Programming Language | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

[illegible] Programming Language (C++,C Language,Java,Java Script,VB Script) [illegible] (Madras University B.SC) [illegible]

பல்கலைக்கழக மாணவர்களுக்கான Diploma in Computerized Accounting Packages ஆரம்பமாகின்றன. விரிவுரையாளர் - Ashok

Batch I - 19.08.2011 9am or 3Pm Batch II - 20.08.2011 9am or 3Pm
Batch III - 21.08.2011 9am or 3Pm Batch IV - 24.08.2011 9am or 3Pm

Computer Express [illegible] New College of Higher Studies [illegible] 2011 G.C.E. A/L [illegible] Computer Express [illegible]

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

**நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு**
**மெகா சேல்**

Kalanjalie Saree நேர்த்தியாக சேலை அணியும் பெண்களை மகிழ்விக்கும் முகமாக மலிவு விற்பனை

Thiriss - யாழ். பாரம்பரிய உணவுகளை இலகு முறையில் செய்வதற்கான இலவச செய்முறைப் பயிற்சியும் விற்பனையும்.

High Looks- அழகுக் கலை சம்பந்தமாக இலவச ஆலோசனைகள்

Special Facial (Discount Rate)

Date - 20,21.08.2011 (சனி. ஞாயிறு)
Time - 9.00 a.m - 6.00 p.m
Venue - 156, Point Pedro Road, Nallur.
(பாரதி சிலைக்கு அருகில்)

T.P - 0713267826

# மாணவருக்கு ஆங்கில வகுப்பு

தென்மராட்சி, ஓக். 19

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல் நிலையத்தில் தரம் 9 வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான ஆங்கில மொழி விருத்தி வகுப்புகளை பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தவுள்ளனர்.

ஆரம்ப வகுப்பு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

பயிற்சி வகுப்புகளில் இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் நூல் நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு [illegible] நூலகர் [illegible] அறிவித்துள்ளார். (ம-207)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் தனபாலசிங்கம் (Sandau - அப்பு)



பன்னையம்பதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் தனபாலசிங்கம் 17.08.2011 நேற்று முன்தினம் புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் (கமநல சேவை நிலையம்-கரவெட்டி D.O.), சிந்துஜன் (ஜேர்மனி), லக்சிதன், கோகுலன் (அனு. பிரான்ஸ்)ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செ. சரஸ்வதி மற்றும் இ.பரமேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற மா.சிவசுப்பிரமணியம் மற்றும் மா.துரைசிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் கா.பாமா (Baby - கொழும்பு), ம.விமலா (கிளி - லண்டன்), க.சுதாகரன் (லண்டன்), அ.சுதாம்தி (மதி - ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சி.உதயராணியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னையம்பதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தலைவிரித்தாடும் 'கிறீஸ் பூத' மர்மம் இரகசிய ஊடுருவலின் முன்னோடி

'கிறீஸ் பூதங்கள்' மற்றும் மர்ம மனிதர்களின் நடமாட்டமும் அதற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் இப்போது நாளாந்தம் அதிகரித்து வருகின்றன . மலையகப் பெண்களைப் பயமுறுத்துவதில் தொடங்கி, கிழக்குக்கும் பரவிய பீதியைப் பரப்பும் இந்த அசுரப் புயல், தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டும் தொடர்ந்து நடைபெறுவதன் மர்மத்தை, அதன் பின்னணியை, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பானவர்களால் மாதம் ஒன்று கழியும் நிலையிலும் இனங்காண முடியவில்லை!

கிறீஸ்பூதச் சம்பவங்கள் தொடங்கிய வேளையில், அவற்றைக் கட்டுக் கதைகள் என்றும், பொலிஸார் தமக்குரிய சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்பைச் சரிவரச்செய்யவில்லை என்பதனைக் காட்டுவதற்கான 'பம் மாத்து' என்றும் வர்ணிக்கப்பட்டது உண்டு.

மலையகத்தில் தோற்றுவிக்கப்பட்ட வன்முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவில்லை. சாவுகள் இரண்டு, மூன்று நிகழ்ந்த பின்னரே அப்பகுதி அரசியல்வாதிகள் முன்னின்று மேற்கொண்ட முயற்சியினாலேயே தோட்டங்களில் பணிபுரியும் பெண்களுக்கும், தோட்டப் பிரதேசங்களிலும் ஓரளவு பாதுகாப்புத் தோற்றுவிக்கப்பட்டது. ஆயினும் ஆங்காங்கே கிறீஸ்பூதங்கள் மலையகப் பெண்களுக்குத் தொல்லை கொடுத்து அவர்களிடம் பீதியை உண்டாக்கி மனோநிலையைப் பாதிப்புறச் செய்கின்றன.

மலையகத்தில், ஹப்புத்தளையில் தொட்டகலத் தோட்டத்தில் இரவு வேளைகளில் மர்மமான முறையில் பெண்களை அச்சுறுத்தி வந்த இரண்டு (சந்தேக) நபர்கள் பிரதேச வாசிகளால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பல வகைகளிலும் 'கிறீஸ்மனிதர்'கள் விவகாரத்தை பூதகாரமாக்கியது.

'கிறீஸ் மனிதர்' பிரலாபம், சுவையான பல செய்திகளாகவும் மாறின.

★ கம்பளையில், பெண்கள் மாத்திரம் வசிக்கும் வீடுகளுக்கு இரவு நேரத்தில் சென்று ஜன்னல் கதவுகளைத் தட்டுதல், கற்கள் மற்றும் மணல் எறிதல், வீடுகளின் வெளிப்புறங்களில் இருக்கும் நீர்க்குழாய்களை திறந்து விடுதல் உள்ளிட்ட பலதரப்பட்ட ஒலிகளை எழுப்புதல் போன்ற உபாயங்களைப் பயன்படுத்தி மக்களைப் பயமுறுத்தி வந்தனர் ஒரு குழுவினர்.

★ குருணாகல் மாவத்தக்ம தெல்கொல்லவத்த பிரதேசத்தில், இரவில் சந்தேகத்துக்கு இடமான விதத்தில் நடமாடிய இரு இளைஞர்கள் அப்பிரதேச வாசிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

தாக்குண்டவர்களில் ஒருவர் வாரியப்பொலவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய். மற்றவர் அவரது மைத்துனர்.

★ சிகிரியாவின் பிதுரங்கல பிரதேசத்தில் முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்து மூடிக்கொண்டு கையுறை அணிந்துகொண்டு மக்களைப் பயமுறுத்திய நபர் ஒருவர், சிகிரியாப் பொலிஸாரால் காட்டுப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் பெண்கள் அணியும் உடைகளும் இருந்துள்ளன.

மலையகத்தில் தோற்றுவிக்கப்பட்ட கிறீஸ்மனிதரின் பெண்களைப் பயமுறுத்தும் வன்முறை, மிகவேகமாக கிழக்குப் பகுதிக்கும் பரவியது.

அங்கு 'கிறீஸ் மர்மமனிதர்' விவகாரம் பெருவடிவு எடுத்திருக்கிறது. மர்ம மனிதர்களின் அச்சுறுத்தலுக்கு எதிராக மக்கள், குறிப்பாக பெண்கள் பெருவடிவில் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

★ மூதூர் அக்கரைச்சேனைப் பகுதியில் பெண்களுடன் சேஷ்டைகளில் ஈடுபட்ட மர்ம நபர்களை இளைஞர்கள் துரத்திச்சென்றவேளை, அவர்கள் பாதுகாப்புத் தேடி கடற்படை முகாம் ஒன்றுக்குள் நுழைந்தனர்.

★ கிண்ணியா மத்திய பள்ளிவாசலுக்குள் நுழைந்த கிறீஸ் மர்ம மனிதர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். சம்பவத்தில் ஏழுபேர் காயமடைந்து கிண்ணியா தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சுமார் பத்துப் பேர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

★ மட்டக்களப்பு ஊறணியில் மாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகே உள்ள வீடொன்றில் பெண்ணொருவர் மீது மர்ம மனிதர் தாக்குதல் நடத்திய சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸாருக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டத்தை பொதுமக்கள் நடத்தினர். அவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதலும் தடியடிப் பிரயோகமும் நடத்தப்பட்டன. மர்ம மனிதரால் தாக்கப்பட்ட பெண் மார்பு, வயிறு, கைகளில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

★ வவுணதீவுப் பகுதியிலும் இரவு வேளைகளில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதைக் கண்டித்து பெரும் எண்ணிக்கையான பெண்கள் வீதி மறியல் போராட்டம் நடத்தினர். மர்ம மனிதனை மக்கள் கலைத்துச் சென்றபோது அவன் பொலிஸ் நிலையத்துக்குள் ஓடி மறைந்து விட்டான்.

மொத்தத்தில், கிறீஸ் பூதப் பயப்பிராந்தி மலையகத்திலும் கிழக்கிலுமே மிகப்பெரிய பரிமாணத்தில் தோன்றியுள்ளது; தோற்றுவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் கிழக்கில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை மக்கள் துரத்திச்சென்ற வேளை அவர்களில் பலர் இராணுவ முகாம்களுக்குள்ளும், பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் ஒளிந்து தப்பிக்கொண்டதாகப் பொதுமக்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இவை யாவற்றையும் ஒரே வரிசையில் வைத்து ஒப்புநோக்கும் போது, சக்திமிக்க ஒரு தரப்பு கபட நோக்கத்துடன் 'கிறீஸ் பூதங்களை' பிரசவித்துச் செயற்பட வைத்துள்ளது என்ற சந்தேகமே மேலெழுகிறது.

அவ்வாறு இல்லையெனின், தமிழ், முஸ்லிம் பெண்களை மிகப் பயங்கரமாகப் பாதித்துள்ள 'கிறீஸ் பூதங்களை' இனங்காண முடியாத இயலாமை, பொலிஸ் தரப்பின் மிகப்பெரும் பின்னடைவாகக் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். அடுத்த கோணத்தில் நோக்கினால், அரசின் பக்கத்திடம் இதனைத் தடுப்பதில் அக்கறை அறவே இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றுள்ளது. அத்துடன் -

கிறீஸ் பூதங்களுக்கும் பாதுகாப்புத் தரப்புக்கும் தொடர்பு உண்டு என்ற கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தும் -

மர்மமனிதர் பிரச்சினை அரசின் உருவாக்கமே என்ற குற்றச்சாட்டும் -

இது இராணுவப் புலனாய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் திட்டமே என்ற எதிர்க்கட்சி உறுப்பினர் மங்கள சமரவீரவின் குற்றச்சாட்டும் -

தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி, மத்திய அரசை இலங்கை அரசுக்கு எதிராகத் திசை திருப்புவதாக இலங்கை அரசின் உயர்மட்டத்தினர் உள்ளம் குமுறுவதன் வெளிப்பாடும், வெப்பியாரமும் - ஒரு சேர நோக்கப்பட்டால் -

சட்டம் ஒழுங்கை ஓரங்கட்டிவிட்டு கிறீஸ் பூதம் மலையகத்திலும் கிழக்கிலும் தலைவிரித்தாடுவதன் உள்ளாந்தரம், இரகசிய ஊடுருவலின் (Insidious) என்பது வெள்ளையில் கறுப்புப் புள்ளி போலத் துலங்கும்.

# இலஞ்ச ஊழல் சட்டத்தில் திருத்தம் உடன் கொண்டுவரப்பட வேண்டும்

### வற்புறுத்துகிறார் முன்னாள் நீதியரசர்

கொழும்பு, ஓக.19

ஊழல் மற்றும் இலஞ்சத் துக்கு எதிரான சட்ட விதிகள் உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று முன்னாள் பிரதம நீதியரசரான சரத் என் சில்வா வலியுறுத்தியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஊழலுக்கெதிரான குரல் என்ற நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தின் ஆரம்ப நிகழ்வில் முன்னாள் பிரதமநீதியரசர் உரை நிகழ்த்தினார். அந்த சமயத்திலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார். முன்னால் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தமதுரையில் கூறியதாவது:-

கேள்வி அறிவித்தல் எதுவும் இன்றி அபிவிருத்திப் பணிகளை இந்த அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு மாறான செயலாகும் இதனால் எதிர்கால சந்ததியினரின் தலையில் கடன் சுமை சுமத்தப்படப் போகின்றது. இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற சமூகத்தை உருவாக்குவதற்கு ஐ.நா.வின் ஊழலுக்கு எதிரான ஒப்பந்தத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் இந்த ஒப்பந்தத்தில் இலங்கை 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரண்டாவது நாடாகும் இலங்கை. எனவே அதனை முனைப்பாக செயல்படுத்த வேண்டிய சர்வதேச கடப்பாடு நமக்கு இருக்கிறது.

தற்போது அமுலில் உள்ள ஊழல் லஞ்ச ஒழிப்புசட்டம் திருத்தப்பட வேண்டும். சந்தேகத்துக்குரிய சம்பவங்களை ஆராய்வதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

இப்போதைய நிலையில் முறைப்பாடு வந்தால் மட்டுமே ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவால் விசாரணை மேற்கொள்ள முடியும். இது சட்டத்தில் காணப்படும் ஒரு குறைபாடாகும். மேலும் ஒருவர் உண்மைக்கு மாறான முறைப்பாடு செய்கிறார் என்றால் அவருக்கு பத்து வருட கால தண்டணை விதிக்கப்பட முடியும். இவ்வாறான விதிகளின் காரணங்களால் முறைபாடுசெய்வதற்கு எவரும் தயக்கம் காட்டும் நிலை இருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா. (ப)

# தரமற்ற மருந்துகளை விநியோகித்த வெளிநாட்டு நிறுவனங்களிடம் நிதி அறவீடு

கொழும்பு, ஓக. 19

தரமற்ற மருந்து வகைகளை இலங்கைக்கு விநியோகித்துள்ள வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து 7 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை அறவிட்டுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்த நாட்டுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள மருந்துகள் தொடர்பான பரிசீலனை ஒன்றின் போது இந்த தரமற்ற மருந்துகள் சம்பந்தப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இந்தவிதம் தரமற்ற மருந்துகளை விநியோகித்துள்ள வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து இதுவரையில் மூன்று கோடி 23 லட்சம் ரூபாவை சுகாதார அமைச்சு அறவிட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகையையும் அறவிட்டுக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வெளிநாடுகளிலுள்ள மருந்து உற்பத்தி நிறு வனங்களிடமிருந்து 287 கோடி ரூபாவரையில் பெறுமதிகொண்ட மருந்து வகைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-22)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஞாயிற்றுக்கிழமை நாடு பூராகவும்

சுன்னாகம், ஓக. 19

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடு பூராகவும் இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 772 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை நிலையங்களை 33 நிலையங்கள் ஒருங்கிணைத்துச் செயற்படவுள்ளதுடன் 506 இணைப்பு நிலையங்களும் செயற்படவுள்ளன.

இந்த முறை 2 லட்சத்து 41 ஆயிரத்து 610 சிங்களமொழி மூல மாணவர்களும் 79 ஆயிரத்து 817 தமிழ்மொழிமூல மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-38-86)

## அறவழியில் பொருளும் இன்பமும்

பொருளுக்குத்தான் உலகில் அதிக மதிப்பு, இதைக்கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக்கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்டவேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக் கூடாது. பிறரை அழவைத்துச் சம்பாதித்தால், சம்பாதித்தவன் அழ அழ அவன் கையைவிட்டு அது போய்விடும். அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்க வேண்டும். ஒருவனுக்கு பணம் கொடுக் கிறோம். அதைப் பெற்றுக்கொண்டவன், ஒரு கத்தரிக்கோல் வாங்கி ஊரார் பையையெல்லாம் கத்தரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்ததும் வீணாகி விடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்க வேண்டும். இன்பம் கூட தாலி கட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்கவேண்டும். தவறான வழியில் வருகின்ற இன்பமாக இருக்கக் கூடாது.




நன்றி; ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தம் கைச்சாத்தாகாத நிலையில் 'காப்பெற்' வீதிக்கான ஆரப்பப் பணிகள்

## உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு இடம்பெற்றுள்ளன

யாழ்ப்பாணம், ஒக. 19

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளை 'காப்பெற்' வீதிகளாக்கும் திட்டம் கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி, உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி ஆரம்பிக்கப்படும் போது அந்தப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரருடன் முறைப்படி ஒப்பந்தங்கள் எதுவும் கைச்சாத்தாகவில்லை என்று மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.மாநகர சபையின் 35 கிலோ மீற்றர் நீளமான 42 வீதிகள் மாகாண அபிவிருத்தித் திணைக்களத்தின் திட்டச் செயற்பாட்டுப் பிரிவின் கண் காணிப்பின் கீழ் 710 மில்லியன் ரூபா செலவில் 'காப்பெற்' வீதிகளாக புனர்நிர்மாணம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னதாக அரசால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் மேற்படி 'காப்பெற்' வீதியாக்கும் வேலைத் திட்டம் கடந்த மாதம் 13 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, மாநகரசபை மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரால் கைலாச பிள்ளையார் கோயிலடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வேலைகள் ஆரம்பித்து ஒரு மாத காலத்துக்கு மேலாகியும், புனர்நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் போடப்பட்ட 100 மீற்றர் தூரமே 'காப்பெற்' வீதியாகியுள்ளது. ஏனைய இடங்களில் 'காப்பெற்' போடப்படவில்லை.

இது தொடர்பாக மாநகரசபையிடம் கேட்ட போது, வேலைகள் ஆரம்பிக்கப்படும் பொழுது ஒப்பந்தக்காரருக்கு உரிய முறையில் வேலைக்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை. ஆவணங்கள் பூர்த்தியாகாத நிலையிலேயே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் 'கெயர்' திட்டத்தால் குறித்த ஒப்பந்தகாரருக்கான அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இன்னும் இருவாரங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-15)

# நல்லூர் தெற்குவாயில் ராஜகோபுர கும்பாபிஷேகம் ஞாயிறன்று



யாழ்ப்பாணம், ஒக.19

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுரகலச கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக தென்னிந்திய சிற்பிகளால் இந்த இராஜகோபுரம் அமைக்கப்பட்டு வந்தது.

தற்போது பணிகள் நிறைவடைந்த நிலையில் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-7-86)

# உடுவிலில் சிற்றுண்டிச்சாலை சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டது

வலி.வடக்கு, ஒக. 19

சுகாதாரச் சீர்கேட்டுடன் உடுவில் பகுதியில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் சிற்றுண்டிச்சாலை ஒன்று சுகாதாரப் பரிசோதகர்கள் இனங்கண்டு எடுத்த நடவடிக்கை காரணமாக மூடப்பட்டது.

குறித்த சிற்றுண்டிச்சாலை சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குவதாகக் கூறிச் சீல்வைக்கப்பட்டுள்ளதுடன் மல்லாகம் நீதிமன்றில் வழக்குச் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் டெங்கு நோய் பரவும் அபாய நிலைமை காணப்படும் நிலையில் சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துவதில் கடுமையாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட கடை உரிமையாளருக்கு சுகாதார சீர்கேடுகள் சம்பந்தமாக ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதனைச் சீர் செய்யக் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. (ம-68)

# காதுகளுடன் பறிபோனது மூதாட்டியின் தோடுகள்

நவாலி, ஒக. 19

நவாலியில் தனித்திருந்த மூதாட்டி ஒருவரின் தோடுகள் இரு காதுகளுடன் பறிபோனது.

திருட்டுக் கும்பல் ஒன்று கூரிய கத்தியால் மூதாட்டியின் காதுகளை அறுத்துத் தோடுகளைக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நவாலி கிழக்கில் இடம்பெற்றுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.மணியளவில் இவர் தனது வீட்டில் இருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த மூதாட்டி வீட்டில் இருந்த போது அங்கு திடீரெனச் சென்றவர்கள் மூதாட்டியின் வாயில் துணியை அடைந்து விட்டுத் துணிகரச் செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ம-100)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு

நாவற்குழி, ஒக. 19

கெயார் சர்வதேச நிறுவனத்தால் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு ஒன்று அண்மையில் யாழ். ஞானம்ஸ் விடுதியில் இடம்பெற்றது.

இரண்டு நாள்கள் இடம் பெற்ற இந்தச் செயலமர்வில் 33 தொண்டர்கள் பங்கேற்றனர்.

கோப்பாய், சங்கானை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே இதில் கலந்துகொண்டனர்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான நிபுணர் ரி.வசந்தராஜன் இந்தச் செயலமர்வின் வளவாளராகக் கலந்துகொண்டார்.

கோப்பாய், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுகளின் சமூக சேவை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இயற்கை அனர்த்தம் தொடர்பாகக் கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களே இந்தச் செயலமர்வுகளில் பங்கேற்றனர். இவர்கள் தத்தமது கிராமங்களில் இயற்கை அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் பொதுமக்களுக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-121)

## சாதனையை நோக்கிய பயணம்...



விநாயகர் புராணம் நூல் வெளியிட்டு விழா அண்மையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் இடம்பெற்றது. ஈழத்துச் சிதம்பர பிரதம குரு சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்களிடம் நூலின் சிறப்புப் பிரதியை வர்த்தகர் எஸ்.ஈ.பரமேஸ்வரன் பெற்றுக்கொள்கிறார். (ம-250)

# நல்லைக்குமரன் மலர் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.19

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவால் நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் 19 வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாநகர ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கலந்துகொள்வர்.

இன்றைய நிகழ்வில் மலர் வெளியீட்டுடன் சிறந்த சமூக சேவையாளருக்கான யாழ். விருது யாழ். போதனா வைத்திய சாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரனுக்கு வழங்கப்படும்.

யாழ். மாநகர கலாசாரப்பிரிவால் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ம-7)

# சுதேச வைத்தியர்களுக்கு மூலிகைத் தோட்டச்சுற்றுலா

அச்சுவேலி, ஒக. 19

சுதேச வைத்தியர்களுக்கு நாடளாவிய ரீதியில் மூலிகைத் தோட்ட சுற்றுலா ஒன்றை நடத்துவதற்கு தேசிய சுதேச வைத்திய நிறுவகம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் தொடரவிருக்கும் சுற்றுலாவில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுதேச வைத்தியர்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம் அறிவித்துள்ளார்.

சுற்றுலாவில் நாடளாவிய ரீதியில் உள்ள சுதேச வைத்திய மூலிகைத் தோட்டங்கள், மூலிகைகளின் மருத்துவ குண இயல்புகள், பயன்பாட்டு விளக்கங்கள், நிபுணத்துவ ஆலோசனை, மூலிகைகளின் பயன்பாட்டு அளவுப்பரிமாணம் தொடர்பான குறிப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

சுற்றுலாவில் கலந்துகொள்வது சுதேச வைத்தியர்களின் வான்மை விருத்திக்கு உதவும். எனவே கலந்துகொள்ளும் சுதேச வைத்தியர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேசிய சுதேச வைத்திய நிறுவகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டு சுற்றுலாவில் கலந்துகொள்ளுமாறும் மேலதிக விவரங்களுக்கு வடக்கு மாகாணத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-11)

# நிதி மோசடி செய்தனராம் தாய், மகனுக்கு தடுப்புக் காவல்

வலி.வடக்கு, ஒக. 19

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறிப் பணம் பெற்ற தாய்க்கும் மகனுக்கும் இரு வாரகால தடுப்புக்காவல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி கே.கஜநிதிபாலன் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் தெல்லிப்பழை பொலிஸார் வழக்கு ஒன்று தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த எதிராளிகள் இருவரையும் இரு வாரகாலத்துக்கு தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது.

அத்துடன் பணம் கொடுத்துப் பிழையான நடவடிக்கையில் ஈடுபட்ட வழக்காளியும் எச்சரிக்கப்பட்டார். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுடன் நல்லுறவு பேணாத அதிகாரிகளுக்கு இடமாற்றம்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.19

பொதுமக்களுடன் நல்லுறவைப் பேணாத அரச அதிகாரிகள் மற்றும் ஒரே சேவை நிலையத்தில் 5 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அரச அதிகாரிகளுக்கு உரிய திணைக்களங்கள் ஊடாக விரைவில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

சில அரச அதிகாரிகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன. மக்களுடன் நல்லுறவைப் பேணாத அரச அதிகாரிகளுக்கு விரைவில் இடமாற்றம் வழங்கப்படும். மேலும் அரச சேவையில் தண்டனை பெற்றவர்களும் இந்த இடமாற்றத்துக்கு உட்படுவார்கள்.

அத்துடன் 5 வருடங்களுக்கு மேலாக ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றிய அரச அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை சகல அமைச்சுக்களும் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களை விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-15)

# கட்டுவனில் மீள்குடியமர்ந்த மக்கள் போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடி

மீள்குடியமர்ந்துள்ள கட்டுவன் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பகுதிக்கான போக்குவரத்து வசதிகள் உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையே இதற்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் தலைமையில் வட பகுதி மாதர் சங்கக் குழுவினர் கட்டுவன் மேற்குப் பகுதிக்குச் சென்று அந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த போது இந்தப் பிரச்சினை தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குடியமர்ந்துள்ள வீடுகளிலிருந்து 3 கிலோமீற்றர் நடந்து சென்ற பின்னரே தாம் பிரதான வீதியைச் சென்றடைய வேண்டிய நிலை உள்ளது.

பாடசாலை மாணவர்கள், தொழில்செய்யும் ஊழியர்கள் 3 கிலோ மீற்றர் நடந்து வந்தே பஸ் சேவையைப் பெற வேண்டிய நிலைமை உள்ளது. தமது அன்றாட வசதிகளையே நெடுந்தூரம் சென்று நிறைவேற்ற வேண்டியுள்ளதால் தாம் பெரும் சிரமங்களைஎதிர் கொள்ள வேண்டியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-311)

# வன்னியசிங்கத்துக்கு உருவச்சிலை நீர்வேலியில் அமைக்க ஏற்பாடு

அச்சுவேலி, ஓக.19

நீர்வேலியில் கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்துக்கு முழு உருவச் சிலை நிறுவப்படவுள்ளது. அமரரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு உருவச்சிலை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய் தொகுதிக் கிளை மேற்கொண்டு வருகின்றது.

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது, முழு உருவச் சிலையை நீர்வேலி வாழைக் குலைச் சங்கத்துக்கு அருகில் நிறுவுதல் தொடர்பான தீர்மானங்கள் கடந்த சனிக்கிழமை நீர்வேலி வாழைக் குலைச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மேற்படி கூட்டத்தில் நூற்றாண்டு விழாக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவர்: அ.க.த. கிருஷ்ணராசா (வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்), இணைப்பாளர் சி.இலட்சுமணன் மற்றும் க.தர்மலிங்கம் (வலி.கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்), அ.பரஞ்சோதி (யாழ். மாநகரசபை உறுப்பினர்) மற்றும் இ.கந்த சாமி, க.திரவியம், சி.திருநாவுக்கரசு ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு நிறைவு மலரும் வெளியிடப்படவுள்ளது. (ம-11)

## நினைவுகள்...



நிறைவுக்காக: வேலணைப் பிரதேச செயலகத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்த இலங்கை நிர்வாக சேவை பயிற்சியாளர்கள் 8 பேருக்கு ஒருமாதப் பயிற்சிகள் முடிவுற்றன. இதனையடுத்து இவர்களுக்கான விருந்துபசாரம் அண்மையில் இடம் பெற்றது. இதில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலனுடன் பயிற்சியாளர் மற்றும் கிராம உத்தியோ கத்தர்கள் கலந்து கொண்டனர். (ம-167)

# நெடுந்தீவு சங்கத்துக்கு புதிய லொறி வழங்கப்பட்டது



நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கையை அடுத்து மஹிந்த சிந்தனையின் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் புதிய பார ஊர்தி ஒன்று சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அத்தியாவசிய பாவனைப் பொருள்களை குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாகப் புதிய லொறி ஒன்றை வழங்குமாறு சங்கத்தின் இயக்குநர் சபை கோரி வந்ததையடுத்து 25லட்சம் ரூபா பெறுமதியான இந்த லொறி வழங்கப்பட்டுள்ளது. (ம-111)

# மூதாட்டியின் சங்கிலி அபகரிப்பு

பஸ்ஸில் இருந்து இறங்கி வீட்டுக்குச் சென்ற மூதாட்டியின் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது. அளவெட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் இந்தத் துணிகரமான திருட்டு இடம்பெற்றுள்ளது.

மூதாட்டியின் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓடிய போதி லும் சங்கிலியில் ஒரு பகுதி சட்டையுடன் குத்தப் பட்டு இருந்த ஊசியுடன் மாட்டப்பட்டு அறுந்த நிலையில் காணப்பட்டது. இது சம்பந்தமாக சங்கிலியை பறி கொடுத்தவர் தெல்லிப்பழைப்பொலிஸ் நிலை யத்தில் முறையிட்டுள்ளார். (ம-86)

# இளைஞர், யுவதிகளுக்கு சுய தொழில் கடன் உதவி

## 'நிஸ்கோ' வழங்கவுள்ளது

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தால் யாழ்ப்பாண இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை ஊக்கப்படுத்தும் நோக்குடன் சுயதொழில் கடன்கள் வழங்கப்படவுள்ளதாக 'நிஸ்கோ' பொது முகாமையாளர் வி.பி.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 'நிஸ்கோ' பிரிவால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கின்ற 14 வயது முதல் 30 வயது வரையான இளைஞர், யுவதிகளின் சுய தொழிலை ஊக்கப்படுத்தும் நோக்குடன் சுயதொழில் கடன் வழங்கவுள்ளது.

இந்தக் கடன்களைப் பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் தாமாகத் தயாரித்த விண்ணப்பத்தை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், தேசிய இளைஞர் சேவை மன்றம், மாவட்ட அலுவலகம், தேசிய வீடமைப்புத் திட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-15)

# பாரம்பரிய தமிழ்க் கலைகளை இளையோரிடையே புகுத்த ஏற்பாடு

## வலி.கிழக்கு பண்பாட்டுப் பேரவை நடவடிக்கை

அச்சுவேலி, ஓக.19

மறைந்துவரும் பாரம்பரிய தமிழ்க் கலை இலக்கிய வடிவங்களை மீட்டெடுத்து இளம் தலைமுறையினரை ஈடுபாடு கொள்ளச் செய்வது தொடர்பான வேலைத் திட்டத்தை வலி.கிழக்குப் பிரதேச செயலக பண்பாட்டுப் பேரவை முன்னெடுக்கவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேசத்துக்கே சிறப்பாக உரிய கலை வடிவங்கள் மற்றும் நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு, சிந்து நடைக் கூத்து உள்ளிட்ட பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் கதையாக்கம், சிறுகதை ஆக்கம், கைப்பணி அலங்காரப் பொருள் ஆக்கம் போன்றன தொடர்பான அரங்குகள் மாதத்தில் குறித்த தினங்களில் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

முதலில் தமிழில் சிறுகதை ஆக்கம் பயில் அரங்கு நடைபெறவுள்ளது. பயில் அரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்கள், மாணவர்கள் தமது பதிவுகளை கிராம அலுவலர் அலுவலகங்களிலும் சுயவிவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை பிரதேச செயலர், வலி. கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய் என்ற முகவரிக்கு 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-11)

# நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்துக்கு மஹிந்த சிந்தனையில் ரூ.20 லட்சம்

நெடுந்தீவு, ஓக.19

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளைச் சீராக மேற்கொள்வதற்கென மஹிந்த சிந்தனையின் கீழ் 20 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் போதிய நிதி வசதியின்றி எரிபொருள் விநியோகத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்து வந்துள்ளன.

தற்போது எரிபொருள் விநியோகத்தைச் சீர்செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட இந்த நிதியில் செயற்பாடுகளைச் சீராக மேற்கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென 10 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிதியைக் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தவிர வேறு எந்த விதமான செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தக் கூடாது என்று கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களின் திருக்காட்சிகள்





கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழாவில் சுவாமி தேரில் ஆரோகித்து வீதிவலம் வருகின்றார். தீர்த்தத் திருவிழாவான மறுநாள் தீர்த்தக்கேணியில் தீர்த்தம் இடம்பெறுகிறது.



புங்குடுதீவு திட்டியம்பதி காளிகாம்பாள் ஆலய தேர்த்திருவிழாவில் அம்பாள் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்குக் காட்சிய ளிக்கிறார். (வ)



மருதமடுத் திருவிழாவின் சிறப்பு நினைவுத் திருவிழா கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. செபமாலை அன்னையின் திருச்சொரூபம் 100 வருடங்கள்தொன்மை வாய்ந்த 'சரவலை' கூட்டில் பவனியாக எடுத்து வரப்படுகிறது. (135)

## மலேசியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழர் கட்டுநாயக்காவில் கைது

மலேசியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மேற்படி நபர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆள்கடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார் என்று கூறப்படுகிறது.

உகண்டா பாலா என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசு பாலச்சந்திரன் என்பவரே நாடு கடத்தப்பட்டவராவார்.

இவர் இலங்கையின் வடக்கு, கிழக்கில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு ஆள்களை கடத்தி வந்ததாக மலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாலச்சந்திரனின் முகவர்கள், வெள்ளவத்தை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் இயங்கி வந்தனர் என்று இலங்கைப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞன் காயம்

பனையில் ஓலை வெட்ட ஏறியவரின் கையைப் பனம் மட்டை பதம் பார்த்ததால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் உடுவில் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடுவில் அம்மன்கோயிலடியைச் சேர்ந்த சம்மிக்கேல் டஸ்மன் (வயது19) என்பவரே வலது கையின் மணிக்கட்டில் காயமடைந்துள்ளார். குறித்த நபர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (எ-36)

## போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கனடா 2.5 மில்லியன் நிதி உதவி

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கிலான தொழில்சார் உதவிகளை வழங்குவதற்கு கனேடிய அரசு முன்வந்துள்ளது.

மாவட்ட ரீதியாக முன்னெடுப்பட்டு வருகின்ற இந்தத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பிலான கண்காட்சிகள் மற்றும் பொது தெளிவூட்டல்கள் போன்ற நடவடிக்கைகளுக்கு கனடா ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக கனேடிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2.5 மில்லியன் ரூபா நிதியுதவியை கனடா வழங்கத் தீர்மானித்துள்ளது.

வடபகுதியின் யாழ் நகரிலும் கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இரு நகரங்களிலும் இது தொடர்பாக நடத்தப்படும் இரண்டு நாள் கண்காட்சிகளுக்கு இந்த நிதியுதவி பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் கண்காட்சியின் போது சுமார் 50 பேருக்கான தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்குகளையும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக கனேடிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தமிழக மீனவர் மீது மீண்டும் இலங்கை கடற்படை தாக்குதல்

கச்சதீவு கடல் பகுதிக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. ராமேஸ்வரம் துறையில் இருந்து 535 மீன்பிடிப் படகுகளில் சென்ற தமிழக மீனவர்கள், நேற்று முன்தினம் நள்ளிரவு கச்சதீவு கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கைக் கடற்படையின் வேகப் படகுகளில் அங்குவந்த இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் போட்டிருந்த வலைகளை அறுத்தும் மீன்களை கடலில் கொட்டியும் திரும்பச்செல்லுமாறும் மிரட்டியுள்ளனர் என்று நேற்று நண்பகல் கரைக்குத் திரும்பிய மீனவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதற்கிடையே, மன்னாருக்கு அருகில் தமிழக மீனவர் களின் படகுகள் மீது சிங்கள மீனவர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசியதாகவும் கூறப்படுகிறது.

எனினும் மீனவர்கள் மீது கடற்படையினர் எந்த வித தாக்குதலும் நடத்தவில்லை என்று கூறப்படுகிறது. கடந்த சில வாரங்களாகவே தொடர்ந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் இவ்வாறு மிரட்டி, துரத்தியடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### விற்பனைக்கு

நல்லூர், மருதடி வீதியில் உள்ள 64 ஆம் இலக்க வீடும் அதன் பக்கத்திலும், பின்னாலும் உள்ள வெற்றுக்காணிகளும் (மொத்த விஸ்தீரணம் 3¼ பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **0770739904.**

### கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்

வீடு கட்டுதல், மாடிவீடு, கட்டடங்கள் தரமான முறையில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-KASTURI CONSTRUCTION
077 6004454

### மரண அறிவித்தல்

#### சின்னப்பு சின்னத்துரை



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சின்னத்துரை 16.08.2011 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பையா, தம்பித்துரை, சுப்பிரமணியம், ஆசைப்பிள்ளை, வேவி, நல்லமுத்து, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வேந்திரம் (கனடா), சாந்தினி (ஜேர்மனி), பரஞ்சோதி (கனடா), உதய குமார் (சுவிஸ்), சிறிக்குமார் (சுவிஸ்), சுதர் சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உஷா, இந்திர குமார், மாலினி, சுமதி, கேதினி, சக்திதரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2011) வெள்ளிக்கிழமை மு.ப 10மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (7027)

தகவல்:
குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
03.10.1923



உதிர்வு
20.07.2011

அமரர்
தம்பு இராசையா
(கார் உரிமையாளர்-EY 1093)

அன்பாலே எமை அரவணைத்து
பண்பாக வாழ
வழி செய்த அப்பாவே!
தினமும் உங்கள்
முகம் காணாது - இங்கு
தவிக்கும் எங்களைப் பிரிந்து
விண்ணுலகம் சென்றாலும் எம்
இதயத்தில் என்றும் இருப்பீர்கள்
ஓர் தெய்வமாக !

இன்று (19.08.2011) வெள்ளிக்கிழமை 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (சி/3060)

குடும்பத்தினர்-
மகன்மார் - சிறி,
அப்பு- (சுவிஸ்)

### உடனடி வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- நில அளவையாளர் (Surveyor)- அளவையியல் பட்டதாரி அல்லது அதற்கு சமனான தகைமையுடன் Total Station போன்ற அளவையியல் உபகரணங்கள் கையாள்கையில் அனுபவம் உள்ளவர்கள்.
- மூலப்பொருள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு தொழில்நுட்பவியலாளர் (Material and Quality Control Technician): தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (NDT), அல்லது தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) உள்ளவர்கள்.

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களுடன் கீழ்வரும் முகவரியிலுள்ள எமது காரியாலத்துக்கு 24.08.2011 ஆம் திகதிக்கு முன்பதாக நேரில் சமுகமளிக்கவும்.

தாபனப்பிரிவு, யூரோவில்,
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷயம் கேட்டீர்களா?

## புலமைப் பரிசில் பரீட்சை மாணவரின் வாக்குமூலத்தைக் கேளுங்களேன்...!

அன்பார்ந்த பெற்றோர்களே! ஆசிரியர்களே! புலமைப் பரிசில் வித்தகர்கள் எனச் சொல்லிக் கொள்வோரே! வங்கி அதிகாரிகளே! பத்திரிகை ஆசிரியர்களே! சமூகத்தில் உள்ள அமைப்புக்களின் பிரதானிகளே! உங்கள் அனைவரையும் வணங்கி எமது வாக்கு மூலத்தை அளிக்கிறோம்.

எங்களுக்காக என்று கூறிக் கொண்டு நீங்கள் விழித்த விழிப்பும், கொண்ட கரிசனையும், செய்த வேலைகளும் கொஞ்சநஞ்சமல்ல. சொல்லாமற் செய்வர் பெரியர் என்ற முதுமொழிக்கமைய தலையாய பிரச்சினைகளையெல்லாம் விடுத்து, நீங்கள் எங்களைத் தலையாய்க் கொண்டீர்கள். நாளைமறுதினம் நடக்கப் போகும் புலமைப் பரிசில் பரீட்சையுடன் உங்களின் தவம், விரதம் எல்லாம் முடிந்துவிடும். அடுத்த வருடத்தை எதிர்நோக்க ஆயத்தமாகி விடுவீர்கள்.

எங்களுக்காக என்று நீங்கள் கூறிக் கொண்டாலும் உங்களுக்காகவே நாங்கள் எம்மை அர்ப்பணித்தோம் என்பதை நீங்கள் அறிவீர்களா? பெற்றோரது புகழுக்கும், பாடசாலைகளின் இருப்புக்கும், ஆசிரியர்களது பெயர் புகழுக்கும், தனியார் கல்வி வியாபாரிகளின் தேட்டத்துக்கும், வெளிநிறுவனங்களது பிரசித்தப்படுத்தலுக்கும், விளம்பரத்துக்கும் நாங்கள் பலிக்கடா ஆக்கப்பட்டதை யாரிடம் முறையிடலாம்? சிறுவர் கேடுறுத்தல் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் கூட எமது நிலையை அலசுவதில்லையே! பந்தயக் களத்தில் இறக்கப்பட்ட குதிரைகளாகவே நாம் ஆக்கப்பட்டோம் என்பதை எவர் உணர்வார்?

பரீட்சையில் சித்தியடைந்தாலும் சித்தியடையா விட்டாலும் நாம் வெறும் களிமண்தான். எம்மிடம் எந்த ஆற்றல்களும் இல்லை. அறிகைத் திறன்களும் இல்லை. இவர்கள் அனைவரும் இணைந்தே எம்மை வனைகின்றனர். பெறுபேறு வந்து சித்தியடைந்துவிட்டாலோ ஒவ்வொருவரும் தாமே எம்மை வனைந்து பொம்மைகள் செய்தோம் என உரிமை கோரி மார்தட்டுகின்றனர். தாமே பரீட்சை எழுதியது போல் சொல்லுகின்றனர். எம்மை ஏற்றிச் செல்லும் பஸ்வண்டி நடத்துனர் கூட தனது பஸ்ஸில் சென்றதால்தான் நாம் சித்தியடைந்ததாக விளம்புகிறான். தோற்றாலோ எதற்கும் லாயக்கில்லாதவர்களாக, சமூகத்துக்கு உதவாதவர்களாக, குற்றவாளிகளாக நோக்குகின்றனர். களிமண்ணாகவே சித்திரித்து தமது பொறுப்புக்களினின்றும் விலகிக் கொள்கின்றனர்.

மூன்றாம் வகுப்பிலிருந்து மூன்றாண்டுகள் தனிமைச் சிறையில்,வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட நாம் நாளை மறுதினமாவது விடுதலையாகப் போகிறோமே என்பதில் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஊர்ச் சிறுவரெல்லாம் கிட்டியடித்தும், கிளித்தட்டு மறித்தும், பட்டமேற்றியும் விளையாடும்போது எமக்கு விளையாடுவதற்கான உரிமை மறுக்கப்பட்டது. படத்துக்கும், களிக்கை நிகழ்ச்சிகளுக்கும், சுற்றுலாவுக்கும், திருவிழாக்களுக்கும் நாம் அனுமதிக்கப்படவில்லை. ஓம் என்ற மந்திரத்துக்குப் பதிலாக படி என்ற மந்திரமே தினசரி எங்கள் வீடுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அது நாரசமாய் ஒலித்து படிப்பின் மீதே எமக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. நாங்கள் இந்த மூன்று வருடங்களில் இழந்தவை ஒன்றல்ல.. இரண்டல்ல.. அனேகம்.

அன்பானவர்களே! உங்களிடம் மன்றாட்டமாகக் கேட்கின்றோம். எங்களையும் வண்ணத்துப் பூச்சிகள் போலச் சுதந்திரமாகச் சிறகடிக்க அனுமதியுங்கள். எங்களின் பேரால் யாரும் குளிர் காயாதீர்கள். எங்களைச் சித்திரவதை செய்து நித்தநித்தம் கொல்லாதீர்கள். பிள்ளை நேயக் கல்வி என்று சொல்லிக் கொண்டு, செய்வது வேறாக கல்வியின் மீது வெறுப்படைய வைக் காதீர்கள். நாம் உங்களிடம் வேறொன்றையும் கேட்க வில்லை. உங்களின் சிறார் பருவத்தில் எப்படி வாழ்ந் தீர்களோ அந்த வாழ்வை எமக்கும் தாருங்கள். அதைத் தான் நாம் உங்களிடம் மன்றாட்டமாகக் கேட்கிறோம். எமது அடுத்த வருடப் பிள்ளைகளுக்காக இதையாவது செய்யுங்கள். உங்களுக்கு கோடி நமஸ்காரங்கள்!

விழிச்சான் குஞ்சு.

# இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து உதவும்

## தூதர் அசோக் கே காந்தா கூறுகிறார்

கொழும்பு, ஓக.19

இலங்கை அரசுக்கும், மக்களுக்கும் இந்தியா தொடர்ந்தும் உதவி வழங்க காத்திருக்கின்றது என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே. காந்தா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை நட்புறவின் கீழ் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலும் மற்றும் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலான ரயில் பாதையை நவீன தொழில்நுட்பத்துடன் அமைப்பதற்கான ஒப்பந்தம் ரயில்வேத் திணைக்களத்திற்கும், இந்திய ஏர்கோன் நிறுவனத்திற்குமிடையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவர் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்தமுறை இந்தியாவிற்குச் சென்றபோது இந்திய அரசு இலங்கையின் ரயில்பாதை புனரமைப்பிற்காக 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியளிப்பதாக உறுதியளித்திருந்தது. அதற்கேற்ப மூன்று ஒப்பந்தங்கள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுவிட்டன. மதவாச்சியில் இருந்து மடு வரையிலான ஒன்றும் ஓமந்தையில் இருந்து பளை வரையிலான ஒன்றும் மடுவிலிருந்து தலைமன்னார் வரையிலான ஒன்றும் அவை மூன்றுமாகும் -என்றார்.

இரண்டு வருடத்திற்குள் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ரயில்சேவையை வடமாகாணத்திற்கு வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.



இந்தோனேஷியாவின் 66ஆவது சுதந்திரதினம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்தோனேஷிய தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தோனேஷிய தூதர் ஜாபர் ஹுஸைன் தேசியக் கொடியை ஏற்றுகின்றார்.

# கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் காயம்

கொழும்பு, ஓக.19

வண்ணாத்திவில்லு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய எழுவன்குளம் தவஸமடு பகுதியில் நேற்றுமுன்தினம் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இனம் தெரியாதவர்களால் கட்டப்பட்ட கட்டுத்துப்பாக்கி வெடித்ததாலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. காயமடைந்தவர் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (ச)

# கப்பம் கேட்டவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக.19

தொலைபேசி மூலம் அச்சுறுத்தி புறக்கோட்டை வர்த்தகர்களிடம் கப்பம் கோரியவர் என சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர் புறக்கோட்டை இரண்டாம் குறுக்கு வீதியில் உள்ள வர்த்தகரை தொலைபேசியில் அச்சுறுத்தி, தனது வங்கிக்கணக்கில் பணத்தை வைப்பிலிடுமாறு கூறியுள்ளார் என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச)

# சிமெந்து மாதிரிகள் ஆய்வுக்கு

கொழும்பு, ஓக.19

சீமெந்தின் தரம் குறித்து பரிசோதிப்பதற்காக நாட்டிலுள்ள அனைத்து சீமெந்துகளின் மாதிரிகளையும் சேகரித்து வெளிநாட்டு ஆய்வுகூடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார். (ச)

# புதிய வீடமைப்புத் திட்டம் வடக்கில் மிக விரைவில்

கொழும்பு,ஓக.19

வடக்கில் மீள்குடியேற்றப்படும் இடம்பெயர்ந்தவர்களுக்கான புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சும் மீள்குடியேற்ற அமைச்சும் ஒருங்கிணைந்து இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளன. இதற்கான உடன் படிக்கையில் இரண்டு அமைச்சக்களும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைச்சாத்திட்டன.

மஹிந்த சிந்தனையில் உள்ள பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் ஜனசெவன திட்டத்துக்குப் புறம்பாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் இவ்வருட இறுதிக்குள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் 200 வீடுகள் வீதம் அமைக்கப்படவுள்ளன.

ஒரு வீட்டை அமைப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இரண்டு லட்ச ரூபாவை கடனுதவியாகவும், மீள்குடி யேற்ற அமைச்சு ஒரு லட்ச ரூபாவை நிதியுதவியாகவும் ஒதுக்குகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இலங்கையில் ரஷ்ய நிறுவனம் எண்ணெய் அகழ்வுக்கு முதலீடு

கொழும்பு, ஓக.19

ரஷ்யாவின் எரிவாயு உற்பத்தி நிறுவனமான 'காஸ்புரோம்' நிறுவனம் இலங்கையில் இடம்பெறவுள்ள எண்ணெய் அகழ்வுக்கு முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் குழுவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை வந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்து முதலீடு தொடர்பாகக் கலந்து ஆலோசித்துள்ளது.

எண்ணெய் அகழ்வுப் பணியில் முதலீடு செய்வதற்கு முன்வந்தமைக்காக 'காஸ்புரோம்' நிறுவனத்துக்கு நன்றி கூறிய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கையில் சமாதானம் ஏற்பட்டதும் முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலா போன்றவற்றின் அதிகரிப்பை இலங்கை வேண்டி நிற்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் மிகப்பெரிய எரிவாயு நிறுவனமான 'காஸ்புரோம்' வருடந்தோறும் 60 கோடி கன அடி எரிவாயுவை உற்பத்தி செய்கின்றது. இது மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எரிவாயுவை ஏற்றுமதி செய்கின்றது.

இந்தக் கலந்துரையாடலில் பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வெளிவிவகார மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்முகத் தேர்வும் பரீட்சைகளும் ஒரே திகதிகளில் செய்வதறியாது கல்விச் சமூகத்தினர் குழப்பத்தில்

கிளிநொச்சி, ஓக.19

தேசிய கல்வி நிறுவனத்தின் நேர்முகத் தேர்வும், அரச பரீட்சைகளும் ஒரே திகதிகளில் நடைபெற இருப்பதால் ஆசிரியர்களும், கல்விசார் உத்தியோகத்தர்களும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

தேசிய கல்வி நிறுவனத்தால் ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் அலுவலர்களைக் கல்வி மாணிப் பட்ட நெறிக்குத் தேர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தத் திகதிகளில் இந்த நேர்முகத் தேர்வுக் குத் தோற்றாதவர்களுக்குப் பிறிதொரு தினத்தில் இது நடைபெறாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த இரு திகதிகளிலும் க.பொ.த உயர்தரப் பரீட்சையும், தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகளுக்கு ஆசிரியர்களும் ஏனைய கல்விசார் உத்தியோகத்தர்களும் மேற்பார்வை பணி களில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையில் என்ன செய்வதென்று புரியாது இவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

மேலும் 20 ஆம் திகதி உயர்தரப்பரீட்சைக்கான பொது ஆங்கிலப் பாடம் நடைபெறவுள்ளது. இதில் சகல மாணவர்களும் கலந்து கொள்ளவிருப்பதால் மேற்பார்வைப் பணிகளிலும் அநேகமானோர் ஈடு பட வேண்டிய கட்டாயமுள்ளது. இதைப் போன்றே தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையும் உள்ளது.

பரீட்சைத் திணைக்களமும் தேசிய கல்வி நிறு வனமும் புரிந்துணர்வின்றிச் செயற்படுவதால் தாங்கள் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-405)

# மல்லாவியில் கொட்டிய பெருமழையால் மக்களுக்கும் பயிர்களுக்கும் பாதிப்புக்கள்



மல்லாவி,ஓக.19

கடந்த 14 ஆம் திகதி மல் லாவியில் பலத்த காற்றுடன் சேர்ந்துபெய்த கடும்மழை காரணமாகப் பலவிதத்திலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மக்கள் இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் ஆனபோதிலும் இதுவரை முழுமையான வீட் டுத் திட்டங்கள் வழங்கப்பட வில்லை. தற்காலிக வீடு களில் வசிக்கும் மக்கள் காற் றுடன் கூடிய பெருமழை காரணமாகப் பெரும் அவலங் களுக்கு ஆளாகினர். தற்கா லிக வீடுகளின் கூரைகளாக வுள்ள தகரங்களும், கிடுகு களும் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டன. இதனால் மக்கள் மழையில் நனைந்த வாறு பெரும் இன்னல்களுக்கு மத்தியில் இருப்பதைக் காண முடிந்தது. மேலும் மரங்கள் வீதிகளுக்குக் குறுக்கே வீழ்ந்து கிடந்தன.

அத்துடன் எதிர்பாராத மழையினால் நெற்பயிர் களுக்கும் பாதிப்பு ஏற்பட் டுள்ளது. முற்றிய நெற்கதிர் கள் நிலத்தில் சாய்ந்து வெள் ளத்தில் மூழ்கியிருந்தன. வாழைமரங்களும் முறிந்து வீழ்ந்துவிவசாயிகளுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தி யுள்ளன. ''பனையால் வீழ்ந்த வனை மாடேறி மிதிப்பது'' போல மென் மேலும் துன்பங் கள் இந்த மக்களின் வாழ் வைச் சீரழித்து வருவதாக இங்குள்ள பலரும் பேசிக் கொள்கின்றனர்.

மழையுடன் சேர்ந்து பனிக் கட்டிகளும் பல்வேறு பகுதி களிலும் வீழந்ததாகக் கூறப் படுகின்றது. (க-425)

# கடும் காற்றால் சேதங்கள்

கிளிநொச்சி,ஓக.19

கடந்த 14 ஆம் திகதி ஞாயிற் றுக் கிழமை கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலர் பிரி வில் வீசிய கடுங்காற்றால் தொண்டமான் நகரில் எட்டு வீடுகளினதும் மூன்று கடை களினதும் கூரைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

சமூக சேவைகள் அதிகாரி ப.சிவகரன் நேரில் சென்று இந்தச் சேதங்களைப் பார்வை யிட்டுப் பிரதேச செயலருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட வீடுகளில் இருந்தோர் தற்போது உற வினர், நண்பர்களின் வீடு களில் தற்காலிகமாகத் தங் கியுள்ளனர். (க-121)

## சாதனையை நோக்கிய பயணம்...




மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்திருந்த நோன்பு திறப்பதற்கான இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. இதன்போது மன்னார் பொது வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம் அசாத் உரையாற்றுகிறார். (601)

# கிளிநொச்சியில் வீதிப் புனரமைப்பு

கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி பழைய வைத்தியசாலை - மயானவீதி புனர மைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்ட கிராமிய வீதிகள் புனரமைப்புத் திட்டத் தின் மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் சீமெந்தினால் ஆன கலவை மூலம் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதிக்கான புனரமைப்பு வேலைகளைக் கடந்த மாதம் 12 ஆம் திகதி ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப் பினருமான நாமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தமையும் குறிப்பிடத்தக் கது. (க-426)

# பரீட்சை நிலையத்தில் மாற்றம் ஏதுமில்லை

கிளிநொச்சி, ஓக. 19

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற விருக்கும் தரம் 5 இற்கான புல மைப் பரிசில் பரீட்சை மாற்ற மெது வுமின்றி பளை மத்திய கல்லூரி யில் நடைபெறுமென கிளி நொச்சி வலயக்கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.

பளை மத்திய கல்லூரி, மாசார் அ.த.க பாடசாலை, பளை றோ.க. த.க பாடசாலை, சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை, சோரன் பற்று கணேசா, தர்மக்கேணி அ.த.க.பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பரீட்சை நிலையத்தில் பரீட்சை யெழுதவுள்ளனர். (க-405)

# விரைவில் மீளவும் இயங்கவுள்ளது முல்லைத்தீவு இ.போ.ச. சாலை

## வடபிராந்திய முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 19

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு மாவட் டச் சாலை மிக விரைவில் மீள வும் இயங்கவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் இடம் பெற்று வருகின்றன என்றார் சபையின் வடபிராந்திய முகாமை யாளர் கே.கேதீசன்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை யின் தலைவர் பந்துசேன சில தினங்களுக்கு முன்னர் சாலை வளாகத்துக்கு நேரில் வருகை தந்து தற்போதைய நிலைமைகளை அவதானித்துச் சென்றுள்ளார் எனவும் முகாமை யாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முல்லைத்தீவுச் சாலை மிக விரைவில் மீளவும் இயங்க வுள்ளது. முல்லைத்தீவு மாவட் டச் செயலகத்துக்குச் சமீபமாக உள்ள 10 ஏக்கர் காணியில் இந் தச் சாலை மீளவும் இயங்க வுள்ளது.

ஆரம்பத்தில் ஐந்து பேருந் துகளைப் பயன்படுத்தி உள் ளூர்ப் பகுதிகளில் சேவைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள் ளோம். அதன் பின்னர் முல் லைத்தீவுச் சாலையிலிருந்து ஏனைய மாவட்டங்களுக்குப் பேருந்துச் சேவை இடம்பெறும்.

சபையின் தலைவர் பந்து சேனாவின் வேண்டுகோளின் பேரில் வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதுயுதீனால் இந்தச் சாலை சம்பிரதாய பூர்வ மாக ஆரம்பித்து வைக்கப்பட் வுள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

# மன்னாரில் பூங்கா அமைப்பதற்கான முயற்சிகள் தடைப்படும் நிலையில்

## நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 19

மன்னார் பிரதான பாலத் துக்கு அருகில் உள்ள வெற்றுக் காணியில் பொழுது போக்குப் பூங்கா அமைப்பதற்கு மன்னார் நகரசபையினால் மேற்கொள்ளப் பட்டு வந்த முயற்சிகள் தற் போது தடைப்படும் நிலையில் காணப்படுவதாக மன்னார் நகரசபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில்:

மன்னார் பிரதான பாலத் துக்கு அருகில் வெற்றுக்காணி ஒன்று உள்ளது. குறித்த இடம் கடல் சார்ந்த பகுதியாகக் காணப் படுவதினால் குறித்த இடத் [illegible] பொழுது போக்குவதற்காக [illegible] கான மக்கள் வந்து செல்கின்றனர்.

எனினும் வந்து செல்கின்ற மக்கள் அங்கு நின்று பொழுதைக் கழிப்பதற்கு ஏற்ற வகையில் எவ்விதமான கட்டடங்களும் இல்லை. இந்த நிலையில் வரும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு மன்னார் நகரசபை யின் ஏற்பாட்டில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த பொழுது போக்கு பூங்கா அமைப்பதற் கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது.

இந்த நிலையில் முதற்கட்ட மாக இராணுவக் கட்டளையி டும் அதிகாரியின் தலைமை யில் வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை குறித்த பகுதியில் வன ஜீவராசிகள் சரணாலயத்துக்கு ஒதுக்கப்பட்ட இடம் என்றும், இதில் கட்டடம் மற்றும் வேறு எந்தவேலைத் திட்டங்களும் செய்யமுடியாதுஎனதிடீரென விளம் பரப்பலகைமுளைத்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகரசபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் நேரில் சென்று பார்த்துள்ளனர். பின்னர் இந்தப் பிரச்சினை தொடர்பாக மன்னார் நகரசபைத் தலைவர், உப தலை வர் மற்றும் உறுப்பினர்கள் ஆகி யோர் ஒன்றிணைந்து மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேத நாயகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் போது சம்பந்தப்பட்ட அதிகாரி களின் கவனத்துக்கு கொண்டு சென்று சாதகமான பதிலை பெற்றுத்தருவதாக அரச அதிபர் உறுதி அளித்துள்ளதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் ஆர். குமரேஸ் தெரிவித்தார்.(எ-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லைகளையும் மர்ம மனிதர்களின் களவுகளையும் தடுத்து நிறுத்துங்கள்

## சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதிக்கு பகிரங்கக் கடிதம்

மன்னார், ஓக.19

வடக்கு-கிழக்கு உள்ளிட்ட ஏனைய இடங்களில் நடைபெற்றுவரும் களவுகளையும் கிறீஸ் மனிதர்களின் நடமாட்டத்தையும் உடனடியாகத் தடுத்து நிறுத்தி மக்கள் பதற்றமற்று நிம்மதியாக வாழவழியேற்படுத்துங்கள் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குப் பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு-கிழக்கில் கடந்த சில நாள்களாக நடைபெற்றுவரும் கொள்ளைககளினாலும் கிறீஸ்பூசிய மனிதர்களின் நடமாட்டத்தினாலும் மக்கள் மிகவும் பதற்றமடைந்துள்ளனர். அவர்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்படைந்துள்ளது. தனியாக இருக்கும் பெண்களும் வயது வந்தோர்களும் இளம் பெண்களும் மிகவும் அச்சவுணர்வுடன் உள்ளனர்.

ஆகவே தாங்கள் இந்த விடயத்தில் உடனடியாக உரிய நடவடிக்கையை எடுத்து குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை சட்டத்தின்முன்நிறுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கையை உத்தரவாதப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

உதாரணத்துக்கு சில சம்பவங்களைச் சுட்டிக்காட்டுவது இங்கு பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஓமந்தையைச் சொந்த இடமாகவும் வவுனியா கரப்பன்காட்டை வதிவிடமாகவும் கொண்ட 75வயது மூதாட்டி அன்னபூரணம் என்பவர் தனது பேர்த்தியாருடன் தனியாக வசித்து வருகிறார்.

நேற்று விடியற்காலை 1 மணியளவில் இவரது வீட்டினுள் புகுந்த மர்ம மனிதர்கள் இவரைக் கடுமையாகத் தாக்கி இடது காதை அறுத்துள்ளதுடன் வலது கையிலும் எலும்புமுறிவை ஏற்படுத்தியுள்ளனர். வயது முதிர்ச்சியுடன் மனஅழற்சியும் சேர்ந்துள்ளதால் மூதாட்டி மிகவும் வேதனையடைந்து மனச் சோர்வுடனும் வாழ்க்கையில் பிடிப்பின்றியும் அச்சவுணர்வுடனும் காணப்படுகின்றார்.

பம்பைமடுவைச் சேர்ந்த கதிர்காமு துரைராசா என்னும் 56 வயதுடைய நபர் கடந்த 15 ஆம் திகதி இரவு ஒரு மணிக்கு மர்ம மனிதர்களால் தாக்கப்பட்டுள்ளார். இரண்டு மர்ம மனிதர்கள் இவரது வீட்டுக்குள் புகுந்து இவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளதுடன் இவரது கழுத்தை வெட்ட முற்பட்ட போது கையால் தடுத்ததால் கையில் பலத்த வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வவுனியா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனைப் போன்றே வவுனியாவின் ஏனைய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தின் பல இடங்களிலும் மர்மமனிதர்களின் தொல்லையால் மக்கள் கதிகலங்கிப்போயுள்ளனர். இதனால் பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதுடன் தினக் கூலிக்குச் செல்லும் நபர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

பெண்கள் பகலில்கூட வீடுகளில் தனியாக இருப்பதற்கு அச்சப்படுகின்றனர். தங்களின் வீடுகள் கூட பாதுகாப்பற்றதாக மக்கள் எண்ணுகின்றனர். மலையகம் மற்றும் கிழக்கில் ஆரம்பித்த மர்ம மனிதர்களின் நடமாட்டம் இப்பொழுது வன்னியிலும் பரவிவிட்டது மிகுந்த வேதனை அளிப்பதாகவுள்ளது.

ஆகவே தாங்கள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு மக்கள் பாதுகாப்புடன் நிம்மதியாக வாழ்வதை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-601)

## ஆமை வேகத்தில் வீதி வேலைகள்

மன்னார், ஓக.19

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் பல குறைபாடுகள் காணப்படுவதால் போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். திருக்கேதீஸ்வரம் - மாந்தை வீதியூடாக விடத்தல் தீவுக்குச் செல்லும் பிரதான வீதியில் நீண்டகாலமாகத் திருத்தப்பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற போதும் இதுவரை முடிவடையவில்லை. ஆமை வேகத்தில் இந்த வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருவதால் குறித்த வீதியூடாக போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டு வருவதோடு மக்கள் சிரமங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் கொங்கிறீட் பாதைகள் அமைக்கப்பட்டுள்ள போதும் வீதிக்கு இரு மருங்கிலும் உள்ள பெரிய காட்டுமரங்கள் எதிரே வருபவர்களை மறைக்கும் அளவுக்குக் காணப்படுவதனால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.(க-601)

## திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் விழிப்புக் குழுவிடம் வகையாக மாட்டினார்

மன்னார், ஓக.19

மன்னார் மூர்வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை வீடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றச்சாட்டப்படும் இளைஞர் ஒருவரை மூர்வீதியில் உள்ள இளைஞர் விழிப்புக் குழுவினர் பிடித்து மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை வீட்டுக்குள் சென்ற இளைஞர் ஒருவர் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த மின்சாதனப் பொருள்கள் சிலவற்றைத் திருடிக் கொண்டு சென்றுவிட்டார்.

இது சம்பந்தமாக வீட்டு உரிமையாளரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் மூர்வீதி காட்டுப்பள்ளிவாசல் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியினுள் மர்ம நபர்கள் நடமாடித் திரிவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து மன்னார் மூர்வீதி மற்று உப்புக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்று குறித்த காட்டுப் பகுதிக்குள் கடந்த திங்கட்கிழமை மாலை தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர்.

இவர்களுக்கு பாதுகாப்பாக இராணுவத்தினர் காட்டுக்குள் சென்றனர். இந்த நிலையில் குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் நபரை குறித்த இளைஞர் குழு மடக்கி பிடித்து இராணுவத்தினூடாக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மன்னார் பொலிஸார் குறித்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-601)

## சாதனையை நோக்கிய பயணம்...




வாடிக்கையாளர் உரை: இலங்கை வங்கியின் 72 ஆவது ஆண்டு நிகழ்வு கிளிநொச்சிக் கிளையில் இடம்பெற்ற போது வங்கி வாடிக்கையாளர் ஒருவர் உரையாற்றுகையில் அருகில் வங்கிக் கிளையின் உத்தியோகத்தர்களும் வாடிக்கையாளர்களும் காணப்படுகின்றனர். (207)

## கிளிநொச்சியில் மையான வீதி புனரமைப்பு

கிளிநொச்சி, ஓக.18

கிளிநொச்சி பழைய வைத்தியசாலை - மயானவீதி புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளி நொச்சி மாவட்ட கிராமிய வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் மூலம் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் சீமெந்தினால் ஆன கலவை மூலம் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதிக்கான புனரமைப்பு வேலைகளைக் கடந்த மாதம் 12 ஆம் திகதி ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-42)

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் விருது பெற்றோர்

**வினாடி வினாப் போட்டி**

க.சிவலக்ஷன்(முருகானந்த ம.வி) மாகாணம்-1, த.கீதன் (முருகானந்த ம.வி) மாகாணம்-1, யோ.ஜீவமலர் (முருகானந்த ம.வி) மாகாணம்- 1, தி.தெய்வ கௌரி (முருகானந்த ம.வி) மாகாணம் -1, சி.தீபா (தர்மபுரம் ம.வி.) மாகாணம் -2,

**கோலம் போடுதல் 2011**

யோ.சிந்துஜா (தருமபுரம் இல1 அ.த.க.பா) மாகாணம் 2,

**சிறுவர் நாடகம் - 2011**

பா.விவேகா (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, வ.நிலவழகி (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் - 3, ரு.கம்சியா (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் - 3, ஜெ.பவித்திரா (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம்- 3, மு.தண்ணிலா (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, க.நிரோசா (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3,த.வினோஜா (தருமபுரம் இல.1 அ.த.க.பா)மாகாணம் 3,வி.மேகலா (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, அ.கிருஜன் (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, த.தயந்தன்(தருமபுரம் இல.1 அ.த.க.பா)மாகாணம் 3, த.அனுபரன்(தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, வி.கிருபாகரன் (தருமபுரம் இல.1 அ.த.க.பா)மாகாணம் '3, வி.கலையரசன் (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, அ.அபிஷன் (தருமபுரம் இல.1 அ.த.க.பா) மாகாணம் 3, டே.றொஷான் (தருமபுரம் இல1 அ.த.க.பா) மாகாணம் 3, பு.சுதர்சிகா (தருமபுரம் இல1 அ.த.க.பா) மாகாணம்3.

**மெய்வல்லுநர் போட்டி**

800மீற்றர் 17 வயது ஆண், 2011

பெ.தியாகரன் (பிரமந்தனாறு ம.வி) மாகாணம் 2,

**ஈட்டியெறிதல் 15 வயது பெண், 2011**

பா.நிசாந்தினி (பிரமந்தனாறு ம.வி) மாகாணம் 2,

**ஈட்டியெறிதல் 21 வயதுபெண்**

வி.கிறிஸ்ரினா (பிரமந்தனாறு ம.வி)மாகாணம் 3,

**தட்டெறிதல் 15 வயது பெண்**

இ.கயல்விழி (பிரமந்தனாறு ம.வி), மாகாணம் 3.

**பாவோதல் பிரிவு 3, 2010**

சி.டண்சினி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 3,

நாட்டார் பாடல் திறந்த போட்டி,2010

இ.கீர்த்தனா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி)மாகாணம் 2,

நாட்டுக் கூத்து சிந்து நடை, 2011

இ.கீர்த்தனா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி)மாகாணம் 2

நாட்டார் பாடல் திறந்த போட்டி 2010

கு.கிறிஸ்ரி திவ்வியா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, பி.கர்ஜிகா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, வே.கார்த்திகா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, ப.கௌரிகா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)மாகாணம் 2, தே.ரிசிகாந் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) மாகாணம் 2.

**தமிழியற் கட்டுரைவரைதல் இலக்கியம் நயத்தல் பிரிவு - 5, 2011**

ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி)மாகாணம் 3.

நாட்டுக் கூத்து சிந்து நடை, 2011

செ.லிமாயினி(கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, மு.சர்மினி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) மாகாணம் 2, சி.சிவகுமாரி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, ச.வசந்தகுமாரி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, ந.சர்மிளா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) மாகாணம் 2, இ.நாகப்பிரியா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) மாகாணம் 2, மு.ஜனனி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, சி.கஜானி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, சு.அக்சனா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2, த.திலகேஸ்வரி(கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2.

**ஈட்டியெறிதல் 19 வயதுப் பெண் 2011**

பா.மாதங்கி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி) மாகாணம் 2.

**ஈட்டியெறிதல் 19 வயதுப் பெண் 2010**

பா.மாதங்கி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) மாகாணம்1.

(க-406) தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்து போன இணையங்களைத் தேடுவதற்கு

"அடடா அந்த இணையத்தளத்தின் முகவரியை குறித்து வைக்காமல் போய் விட்டோமே" என்று பெரும்பாலான இணையவாசிகள் புலம்பும் வசனம் தான் இது.

அதாவது சில தினங்களுக்கு முன் தான் ஒரு இணையத்தளத்தை பார்த்திருப்போம். அதன் பின்பு அந்தத் தளம் மீண்டும் நினைவுக்கு வரும் போது அதன் முகவரி மட்டும் கண்ணாமூச்சி காட்டும். எவ்வளவோ முயன்றாலும் அந்தத் தளத்தின் முகவரியை நினைவில் கொண்டு வர முடியாமல் போகும்.

இது போன்ற நேரங்களில் கை கொடுப்பதற்காக என்றே புக்மார்கிங் சேவை தளங்கள் இருக்கின்றன. எந்தத் தளத்தின் முகவரியையும் மறந்து விட்டு தேடி, தடுமாறாமல் இருக்க தளங்களைப் பார்க்கும் போதே புக்மார்கிங் தளங்களில் குறித்து வைப்பது நல்ல விடயம் தான்.

ஆனால் புக்மார்கிங் செய்யப்பட்ட தளங்கள் என்பது பரணில் போடப்பட்ட பொருள்கள் போல் ஆகிவிடுவதுண்டு. சேமித்து வைத்ததோடு புலரும் அவற்றை திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. தாமதமான நீதி பயனற்றது என்பதைப் போல் பராமரிக்கப்படாத புக்மார்கிங் தளங்களாலும் பயனில்லை.

இந்த சங்கடத்தை தவிர்க்கும் வகையில் புதியதொரு புக்மார்கிங் வசதி அறிமுகமாகியுள்ளது. உண்மையிலேயே புதுமையான புக்மார்கிங் சேவை தான் இது. காரணம் ரீகால் என்னும் அந்த வசதியில் புக்மார்கிங் செய்யாமலேயே புக்மார்கிங் வசதியைப் பயன்படுத்தலாம்.

அதாவது நாம் பார்க்கும் தளங்களை குறித்து வைக்காமலேயே அவை மீண்டும் தேவைப்படும் போது அழகாகத் தேடி எடுத்து விடலாம். அதாவது புக்மார்கிங் செய்யாமலேயே தளங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்றால் ரீகால் இணையவாசிகள் சார்பில் அவர்கள் பயணம் செய்யும் எல்லா இணையப் பக்கங்களையும் குறித்து வைத்துக் கொண்டு கேட்கும்போது எடுத்து தந்துவிடும்.

கூகுளின் பிரபலமான குரோம் பிரவுசருக்கான விரிவாக்க வசதியாக உருவாக்கப்பட்டுள்ள ரீகாலை ஒருமுறை பொருத்திக் கொண்டு விட்டால் அதன் பின்னர் அது ஒரு விசுவாசமான உதவி யாளரைப் போல நாம் செல்லும் எல்லா இணையத்தளங்களையும் குறித்து வைத்து கொள்ளும்.

முகவரியை மட்டும் அல்லாமல் இணையத் தளத்தில் உள்ள விடயங்கள் அனைத்தையும் சேமித்துக் கொள்கிறது. ஒருவரது இணையச் சுவடுகள் முழுவதையும் ரீகால் தனது சேமிப்பில் நிறுத்தி வைத்துக் கொள்கிறது.

பின்னர் எப்போது தேவை என்றாலும் நாம் பார்த்த இணையத்தளத்தைத் தேடிக் கண்டு பிடித்துத் தருகிறது. தேடியந்திரத்தில் தேடுவது போலவே நாம் பார்த்த தளம் தொடர்பாக நினைவில் உள்ள ஏதாவது ஒரு விடயத்தை குறிச்சொல்லாகப் பயன்படுத்தி தேடிக்கொள்ளும் வசதியும் உள்ளது. பின்வரும் இணையத் தளத்தினூடாக இந்த வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

http://www.recawl.com/

# போலியான மின்னஞ்சல் முகவரிகளை கண்டறிவதற்கு

நண்பர்களோ அல்லது ஏனைய நபர்களோ அவர்களைத் தொடர்பு கொள்ள எம்முடன் மின்னஞ்சல் முகவரியைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஆனால் மற்றவர்கள் பகிர்ந்து கொள்ளும் மின்னஞ்சல் முகவரிகள் சரியானதா இல்லை போலியானதா என பார்த்தவுடன் எம்மால் கண்டறிய முடியாது.

அவர்கள் கொடுக்கும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பினாலும் அது அவர்களைச் சென்றடையாது. இதற்குக் காரணம் ஒருவேளை அவர்கள் தவறாக மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்திருக்கலாம் அல்லது அதிக நாள்கள் உபயோகிக்காமல் விட்டதால் செயலிழந்து இருக்கலாம் அல்லது வேண்டுமென்றே எம்மிடம் போலியான மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்திருக்கலாம்.

இதுபோன்ற நேரத்தில் அந்த மின்னஞ்சல் முகவரி சரியானதா இல்லை வேலை செய்கிறதா, செயல் இழந்து விட்டதா என சுலபமாகக் கண்டறிய எமக்கு ஒரு தளம் உதவி புரிகிறது.

இதனை அறிந்து கொள்ள நீங்கள் அதிக தொழில்நுட்ப அறிவு எதுவும் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. கீழே உள்ள இணைப்பில் கிளிக் செய்து இந்தத் தளத்துக்குச் செல்லுங்கள்.

உங்களுக்கு ஒரு விண்டோ வரும். அதில் உள்ள வெறிறிடமான கட்டத்தில் நீங்கள் பரிசோதிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்து அருகில் உள்ள Verify Email என்ற பட்டனை அழுத்தவும்.

நீங்கள் Verify Email பட்டனை அழுத்தியவுடன் கீழே நீங்கள் கொடுத்த மின்னஞ்சல் முகவரி சரியானதா இல்லை போலியானதா என்ற முடிவு வரும். இவற்றை வைத்து மின்னஞ்சல் முகவரியை நாம் சரிபார்த்துக் கொள்ளலாம். பின்வரும் இணையத்தளத்திற்குச் செல்வதன் மூலம் இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும். http://www.verifyemailaddress.org/

# யூடியூப் வீடியோக்களை கணினியில் எவ்வாறு தரவிறக்கம் செய்யலாம்?

இன்றைய இணைய உலகில் யூடியூப் பயனாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. யூடியூப்பில் உலா வருகையில் சில வீடியோக்கள் எம்மை மிகுந்த அளவு கவரும். அவற்றை நாம் கணினியில் சேமித்து வைத்துக் கொள்ள நினைப்போம். இந்த ரூலானது யூடியூப் வீடியோவை எமது கணினியில் சேமித்து வைத்துக் கொள்ள உதவுகின்றது. தரவிறக்கம் செய்த வீடியோவை AVI மற்றும் MPG4 போர்மட்களில் மாற்றிக் கொள்ளும் வசதியும் உண்டு. இது iPod மற்றும் iPhone இல் இயங்க தகுந்த கோப்பாக மாற்றுகின்றது. இதன் மூலம் அதிக கொள்ளளவு ( High Definition Content ) கொண்ட வீடியோவை எளிதாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பது இதன் தனிச்சிறப்பு.

YouTube
Broadcast Yourself
HD Downloader

# விண்டோஸ் 7 இயங்குதளத்தை ISO கோப்பாக தரவிறக்கம் செய்வதற்கு




மைக்ரோசாப்டின் இயங்குதளங்களின் வரிசையில் எக்ஸ்பிக்கு அடுத்தப்படியாக கணினிப் பயன்பாட்டாளர்களிடம் மிகவும் பிரபலம் அடைந்த இயங்குதளம் என்றால் அது விண்டோஸ் ஏழு மட்டுமே ஆகும்.

இந்தத் இயங்குதளம் பல்வேறுவிதமான சிறப்பு வசதிகளைப் பெற்று இருந்தது. இந்த விண்டோஸ் 7 பதிப்பானது 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி சந்தைக்கு வந்தது.

இதில் இருந்த குறைபாடுகளை நீக்கி விண்டோஸ் 7இன் உடைய மீள்பதிப்பு பெப்ரவரி 2011இல் வெளியானது. இந்த மீள்பதிப்பை தற்போது ISO கோப்பாகவும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

சுட்டியில் குறிப்பிட்ட தளத்தக்குச் சென்று குறிப்பிட்ட இயங்குதளத்தை தரவிறக்கம் செய்து கொள்ளவும். பின் இந்த ISO கோப்பை ஏதாவது ஒரு பர்னிங் ரூல் கொண்டு பூட்டபிள் கோப்பாக மாற்றிக் கொள்ளவும். அதன்பின் நீங்கள் வழக்கம் போல் இயங்கு தளத்தை நிறுவிக்கொள்ளவும். இவ்வாறு நீங்கள் தரவிறக்கம் செய்து பயன்படுத்தும் இயங்குதளங்கள் 30 நாள்கள் இயங்கக் கூடியதாக மட்டுமே இருக்கும். இதனை முழுமையாக இயங்கச் செய்ய செயற்படுத்த வேண்டும். லைசன்ஸ் கீயை தரவிறக்கம் செய்து முழுமையாக இயங்குதளத்தை நிறுவிக் கொள்ளவும். இதன் மூலம் நீங்கள் விண்டோஸ் 7 இயங்குதளத்தையே இலவசமாகப் பெறுவீர்கள். இதில் முக்கியமான விடயம் இணைய இணைப்பு வேகமாக இருந்தால் மட்டுமே உங்களால் இயங்குதளத்தை தரவிறக்கம் செய்ய முடியும்.http://techdows.com/2011/07/download-windows-7-integrated-with-sp1-iso-official-direct-download-links.html லைசன்ஸ் கீயை மேற்கண்ட இணையத்தள முகவரிக்குச் செல்வதன் மூலம் தரவிறக்கம் செய்ய முடியும்.

# ஒன்லைன் மூலம் பிளாஷ் கோப்புக்களை உருவாக்கும் முறை

ஒன்லைன் மூலம் வீடியோ கோப்பில் உள்ள முக்கியமான பகுதிகளை எடுத்து அதை பிளாஷ் கோப்புகளாக, ஐபோன் வீடியோ கோப்புகளாக மாற்றலாம்.

வீடியோ கோப்பில் இருக்கும் சில முக்கிய பகுதிகளை நாம் விரைவாகத் தெரிய வைப்பதற்கும், எல்லா உலாவிகளிலும் சரியாகக் காட்டுவதற்கும் நாடுவது பிளாஷ் கோப்புகளை தான். எம்மிடம் இருக்கும் வீடியோ கோப்புகளை பிளாஷ் கோப்புகளாக மாற்ற ஒரு தளம் உதவுகிறது.

ஒரு நிமிடம் தெரியக்கூடிய வகையில் நாம் வீடியோ கோப்புகளை Cut செய்து இத்தத்தளத்துக்குச் சென்று Start encoding என்ற பொத்தானை சொடுக்கவும்.

அடுத்து வரும் திரையில் Browse என்ற பொத்தானை சொடுக்கி நாம் வைத்திருக்கும் வீடியோக் கோப்பைத் தேர்ந்தெடுத்து எந்த வகையான கோப்பாக மாற்ற வேண்டுமோ அதைத் தெரிவு செய்யவும்.

உதாரணமாக Iphone video அல்லது Flash Video கோப்பை தெரிவு செய்துவிட்டு Upload video என்பதை சொடுக்கி மாற்றலாம்.

சிறு வீடியோ விளம்பரங்கள் அல்லது வீடியோ கோப்புகளை Flash வீடியோவாக மாற்றி காட்ட எமக்கு இந்தத்தளம் உதவுகிறது. ஒரு நிமிடம் வரை ஓடக்கூடிய வகையில் பிளாஷ் கோப்புகளை இலவசமாக இத்தத்தளம் மூலம் உருவாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத்துக்குரிய நபர்களைக் கைது செய்ய பொலிஸாருக்கு ஒத்துழைக்கும்படி வேண்டுகோள்

மூதூர், ஒக.19

மர்ம மனிதன், கிறீஸ் மனிதன் என்பதில் எந்தவித உண்மையும் இல்லை. வதந்தியைப் பரப்பும் நபர்கள், தேவையற்ற முறையில் நடமாடும் நபர்கள், சந்தேகத்துக்குரிய நபர்கள் ஆகியோரைக் கண்டால் உடனடியாகப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு அவர்களைக் கைது செய்வதற்கு உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள்.

-இவ்வாறு திருகோணமலை மாவட்டப் பொலிஸார் துண்டுப் பிரசுரம் மூலம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

'பொலிஸ் விசேட அறிவித்தல்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டப் பொலிஸார் இந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்றைய நாள்களில் திட்டமிட்ட குழுவினரால் அவர்களின் தன்னிச்சையைக் காட்டுவதற்காக மர்ம மனிதன், பேய், பிசாசுகள் நடமாடுகின்றன எனக் கதையைப் பரப்பிப் பொது மக்களை அச்சத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

இதில் எந்தவித உண்மையும் இல்லை; எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையுமில்லை; இது சம்பந்தமாகப் பொலிஸார் மிகவும் அவதானத்துடனேயே இருக்கின்றார்கள். இது தொடர்பாக அறியத் தருபவை யாதெனில்,

பொதுமக்களின் உயிர்களையும் சொத்துகளையும் பாதுகாப்பது பொலிஸாரின் கடமையாகும். அதனால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்களின் உயிர்களையும் பாராது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். பொதுமக்களின் பாதுகாப்புக்காகப் பகல் - இரவு பாராது சுற்றுக் காவலில் ஈடுபட்டு சந்தேகத்துக்கு இடமான நபர்களைக் கைதுசெய்கிறார்கள்.

வதந்திகளைப் பரப்புவது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகையால் அப்படியான வதந்திகளைப் பரப்பும் நபரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய தகவலைத் தரவும்.

வதந்தியைப் பரப்புவதன் மூலம் பாடசாலை விடுமுறைக் காலத்தில் தமது பகுதிகளுக்கு வர இருக்கும் உறவினர்கள், நண்பர்கள், பலவித அரச தொழில்புரியும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

மர்ம நபர்கள் தொடர்பாகத் தகவல் அறிந்தால் குழப்பம் அடையாமல் அறிவுபூர்வமாக உணர்ந்து செயற்படவும். பிரதேசத்தின் சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்பது மக்கள் அனைவரதும் கடமையாகும். எனவே பொலிஸாருக்கு உங்களுடைய பூரண ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்குமாறு தங்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கல்முனை மாநகரசபை ஆணையாளர் இடமாற்றம்

அம்பாறை, ஒக.19

கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம்.ஏ.எம். நியாஸ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாநகரதபதில் ஆணையாளராக அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.கே.எம்.இர்ஷாத் நியமிக்கப்பட்டுள்ளார். இடமாற்றம் செய்யப்பட்ட ஆணையாளர் நியாஸ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் கல்முனை மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் எம்.வை.சலீம் இடமாற்றப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே எம்.ஏ.எம். நியாஸ் மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மர்ம மனிதர்களின் உண்மையை விளங்கிக்கொள்ள முடியவில்லை

**உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்**

அம்பாறை,ஒக.19

மர்ம மனிதர்கள் குறித்து உண்மையை விளங்கிக் கொள்ள முடியவில்லை.தற்போது நடைபெறுவதாகக் கூறப்படும் சம்பவங்கள் உண்மையாக இருந்தால் அதற்கான நடவடிக்கைகளை கட்டாயம் மேற்கொள்ளுவோம் என கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

துறைநீலாவணை விபுலானந்தா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அந்தக் கிராம மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மர்ம மனிதன் தொடர்பான பிரச்சினை இரத்தினபுரி மாவட்டத்தின் கஹாவத்தையில் முதலில் ஆரம்பமானது. இது தற்போது இங்கும் பரவியுள்ளது. அங்கு மர்ம மனிதர்களின் நடமாட்டத்திற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இங்கு மர்ம மனிதர்களின் நடமாட்டத்திற்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இனிமேலும் மர்ம மனிதர்களின் நடமாட்டம் இடம்பெறாது பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து மேற்கொள்வோம். மக்கள் அச்சமடையத் தேவையில்லை- என்றார். (ச)



திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரஞ்சனி செல்வராஜா திடீரென பதவி குறைக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டமையைக் கண்டித்தும் பணியாளர்களின் சம்பள உயர்வை உயர்த்தக் கோரியும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தபாலகத்தில் திருட்டு

மட்டக்களப்பு, ஏறாவூர் தபாலகத்தில் பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் மோட்டார் இயந்திரம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து ஏறாவூர் தபாலதிபர் எஸ்.எச்.கஸ்ஸாலி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தத் தபாலகத்தில் ஏற்கெனவே பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் சில மாதங்களுக்கு முன்னர் திருட்டுப்போயுள்ள நிலையில் மற்றுமொரு நீரிறைக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விவசாயிகள் மீது இரவில் இனம்தெரியாதோர் தாக்குதல்

இறக்காமம், ஒக.19

நெல் வயலைப் பாதுகாக்கும் பொருட்டு யானைக் காவலுக்குச் சென்ற மூன்று விவசாயிகள் இனம்தெரியாத சிலரால் தாக்கப்பட்டுள்ளார்கள். இந்த மூவரும் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காட்டு யானைகளிடமிருந்து நெல்வயலைப் பாதுகாக்கும் பொருட்டு, கடந்த திங்கட்கிழமை அம்பாறை, கொண்டுவட்டுவான் பகுதியிலுள்ள தமது நெற்காணிகளுக்கு இந்த மூவரும் சென்றுள்ளனர்.

அங்கு திடீரென வந்த கும்பலொன்று இந்த மூவரையும் தாக்கிக் காயப்படுத்தியுள்ளது.

அதிர்ச்சியடைந்த இவர்கள் பக்கத்திலுள்ள வீடொன்றுக்கு ஓடிச் சென்று விடயத்தை விவரித்துள்ளனர். அந்த வீட்டுக்காரர்கள் இவர்களின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து இவர்கள் அம்பாறைப் பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

## புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம்

மட்டக்களப்பு,ஒக.19

கிழக்கு மாகாணத்துக்கு புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஜகத் அபேசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் மர்ம மனிதர்கள் தொடர்பான அசாதாரண சூழ்நிலையை அடுத்து, பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மர்ம மனிதர்கள் தொடர்பில் கிழக்கு மாகாண மக்களை தெளிவுபடுத்தி அங்கு அமைதியான சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில், மட்டக்களப்பு, வாகரை பிரதேசத்தில் மர்ம மனிதர்கள் தொடர்பான தெளிவூட்டல் நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)

## கிண்ணியா வைத்தியசாலையில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு

திருகோணமலை,ஒக.19

கிண்ணியா தள வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏ(-) மற்றும் ஏபி(-) ஆகிய குருப் இரத்தங்களே அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ச)

## தொழிலாளியின் கால்களை கீறிய மர்ம மனிதன்

நுவரெலியா,ஒக19

கொட்டகலை, கிறிஸ்டல் பார்ம் தோட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தேகத்திற்கு இடமான நபரொருவர் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளியின் கால்களை நகங்களால் கிறிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தேயிலைச் செடிகளுக்கிடையில் ஊர்ந்து வந்த நபரொருவர் தனது கால்களை நகங்களால் கீறியதாக பாதிக்கப்பட்ட பெண்தொழிலாளி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த இடத்திற்குச் சென்று விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்று கொட்டகலை பிரதேசத்துக்குச் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் சென்று, கிறிஸ்டல் பார்ம் தோட்டத்தில் தொழில் புரிகின்ற பெண் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## வீதிப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நுவரெலியா மாவட்டத்தின் பெருந்தோட்ட பகுதியில் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ள வீதிகளைப் புனர்நிர்மானம் செய்வதற்கு அரசு 50 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியைக் கொண்டு நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, வலப்பனை ஆகிய நுவரெலியா மாவட்ட செயலாளர் பிரிவில் உள்ள பெருந்தோட்ட வீதிகளை வீதி அதிகாரசபை ஊடாக செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 ஒகஸ்ட் 2011 வெள்ளி

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கும் நாள். நீங்களே சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் குடும்பத்தினரிடம் சண்டை போடலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

**இடபம்:**
சவால்களை முறியடித்து வெற்றி பெறும் நாள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். குழந்தைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**மிதுனம்:**
எதிர்பார்த்த நிதியுதவி, கடனுதவி கிடைக்கும் நாள். வியாபாரிகள் வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வருமானம் பெறலாம். நீண்ட நாளைய உழைப்பு ஒன்றுக்கு பலன் கிட்டும். பெண்கள் மகிழ்ச்சியுடன் உற்சாகமாகக் காணப்படுவர். சிக்கலான ஒரு விடயத்தில் தலையிடாமல் சாமர்த்தியமாக ஒதுங்கிக் கொள்வீர்கள்.

**கடகம்:**
மன அமைதியைப் பாதிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். உடல் உபாதைகள் வராமல் இருக்க உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பெண்கள் குடும்பப் பெரியவர்களின் கோபத்துக்கு ஆளாகலாம். சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம்.

**சிங்கம்:**
வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்க நேரிடலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். கணவன், மனைவி இடையே மனஸ்தாபம் ஏற்படலாம். நண்பர்கள் சிலரை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். நீங்கள் கேட்ட உதவியைத் தராமல் சிலர் கையை விரிக்கலாம்.

**கன்னி:**
எடுத்த காரியத்தை தங்கு தடையின்றி சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். மனைவி வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். உறவினர் ஒருவர் உங்களைப் பாராட்டிப் பேசி காரியம் சாதிக்கலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். வரவேண்டிய பணம் ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். தற்பெருமை அதிகரிக்கும்.

**துலாம்:**
அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். வீண் விரயங்களைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். பொறுப்பான சில வேலைகளைச் செய்து கணிசமான ஆதாயத்தைப் பெறலாம். பார்க்கச் சென்ற நண்பர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம். இழுத்துக் கொண்டிருந்த பணவரவுகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:**
ஏதோ ஒரு விடயத்தை நினைத்துக் கவலைப் படுவீர்கள். உங்களின் நண்பர் ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். கனவுகளால் மனக்குழப்பங்கள் உண்டாகலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, பழைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். பணவரவு ஒன்று வந்தாலும், அது உடன் கிடைக்காமல் தடைப்படலாம்.

**தனுசு:**
புதியவர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சிலரிடம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிக்கலாம். புதிய ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பயணங்களை மாற்றலாம்.

**மகரம்:**
நினைத்தது நினைத்தபடி நடக்கும் நாள். குடும்ப உறுப்பினர்களுடன் கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெற்றாலும், அதற்கேற்ற செலவுகள் உண்டாகும். நம்பி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**கும்பம்:**
பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். உறவினர்கள் சிலர் உங்களிடம் பண உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். தூக்க மின்மையால் சோர்வு, சோம்பல் உண்டாகும். நேரம், காலம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். விமர்சனங்களைச் சந்திப்பீர்கள்.

**மீனம்:**
கணவன், மனைவி இடையே அன்யோன்யம் மேம்படும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். மாணவர்கள் ஆசிரியர்களின் கண்டிப்புக்கு ஆளாகலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பழைய சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். பணவரவுகளைப் பெறலாம்.

# முஸ்லிம்களை
# இலக்கு வைக்க



மர்ம மனிதனின் அச்சுறுத்தலை கண்டித்து வவுணதீவில் வீதியை மறித்து நூற்றுக்கணக்கான
நேரத்தில் வீடுகளுக்கு வெளியே வருவதையே தடுத்துள்ளனர்.

சிங்கள இனவாதம் முதலில் முஸ்லிம்களுக்கும், இந்தியர்களுக்கும் குறிப்பாக மலையாளிகளுக்கும் எதிராகவே 1880களில் எழுந்தது.

நவீன வரலாற்றின் மிக ஆரம்பத்தில் அதாவது 1860களில் கிறிஸ்தவர்கள் மீதான பௌத்தர்களின் எதிர்ப்பு கூர்மையடைந்தது. ஆனால் வெகு விரைவில் சிங்கள கிறிஸ்தவர்களை அடக்குவதில் சிங்கள பௌத்தர்கள் வெற்றி கண்டனர்.

### அடுத்தடுத்த ஒடுக்குமுறைகள்

1883ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனையில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பௌத்தர்கள் நடத்திய கலவரத்தில் 3 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். இதில் ஒரு பொலிஸாரும் கொல்லப்பட்டார். இதுவே இலங்கையில் முதல் முறையாக நிகழ்ந்த இன ஒடுக்குதல் வன்முறையாகும். இது 1883 கொட்டாஞ்சேனைக் கலவரம் என்று அழைக்கப்படுகிறது.

**முஸ்லிம்கள் பலமடைய முன்பே, புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து முஸ்லிம்களையும் பயமுறுத்தி அடக்க வேண்டுமென அரசு திட்டமிடுவதன் விளைவே கிறீஸ் பூதத்தின் உருவாக்கம்**

இதன் பின்பு சிங்கள பௌத்தர்களின் கவனம் முஸ்லிம்களுக்கு எதிராகவும், இந்திய மலையாளிகளுக்கு எதிராகவும் திரும்பியது. 1915 முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்கள பௌத்தர்கள் கம்பளையில் நிகழ்த்திய இன வன்முறை கம்பளைக் கலகம் என அழைக்கப்படுகிறது.

அடுத்து 1940களின் இறுதிப் பகுதியில் மலையகத் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையில் இந்த நாட்டின் பெரும்பான்மையினம் கவனம் செலுத்தியது. வாக்குரிமை, குடியுரிமை பறிப்புக்களுடன் இந்த ஒடுக்குமுறையை சிங்களவர்கள் அதன் உச்சத்திற்குத் தள்ளினர். இதற்கு வடக்கின் சில தமிழ்த் தலைவர்களும் ஆதரவு அளித்துள்ளனர்.

### தமிழர் மீதான அடக்குமுறை

ஈழத் தமிழர்களே இந்த நாட்டின் மொத்தச் சிறுபான்மைச் சமூகங்களுக்குமான பலம்பொருந்திய தலைமைச் சக்தி என்பதைப் பெரும்பான்மையினர் பின்னரே புரிந்து கொண்டனர். ஈழத்தமிழரை ஒடுக்குவதே அனைத்து இனங்களையும் ஒடுக்குவதற்கான அடிப்படை என்பதையும் சிங்களத் தலைவர்கள் பின்புதான் உணர்ந்தனர்.

தமிழர்களுக்கு எதிரான பல்பரிமாண ஒடுக்குமுறை வளர்ச்சி பெற்று முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையுடன் முடிவடைந்தது. ஈழத் தமிழரை ஒடுக்கும் வரை முஸ்லிம்களை சகிப்புடன் அணுகி அவர்களை ஒடுக்குவதற்கு தந்திரோபாய ரீதியில் காலம் வரும்வரை காத்திருந்தனர். இப்போது அதற்கான காலம் கனிந்திருப்பதாகத் தெற்குக் கருதுகின்றது.

புலிகளின் வீழ்ச்சியுடன் தமிழர்கள் இனி எழும்ப முடியாது எனக் கருதும் சிங்கள இனவாதிகள் தற்போது முஸ்லிம்களை பதம் பார்க்கத் தொடங்கியுள்ளனர். ஈழத் தமிழரை ஒடுக்கும்வரை முஸ்லிம்களை விட்டுவைக்க வேண்டிய தேவை சிங்கள ஆட்சியாளர்களுக்குக் காணப்பட்டது. அது ஒரு தந்திரோபாயமான நிலையாகும். சிங்கள பௌத்தர்கள் இந்துக்களை விடவும், முஸ்லிம்களை தமது தீவிர மத எதிரியாகவே கருதுகின்றனர்.

### பௌத்தர்களின் இந்துப் பற்று

பௌத்தர்கள் இந்துக் கோவில்களுக்குச் செல்வது வழக்கம். முருக தெய்யோ, கணபதி தெய்யோ, பத்தினி தெய்யோ என இந்துத் தெய்வங்களை அவர்கள் பூசிப்பதும் நடப்பவைதாம். பௌத்தர்கள் புத்த பகவானைத் தத்துவ வழிகாட்டியாகக் கொள்ளும் அதேவேளை வரம் பெறுவதற்கான தெய்வங்களாக இந்துத் தெய்வங்களையே நாடுகின்றார்கள்.

சிங்களத் தலைவர்கள் வரம் வேண்டி இந்து ஆலயங்களை நாடுவதும் யாகங்கள், பூஜைகள் செய்வதும் ஒரு பொதுவான வழக்கம். தனது பதவிக் காலத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வரம்வேண்டி அஸ்வமேத யாகம் நடத்தினார். தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடிக்கடி திருப்பதி தேவஸ்தானத்துக்குச் சென்று வருகிறார் என்பன குறிப்பிடக்கூடிய மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

கொழும்பு கதிர்வேலாயுத முருகனுக்கான ஆடிவேல் விழாவிலும், கதிர்காம முருகனுக்கான விழாவிலும் சிங்களத் தலைவர்களும், மக்களும் காட்டும் மிகப்பெரும் ஆர்வம் பெரிதும் கவனத்திற்குரியது.

இப்படி இந்
மாகப் பிகை
யல் என்று
கொண்டு

விநாயக
சிங்களவர்க
மூல விக்கி
தெடுத்து
க கிணந்
டினார்கள். ரா
யும், தேவா
தகர்த்தது.

தாம் வழ
களவர்கள்
முஸ்லிம்கள்
த்தைச் செ

எனவே,
இப்போது மு
இதனையே
லும் கிழக்கி
நடக்கும் சம்

தமிழரின்
முஸ்லிம்கள்
கொழும்பு
தது. அந்தக்
ரான செயற்ப
கிழக்கில் ந
யம் காட்டுகி

இலங்கை
இருதயமாக
கொண்டிரு
கலாசாரம் எ
உணர்வு பூர்
வகையில்
ஒரு கலாசார

இதனை
களைக் குறி
பட்டுள்ளது
பவர்களில்
முகாம்களுக்
ளும் ஓடிப்
ணணியில் தி
யம் இருக்கு

தமது பெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளையும் ஒடுக்க
# க்கிறது அரசு



ஆயிரக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அச்சத்தில் அவர்கள் இரவு

இப்படி இந்து மதத்தோடு சிங்களவர்கள் நெருக்கமாகப் பிணைந்திருந்த போதிலும், இனவாத அரசியல் என்று வந்தவுடன் சிங்கள பௌத்தர்கள் வெறிகொண்டு செயற்படுவர் என்பதே வரலாறு.

### விநாயகருக்கும் அடிதான்

விநாயகரைக் கண தெய்யோ என்று வழிபடும் சிங்களவர்கள் 1958 கலவரத்தின் போது விநாயகரின் மூல விக்கிரகத்தை ஆதிமூலத்திலிருந்து பெயர்த்தெடுத்து கிணற்றுள் வீசிவிட்டு கணபதி குளிப்பதாக கிணற்று வாசலில் விளம்பரப் பலகையை மாட்டினார்கள். ராணுவமோ தமிழ் மண்ணில் ஆலயங்களையும், தேவாலயங்களையும் எறிகணைகளை வீசித் தகர்த்தது.

தாம் வழிபடும் இந்துத் தெய்வங்களையே சிங்களவர்கள் இவ்வாறு அவமதிக்கிறார்கள் என்றால் முஸ்லிம்கள் மீது அவர்கள் காட்டக்கூடிய இனக்குரோதத்தைச் சொல்லில் வர்ணிக்கத் தேவையில்லை.

எனவே, புலிகளை வீழ்த்திய பின்பு சிங்கங்கள் இப்போது முஸ்லிம்கள் மீது பாயத் தொடங்கியுள்ளன. இதனையே அண்மைக் காலங்களாக அம்பாறையிலும் கிழக்கின் ஏனைய முஸ்லிம் கிராமங்களிலும் நடக்கும் சம்பவங்கள் காட்டுகின்றன.

### முஸ்லிம் அடக்குமுறை

தமிழரின் போராட்டம் வீழ்த்தப்பட்ட பின்னர் முஸ்லிம்களை நசுக்குவது ஒரு சிறுவிடயமென கொழும்பு அரசு ஏற்கனவே கணக்குப் போட்டிருந்தது. அந்தக் கணக்கின்படி முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் ஆரம்பமாகி விட்டன என்பதையே கிழக்கில் நடமாடும் மர்ம மனிதர்கள் பற்றிய விடயம் காட்டுகிறது.

இலங்கையில் தமிழ் பேசும் சமூக கலாசாரத்தின் இருதயமாகக் காணப்படுவது பெண்கள் பற்றி அது கொண்டிருக்கும் நிலைப்பாடுதான். ஆதலால் கலாசாரம் என்று வந்தால் அதில் பெண்கள் மிகவும் உணர்வு பூர்வமான இடத்தை வகிக்கிறார்கள். அந்த வகையில் பெண்கள் மீது பாதிப்பை ஏற்படுத்துவது ஒரு கலாசார மையத்தை சிதைப்பதற்கு ஒப்பானது.

இதனைத் தெரிந்து கொண்டே இளம் பெண்களைக் குறிவைக்கும் 'கிறீஸ் பூதம்' கிளப்பி விடப்பட்டுள்ளது. மர்ம மனிதர்கள் என்று மக்கள் துரத்துபவர்களில் பலர் இராணுவ, கடற்படை, விமானப்படை முகாம்களுக்குள்ளும் பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் ஓடிப் போய் ஒளிந்து கொள்வதானது, இதன் பின்னணியில் திட்டமிடப்பட்ட சக்திகளின் கைகங்கரியம் இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

தமது பெண்கள் மீதான இத்தகைய வன்முறைகளால் ஆத்திரமடையும் முஸ்லிம் சமூகம் கிளர்ந்து எழும் என்பது அவர்களது எதிர்பார்க்கை. தமக்குத் தேவையானபோது, வசதியானபோது முஸ்லிம் மக்களைக் கிளர்ந்தெழ வைத்து, தமது படை பலத்தின் மூலம் அவர்களை அடக்கி அவர்களையும் தோல்வியுறச் செய்யவே அதிகார வர்க்கம் எதிர்பார்க்கிறது.

இதன் மூலம் எதிர்காலத்தில் கிளர்ச்சிக்கோ, புரட்சிக்கோ முஸ்லிம் மக்கள் செல்லக் கூடாத மனநிலையை ஏற்படுத்த அரசு முயற்சிக்கிறது.

முஸ்லிம்கள் பலமடைய முன்பே, புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து முஸ்லிம்களையும் பயமுறுத்தி அடக்க வேண்டுமென அரசு திட்டமிடுவதன் விளைவே இது. முஸ்லிம் தலைவர்களைத் தம்முடன் அணைத்து வைத்துக்கொண்டு முஸ்லிம்களை திராணியற்றவர்கள் ஆக்குவது இலகுவென அரசு நினைக்கிறது.

ஆனால் முஸ்லிம் மக்களிடம் காணப்படுகின்ற இறுக்கமான கூட்டுணர்வு அவர்களது பள்ளிவாசல் தொழுகைகளுக்கு ஊடாக இலகுவாகச் செயற்படக்கூடியது. ஆதலால் முஸ்லிம் மக்களின் எழுச்சியை இலகுவில் அடக்க முடியாது.

### தமிழரும் குரல் கொடுங்கள்

முஸ்லிம் மக்களுக்காகத் தமிழ் மக்கள் பெரிதும் குரல் எழுப்ப வேண்டும். தமிழர், முஸ்லிம்கள் ஐக்கியம் இருவருக்கும் பலமானது. வன்னியில் முள்வேலி முகாம்களுக்குள் இருந்த தமிழ் மக்களுக்கு முஸ்லிம் மக்கள் உணவு சேகரித்து வழங்கிய நல் உதாரணத்தை இந்த இடத்தில் நினைவு கூருவது நல்லது. துன்பங்களில் ஒன்றிணையும் போது உருவாகும் ஐக்கியம் ஆழவேரூன்றும்.

இஸ்லாமியப் பெண்களுக்கும், இஸ்லாமிய சமூகத்துக்கும் எதிராகச் சிங்கள இராணுவம் செயற்படுவதைத் தமிழ்ச் சமூகம் பார்த்துக் கொண்டு பொறுமை காக்கக் கூடாது. ஆனவரை தமிழ்ச் சமூகத்தில் உள்ள பலதரப்பினரும் தம் எதிர்க் குரலை எழுப்ப வேண்டும்.

கிழக்கிலும் மலையகத்திலும் நடைபெற்றுவரும் சம்பவங்களை ஏதோ திருடர்களின் கைவரிசை என்று ஒதுக்கிவிட முடியாது. ஓர் இன மேலாதிக்க உணர்வின் அடிப்படையிலும், திட்டமிட்ட முறையிலும் அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகவே இதனைப் பார்க்க வேண்டும். அப்படி அதனை அணுகுவதே சிறுபான்மை இனங்களின் எதிர்காலத்தின் தேவையாக அமையும்.

சண்முகசுந்தரம்

## இடைவெளி மறைந்தது



ஓர் ஊரில் ஒரு பெரிய வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் தீர்த்த யாத்திரை செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் போக விரும்பிய புண்ணிய தலம் வெகுதூரத்தில் இருந்தது. இருந்தாலும் யாத்திரை போய் வர வேண்டும் என்பதே அவருடைய தீர்மானம். நடந்தே போய்வர வேண்டும் என்றால் அதற்கு நீண்ட காலம் எடுக்கும் அது வரைக்கும் தன்னுடைய தொழிலைக் கவனித்துக் கொள்வது யாரெனயோசித்தார்.

மனைவிக்கு வீட்டுப் பொறுப்புக்கள் அதிகம். அதனால் கடையில் வியாபாரம் செய்ய ஒருத்தர் தேவைப்பட்டார். சம்பளத்துக்கு வேலை செய்ய ஒருவரைத் தேடிப்பிடித்து கடையில் உட்கார வைத்தார்.

''நீயே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்'' என்று சொல்லிவிட்டு இவர் கடைக்குப் பின்னால் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டார்.

எல்லாப் பொறுப்புக்களையும்அவனிடம் ஒப்படைத்துவிட்டுப் பின்னால் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டார்.

ஒரு வருடம் ஆனது. ஆனால் அவருக்கு யாத்திரைக்குப் புறப்படலாம் என்கின்ற நம்பிக்கை வரவில்லை வேலைக்காரன் வாடிக்கையாளர்களிடம் எப்படிப் பேசுகிறான்; எப்படி நடந்து கொள்ளுகிறான் என்று கவனித்துக் கொண்டே இருந்தார்.

ஒரு நாள் கடைக்கு வாடிக்கையாளர் ஒருவர் வந்து ஒரு பொருளின் விலை என்ன என்ற விசாரித்தார். அவன் அதன் விலையைச் சொன்னான். '' இதை இன்ன விலைக்குக் கொடுக்க முடியுமா?'' என்று குறைத்துக் கேட்டார் வாங்க வந்தவர்.

இவன் சொன்னான் '' முதலாளி இதை இந்த விலைக்குக் கொடுக்கமாட்டார்'' என்று.

அறையில் உட்கார்ந்திருந்த வியாபாரி இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

'' சரி இன்னும் கொஞ்சக் காலம் போகட்டும்'' என்று நினைத்துக் கொண்டார். ஒரு வருடம் ஓடிப் போய்விட்டது, இரண்டாவது வருடம் ஆரம்பமானது,

அப்போதும் ஒரு வாடிக்கையாளர் வந்து விலையை விசாரித்தார். இப்போது அவன் '' நாங்கள் இந்த விலைக்கு இந்தப் பொருளை விற்க முடியாது'' என்றான்.

பின்னால் அறையில் இருந்த வியாபாரி இதையும் கேட்டுக் கொண்டிருந்தார். இனியும் நாம் யாத்திரை புறப்படுவதற்கான நேரம் வரவில்லை என்று நினைத்துக் கொண்டார்.

மூன்றாவது வருடமும் வந்துவிட்டது. இப்போதும் வழக்கம் போல் வாடிக்கையாளர்கள் வந்து விலை கேட்டார்கள். இப்போது அவன் '' நான் இந்த விலையில் இதை உங்களுக்குக் கொடுத்தால் கட்டுப்படியாகாது'' என்றான்.

இதைக் கேட்ட அந்த வியாபாரி எழுந்து வீட்டுக்குப் போய் மனைவியைக் கூப்பிட்டு ''இனிமேல் கவலைப்படத் தேவையில்லை. நான் நிம்மதியாக யாத்திரை போகலாம். ஏனென்றால் இப்போது வேலையாளுக்கும் எனக்கும் இடையில் வித்தியாசம் இல்லை. எங்களுக்கு இடையில் இருந்த இடைவெளி நீங்கி விட்டது. வேலைக்காரன் என் குரலிலே பேசுகிறான். அதனால் கவலைப்படாமல் புறப்படாமல் என்று கூறிப் புறப்பட்டுப் போய் விட்டார்.

அங்கு அவருக்கு இறைவன் தரிசனம் கிடைத்தது. பத்துக் கட் டளைகள் கிடைத்தன. அவர் யாத்திரை முடித்து வந்தபோது நான் இறைவனிடமிருந்து தர்மம் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லவில்லை. இறைவன் எனக்குத் தர்மபோதனை செய்தார் என்று சொல்லவில்லை. அவர் கூறினார் ''நான் உங்க ளுக்குத் தர்ம விதிகளை அளிக்கிறேன்'' இந்த வசனம் அகங்காரம் மாதிரித் தெரியலாம். ஆனால் உண்மை அதுவல்ல.

இறைவனை அறிந்து கொண்ட ஒவ்வொருவரும் இறைவனாகி விடுகின்றனர். இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொள்வதற்காகத்தான் முன்னர் கூறிய வியாபாரியின் கதை.

இறைவனோடு ஒன்றிப் போவது மாதிரி இந்தக் காலத்தில் வேறுவிடயங்களுக்கு ஒன்றிப் போகின்றவர்கள் உண்டு. நான் வேறு, அதுவே என்று நினைக்காத தன்மை எம்மவர்களில் சில பேருக்கு உண்டு. ஒருத்தர் கூறினார்.

''என் வீட்டில் குடியிருக்கிறவர் என்னுடைய வீட்டைத் தன்னுடைய வீடாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார் என்றார். எப்படிச் சொல்கிறீர்கள் என்றபோது, ''இதுவரைக்கும் ஒரு மாதம் கூட அவர் வாடகை கொடுத்ததில்லை என்றார்.''

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ உதவியாளர் கடமைகளைப் பொறுப்பேற்றனர்

மாகாண திணைக்கள அலுவலகங்களில் முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

அலுவலகங்களில் கடமையாற்றிய சிறு பணியாளர்களை முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு மாகாணப் பொதுச் சேவை துறைக்குழுவால் கடந்த 15ஆம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த 15ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆளுனர் ஜீ.ஏ சந்திரசிறியால் வழங்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் அந்த நிகழ்வு பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலை யில் நியமனக்கடிதங்கள் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம)

# உல்லாசப் பயணிகளின் வருகை 32 வீதத்தால் அதிகரிப்பு

இலங்கைக்கு உல்லாசப்பயணங்களை மேற்கொள்வோரின் நிலை 32 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதத்தில் மட்டும் 83 ஆயிரத்து 786 வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இங்கு வந்துள்ளதாக உல்லாசப் பயண அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிக்கிறது. இந்த எண்ணிக்கையைக் கடந்த ஆண்டின் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை நூற்றுக்கு 32.3 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, ஜனவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையான கடந்த 7 மாதங்களுள் 4 லட்சத்து 65 ஆயிரத்து 324 வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.இந்த வெளிநாட்டு உல்லாசப்பயணிகளிடையில் அதிகளவானோர் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் ஆகிய ஐரோப்பிய நாடுகளிலிருந்தே வந்துள்ளனர்.

இந்த நாடுகளிலிருந்து ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 542 பேர் இலங்கை வந்துள்ளதாகவும் உல்லாசப்பயண அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கிறது. தென்னாசிய நாடுகள், மத்தியகிழக்கு நாடுகளிலிருந்தும் கூட குறிப்பிடத்தக்க அளவில் உல்லாசப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகவும் மேற்படி அதிகாரசபை தெரிவிக்கிறது. (ம-22)



அளவெட்டி பத்தானை ஞான வைரவர் ஆலயத்தில் 'திருவாசகத் திருமருந்து' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிய யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் எஸ்.ரீ.குமரன் அண்மையில் ஆலய பரிபாலன சபையினரால் செஞ்சொல் வேந்தன் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவருக்குரிய பட்டத்தை ஆலயக் குருக்களான பஞ்சலிங்கக் குருக்கள் வழங்கிக் கௌரவித்தார். (ம-38)

## விண்ணப்பிக்க அறிவுறுத்து

யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத் தில் 2011 ஆம் ஆண்டு இரண்டாம் பருவ கால பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி முன்னதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# வெலிக்கடைச் சிறைச் சூழலில் டெங்கு நோய் பரவும் அபாயம்

கொழும்பு, ஒக.19

வெலிக்கடை சிறைச்சாலையின் சுற்றாடலில் டெங்கு நோய் கடுமையாக பரவிச் செல்லக்கூடிய அபாயகரமான நிலையில் இருப்பதாக கொழும்பு மாநகர சபையின் பொதுசன சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் விடுத்துள்ள பணிப்புரைகளுக்கு அமைய மருத்துவர்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் குழு ஒன்றால் மூன்று தினங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசீலனையின் பின்னரே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.சிறைக்கைதிகள் எட்டுப் பேருக்கு சிறைச்சாலை,மருத்துவர்கள் தங்கும் விடுதிகளிலுள்ள குழந்தைகள் மூவருக்கு மற்றும் குடும்பஸ்தர்கள் தங்கும் விடுதி ஒன்றில் குழந்தை ஒன்றுக்கும் சில தினங்களுக்கு முன்னர் டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டிருந்தது.இதனையடுத்து இந்த எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ம-22)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஆன்மிக சொற்பொழிவுகள்இடம்பெற்று வருகின்றன.நல்லூரில் அமைந்துள்ள 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 630 மணிக்குஇடம்பெறும் ஆன்மிகசொற்பொழிவில் இன்று 'என்கடன்பணிசெய்துகிடப்பதே' எனும் தலைப்பில் சைவப் புலவர் இராசையா சிறீதரன் சொற்பொழிவு நடத்துவார்.

***

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் "கங்கை வேடம்" என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா உரை நிகழ்த்துவார். (ம-313)

***

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் 6.30 மணிக்கு தெய்வீக இசையரங்கை நடத்திவருகிறது.இதில் இன்று வி.சிவஞானசேகரம், எஸ்.கோபிதாஸ், எஸ்.துரைராசா, எஸ்.செந்தூரன் ஆகியோரின் இசையரங்கு இடம் பெறும். (ம-313)

***

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இன்று பி.ப 3 மணிக்கு சமய சொற்பொழிவுகளும்,கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இதில் சைவப் புலவர் கந்தசத்தியதாசன் "நீறு இல்லாநெற்றி பாழ்" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை, பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, காரைநகர் திக்கரை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

***

யாழ்.சின்மய மிஷனின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் இன்று 6.30 மணிக்கு ஆன்மீக சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. இதில் பிரம்மச்சாரி ஜாக்கிரத்சைதன்ய "மனிதா எங்கே செல்கிறாய்" எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-313)

***

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நல்லூர்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீனகலா மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு நிகழ்வுகளை நடத்தவுள்ளது. இதில் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் முருகன் காவடி, கீர்த்தனை, கலை நிகழ்வு இடம்பெறும். (ம-313)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2249 திகதி 17-08-2011
ஆங்கில எழுத்திற்கும் C
வெற்றி எண்கள் 10 54 58 69
போனஸ் இல: 66
ஜக்பொட் பரிசு ரூ. 19,590,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 212653 | 20/- | 4,253,060/- |
| 2 இல | 15227 | 100/- | 1,522,700/- |
| 3 இல | 327 | 1,000/- | 327,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8704 | 40/- | 348,160/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 605 | 1,000/- | 605,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,590,700/- | - |
| 1 இல + போனஸ் இல | 10089 | 100/- | 1,008,900/- |
| 2 இல + போனஸ் இல | 480 | 500/- | 240,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 450 | 200/- | 90,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 248578 | | 11,059,320/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 343 | | 271,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 248921 | | 11,330,320/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 20,172,250/-
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை
ரத்தரங் வரம
வெற்றி எண்கள் 01 08 27 49
ஆங்கில எழுத்திற்கும் Y

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 342 | 500/- | 171,000/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுன் தங்கக்காசு 47 | - |

இந்த சனிக்கிழமை தங்கக் காசுப் பொதி 49 தங்க நாணயங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2335467

## தேவை

35 -55 வயதுக்குட்பட்ட வாகனம் (Van) ஓட்டும் அனுபவம் வாய்ந்த அலுவலக உதவியாளர் தேவை. வாகன அனுமதிப் பத்திரப் பிரதியுடன் 26.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் விண் ணப்பிக்கவும் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## உடனடி வேலைவாய்ப்பு

01.கணினி விரிவுரையாளர்கள்-2
02.கணினிப் போதனாசிரியர்கள்-2

MS Office,Open Office.org,Graphic Desining ஆகிய துறைகளில் போதிய அறிவும் அனுபவமும் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தகுதி, அனுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

இன்றும் நாளையும் நேரில் வரவும்.

முகாமையாளர்
உதயன் ஐ.ரி.ஐலன்ட்,
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
0212224245

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அலுவலகங்களில் இப்படியும் நடக்குமா?

## கோப்பாய் சண்முகம்

### கதையோரு செய்தி

வடமாகாண தலைமை அரச அலுவலகம் எல்லாம் இப்ப யாழ்ப்பாணத்தில் வந்து புதிதாகத் திறந்து இயங்குகிறது. அந்த அலுவலகங்களில் வேலை செய்கின்றவர்களுக்குத் தனியாக ஒரு பஸ் ஓடுது. இதைஏன் சொல்லுறன் என்று பார்க்கிறியளா அந்த அலுவலகம் ஒன்றில் தான் போனவாரம் ஒரு பிரச்சினை நடந்து போச்சு. அந்த அலுவலகத்தில் நடந்த பிரச்சினையை வெளியே போக விடாமல் அதிகாரி பார்த்தபோதும் அந்த செய்தி கசிஞ்சு போச்சு. கடந்த 11 ஆம் திகதி விழாக்கிழமை மாலை 4.30 மணி இருக்கும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடமாகாண தலைமை அரச அலுவலகம் ஒன்றின் முன் வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன் . அந்த அலுவலகப் பணியாளர்கள் எல்லோரும் வேலை முடிந்து பஸ்ஸுசுக்காக காத்துக் கொண்டு நின்றார்கள். நானும் அவர்கள் எல்லோரையும் பார்த்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன் . அந்த அலுவலக வாசல் தாண்டும்போது சடீர், பிடீர் என்று ஒருசத்தம் வந்தது. எங்கிருந்து வருகிறது என்று திரும்பிப் பார்த்தேன். அந்த அரச அலுவலகத்தில் இருந்து தான். இளம் அரச அலுவலர் ஒருவருக்கு வயதான அரச அலுவலர் கன்னத்தில் அடித்துக் கொண்டிருந்தார். அந்த இளம் அரச அலுவலரும் வாங்கிக் கொண்டு இருந்தார். 4 அடி விழுந்தது. ஆனால் அடி வாங்கிய அந்த இளம் அரச அலுவலர் எந்த விதமான பதட்டமும் இல்லாமல் அடியை வாங்கிவிட்டு, அடி வாங்கியது போல் இல்லாமல் அந்த வயதுபோன அலுவலருக்கு மரியாதை கொடுத்து நின்றார்.

அடித்த அந்த வயது போன அலுவலர் களைத்துப்போய் இருப்பது அவர் வாயில் இருந்து வரும் வார்த்தைகளில் தெரிகிறது. ஓரமாக சைக்கிளை நிற்பாட்டி அந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்ட நான் அவர் ஏன் அடித்தார், இவர் ஏன் அடி வாங்கினார், அரச அலுவலகங்களில் இப்படி எல்லாம் அடிப்பாங்களோ என்று எனக்குள்ளே கேள்வியைக் கேட்டுக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்றேன்.

வீட்டுக்கு வந்தபோதும் அவர் அடித்த சம்பவம்தான் நினைவுக்கு வந்து கொண்டிருந்தது. எப்படியாவது என்ன நடந்தது என்று அறியவேண்டும் போலிருந்தது.

வடமாகாண இன்னொரு தலைமை அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் எனக்கு நல்ல பழக்கம். அவரிடம் சென்று கேட்போம்என்று அவர் வீட்டுப் பக்கம் சென்றேன். இரவு 7மணி இருக்கும், அவர் வீட்டுக்கேற்றைத் தட்ட நாயும் விட்ட பாடில்லை, குரைக்க ஆரம்பித்து விட்டது. நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு அவரும் வாசலுக்கு வந்து, என்னைப் பார்த்ததும் உள்ளே வரும்படி அழைத்தார். சைக்கிளை வெளியே விடாமல் வீட்டக்குள்ளேயே உருட்டிச் சென்று ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு அவரது வீட்டுப் போட்டிக் கோவில் இருக்கும் கதிரையில் போய் உட்கார்ந்தேன். அவரும் வந்து எனக்கு எதிரே உட்கார்ந்தார்.

என்ன இந்த நேரம் வந்தனியள் என்றார். ஒரு சம்பவம் நடந்திருக்கிறது அதைப்பற்றிக் கேட்க வந்தேன் என்றேன். என்ன சம்பவம் சொல்லும் என்றார். உடனே அந்த அரச அலுவலகத்தில் நடந்த சம்பவத்தை ஒன்றும் விடாமல் சொன்னேன். அதைக் கேட்டுவிட்டு எந்தவித தயக்கமும் இன்றி நானும் அறிந்தேன் என்று சொல்ல ஆரம்பித்தார். அந்த அலுவல கத்தில் அதிகாரியாக இருப்பவருக்கு ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி உள்ளதால் மேலதிகாரிக்கு ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி இல்லாதால் எந்த வேலை என்றாலும் அவரையே நாடுவார். இதனால் இவருக்கும் மேலதிகாரிக்கும் நல்ல உறவு. எது வேணுமெண்டாலும் இந்த அதிகாரிக்கு மேலதிகாரி செய்துகொடுப்பார். அதனால் இந்த அதிகாரி தான் நினைச்சதை அலுவலகத்தில் சாதிப்பார். திருகோணமலையில் இந்த அலுவலகம் இருக்கும் போது அங்கே இவர் தனக்குக் கீழேயுள்ள பணியாளர் ஒருவருக்கு கண்டபடி அடித்துள்ளார். இந்த சம்பவத்தை அறிந்த அந்த மேலதிகாரி அடிச்சது சரியோ, பிழையோ என்று அறியாமல் அடி வாங்கினவரை இடமாற்றம் செய்துவிட்டார்.

ஏனெனில் அந்த மேலதிகாரிக்கு இந்த அதிகாரி வேண்டப்பட்டவர் ஆவார். இப்பொழுது அந்த அலுவலகம் யாழ்ப்பாணத்துக்கு வந்ததால் இங்க வந்தும் தன்னு டைய ஆட்டத்தை ஆட வெளிக்கிட்டுட்டார். என்னை எவரும் தட்டிக் கேட்க முடியாது என்ற இறுமாப்பில், தலைக் கனத்தில் தலை கால் எது என்று தெரியா மல் பாட்டுப் போடா மல் ஆடுகின்றார். இந்த அதிகாரிக்கு நிக்கொட்டுக்கு இடமாற்றம் வந்த போது இந்த அலுவலக பணியாளர்கள் அனைவரும் சந்தோஷப்பட்டனர். எங்களை விட்டு துன்பம் ஒன்று விலகிப் போகுது என்று. ஆனால் மேலதிகாரியால் இவரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது. சந்தோஷப்பட்ட பணியாளர்கள் இதனால் மீண்டும் சோர்வடைந்தனர். யாழ்ப்பாணம் வந்ததில் இருந்து கீழ் நிலைப் பணியாளர்களுடன் தேவையில்லாத பிரச்சினையை ஏற்படுத்திய வண்ணமே இருப்பார்.பெண் பணியாளர் களைப் பார்த்தால் முழுப்பல்லையும் காட்டிக் கொண்டு இருப்பார். தனது அதிகாரி வேலையைப் பாராமல் பணியாளர் ஒவ்வொருவருக்குள் பிரச்சினையை ஏற்படுத்தும் கோள்மூட்டுற கீழ்த்தனமான வேலையையும் செய்வார் என்றால் பாருங்களேன். இவர் அதிகாரியோ அல்லது நாராயணனோ என்று தெரியாமல் உள்ளது என்ற அவர், போன் அடிக்கிற சத்தம் கேட்டு அறைக்குள் போனார்.

போன் கதைத்து விட்டு வந்தவர் தொடர்ந்தார். எனது நண்பன் ஒருவன் அந்த அலுவலகத்தில் வேலை செய்கிறான். அவன் தான் சொன்னான் இந்த அடித்த சம்பவத்தை. ஏன் என்று கேட்டேன். வேலை முடிந்து எல்லோரும் பஸ்ஸுக்காக அலுவலகத்துக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கின்ற போது அந்த அதிகாரி அலுவலகத்தில் இருந்தார். அவரைத் தேடி அலுவலகத்துக்கு யாரோ ஒருவர் வர அந்தத் தகவலைத் சொல்லுவதற்காக அந்த அலுவலகத்தில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர் ஒருவர் அதிகாரியின் அறைக்குள் சென்று விட்டார். எப்படி உள்ளே வருவாய் என்று கேட்டு கீழ் நிலைப் பணியாளருக்கு அடி விழுந்தது. உள்ளே என்ன நடந்தது? அந்த அதிகாரி என்ன செய்து கொண்டிருந்தார் என்று சொல்ல எனக்கு வெட்கமாய் இருக்கு என்றார். பரவாயில்லை சொல்லுங்கோ என்றேன். வேறென்ன இப்ப எங்கட யாழ்ப்பாணத்தில் கூட நடக்கிற சம்பவம் தான் என்று அந்த சம்பவத்தைச் சொல்லி முடித்தார்.

சரிவாறன் என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டன். பார்த்தியளா இப்ப யாழ்ப்பாணத்தில கூட நடக்கிற சம்பவம் என்றால் அது அரச அலுவலகங்களில் நடக்கிறது. எந்த தங்கு தடையும் இன்றி தாராளமாக நடக்கிறது. இதைத் தட்டிக் கேட்க மேலதிகாரி கடமையுடன் செயற்படு வாரா அல்லது கண்டும் காணாமல் இருப்பாரா.

## 9 ஆவது சர்வதேச மொழிகள், அபிவிருத்தி மகாநாடு

*“மொழி மற்றும் சமூக ஐக்கியம்”*

இணைந்து நடத்துபவர்கள்
தேசிய மொழிகள் மற்றும் சமூகஒருமைப்பாட்டு அமைச்சு
கல்வி அமைச்சு
GIZ இலங்கை
(Deutsche Gesellschaft fur InternationaleZusammenarbeit, முன்னாள் GTZ)
மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (The British Council) இலங்கை

2011 ஒக்ரோபர் மாதம் 17 தொடக்கம் 19 ஆம் திகதிவரை
கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெறும்

தனிநபர்களும் குழுக்களும் கீழ்வரும் உப தொனிப்பொருள்களின் கீழ் தமது அமர்வு (Session) முன்மொழிவுகளை 2011 ஓகஸ்ட் 26 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

- ❖ மொழிக் கொள்கை - மொழி உரிமைகள், மொழிக் கொள்கை, இணைப்பு மொழியாக ஆங்கிலம்
- ❖ மொழியும் அடையாளமும் - தனி, இரு மற்றும் பல்மொழியியல், தேசிய மற்றும் பிரதேசமொழிகள், உலகமொழிகள்
- ❖ மொழியும் பொருளாதாரஅபிவிருத்தியும் - தொழிலுக்காகமொழி, சமூக அசைவியக்கம், முகாமைத்துவம் மற்றும் உலகப் பொருளாதாரம்
- ❖ மொழியும் கல்வியும் - பாடவிதானங்கள் மூலமாக மொழியும் சமூக ஒருமைப்பாடும்
- ❖ மொழியும் கலைகளும் - நிகழ்த்தப்படும் மற்றும் நுண்கலைகளின் மொழி இணைவும் (Fusion) உள்ளீர்ப்பும் (Inclusion)

மாநாட்டு தொனிப்பொருள்களுக்குஏற்ப 50 சமாந்தர அமர்வுகள் இடம்பெறும்.

- ❖ இடைவினை - உங்கள் அளிக்கை 20 நிமிடத்துக்கு மேற்படலாகாது. அதனகத்துப் பின்னர் 40 நிமிடங்கள் கேள்விபதில் அல்லது குழுக் கலந்துரையாடல்
- ❖ தலைமைதாங்குபவர் அனுசரணையாளராகச் செயற்படுவார்
- ❖ அனுபவங்களைப் பகிர்தல் மற்றும் இரு வழி விவாதங்களை வலுப்படுத்துவதாக அமர்வு இருக்கவேண்டும்
- ❖ அனுபவம், கற்றபாடங்கள், விடய ஆய்வுகள் மற்றும் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல்
- ❖ மொழி, அபிவிருத்தி மற்றும் சமூக ஐக்கியம் ஆகிய தொனிப் பொருள்களில் நேரடித் தொடர்புடையவைகள்
- ❖ இலங்கைக்கும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் பொருத்தமானவை

போன்றவற்றை உள்ளடக்கி இருக்கும்.

அமர்வு முன்மொழிவுகள் கீழ்வருவனவற்றை குறிப்பிட்டிருத்தல் வேண்டும்

- ❖ சமர்ப்பிப்பவரின் பெயர், தலைப்பு, நிறுவனம், மின்அஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இல.
- ❖ அமர்வுத் தலைப்பு
- ❖ முன்மொழிவு தொடர்புபடும் தொனிப்பொருள்
- ❖ 300 சொற்களுக்கும் மேற்படாத சுருக்கக் குறிப்பு
- ❖ தேவையானவளங்கள் (projector, sound, flip chart, pin boards etc.)

அமர்வு முன்மொழிவுகள் மாநாட்டு கட்டுரை தெரிவுக் குழுவினால் மதிப்பிடப்படும். மாநாட்டு தொனிப்பொருள்களுடனான பொருத்தப்பாடு, பார்வையாளர்களை ஈர்த்துவைப்பதற்கான சக்தி, தனித்துவம், ஒட்டுமொத்தத் தெளிவு, நிறுவனம் மற்றும் தரம் என்பன கருத்தில் கொண்டுதெரிவுசெய்யப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் 2011 செப்ரெம்பர் 19 ஆம் திகதியளவில் அறிவிக்கப்படும்.

**முன்மொழிவுகளை http://www.languageandsocialcohesion.org/Content/CallForPapers.htm என்ற வலைத்தளத்துக்கு அல்லது manju@pip.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ள படிவத்தினைப் பயன்படுத்தி அனுப்பலாம்.**

**தயவுசெய்து கட்டுரையை இந்தச் சந்தர்ப்பத்தில் அனுப்பவேண்டாம்.**

giz Australian Government AusAID BRITISH COUNCIL

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி அல்போன்சஸ் அத்தனாசியார்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி அல்போன்சஸ் அத்தனாசியார் 17.08.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சுவாம்பிள்ளை அத்தனாசியார் - மேரியோசப்பின் தம்பதியரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்ற திரு.திருமதி நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ் தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தியின் அன்புக் கணவரும் றெறன்சின் அன்புத் தந்தையும் யாழினியின் அன்பு மாமனும் ஜோசுவா, ஜெசிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அத்தனாசியார், தார்க்கம்மா, திரேசம்மா, ஜேற்றூட் மற்றும் லீமா, றீற்றா, மேரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பேளி, டேவிட், திலகநாதன், குணநாதன், றஞ்சினி, மல்லி, காலஞ்சென்றவர்களான ஜோசவ், அந்தோனிப்பிள்ளை செல்லையா, பெனடிக்ற் ஜெயநாதன், அருமைநாதன் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரள்ளை A.F. Raymonds மலர்ச்சாலையில் நாளை (20.08.2011) சனிக்கிழமை மு.ப. 9 மணி முதல் வைக்கப்பட்டு 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு இறுதி ஆராதனையைத் தொடர்ந்து பொரளை கனத்தை மயானத்துக்கு இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/1, [illegible]டை ஒழுங்கை,
[illegible]வத்தை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 ஒகஸ்ட் 2011 வெள்ளிக்கிழமை

# ௨ ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சாவகச்சேரி கோயில் குடியிருப்பை பிறப்பிடமாகவும்
சுதுமலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் பாலசுப்பிரமணியம் குகனேசன்

(பிரபல வர்த்தகர், திருநெல்வேலி)

**மலர்வு**
**12.02.1956**



**உதிர்வு**
**10.09.2009**

இரண்டு ஆண்டுகள் இன்றோடு
கடந்து போனதப்பா- ஆனால்
இன்னும் உங்கள் நினைவுகளோடு...
மனிதரில் மாணிக்கமாய்
மிளிர்ந்து எம் வாழ்வுக்கு
ஒளியூட்டிய உத்தமனே!
நீங்கள் அணைந்து போனதால் - இன்று
ஒளியின்றி தவியாய்த் தவிக்கின்றோம்
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய
எங்கள் தந்தையே! இன்று
கனத்த நெஞ்சத்தோடு உங்களைத் தேடுகின்றோம்
மீண்டும் வருவீர்கள் என்ற நம்பிக்கையில்
மறு ஜென்மத்திலாவது உங்களைச் சீராட்டும்
தந்தையாக நாம் பிறக்க வேண்டும்

**சுதுமலை கிழக்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்**
**ஜனா (பேரமகன் - பிரான்ஸ்)**

(7012).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணாவில் மக்களின் துயர் தீர்க்கும் கந்தசுவாமி ஆலயம்



(சென்ற வாரத் தொடர்ச்சி)

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் சைவம் வளர்ந் தோங்கும் பதியில் வைரவப் பெருமானின் காக்கும் கருணையுடன் கலியுக வரதனாக வீற்றிருக்கிறார். கந்தப்பெருமான் வீற்றருளும் திருக்கோவிலாம் அருள்மிகு இந்த கந்த சுவாமி (வைரவர்) தேவஸ்தானத்தில் அருட்பெருந் திரு சங்கராச்சாரிய சுவாமிகள் எடுத்துச் சொல்லியுள்ள பஞ்சாயத்தள ஆலய வழிபாட்டு முறை இங்கே இயற்கையாகவே அமைந்துள்ளது.

இதற்கமையவே கலியுகவரதனாம் கந்தப் பெருமான் இந்த ஆலயத்தில் குடிகொண்டுள் ளார். எந்தப் பெருமானை வணங்கினாலும் நல்லருள் புரியும் அருள் நோக்கத்தோடு முறையே வலது புறம் விநாயகர், இடது புறம் மகா விஷ்ணு, கிழக்குக் நோக்கி தம்மையும் எம்மையும் நோக்கிய வண்ணம் மனோன் மணி அம்பாள், அதற்கு நடுவனாக நவக்கிரக தேவர் கள் சூழ அமைந்திருக்கிறார். இவர்கள் எல்லோரையும் அடியவர்களையும் அருள்பாலித்துக் கொண்டு ஷேத்திர பாலன் எனும் நாமத்தோடு வடக்கு நோக்கி வீற்றிருக்கும் வைரவப் பெருமான் ஆகிய தேவ மூர்த்தங்கள் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்.

இவ்வாறான தெய்வீகச் சிறப்புமிக்க இந்த ஆல யத்தில் பல்வேறு விழாக்கள் காலத்துக்குக் காலம் நடத்தப்படுகின்றன. முருகப்பெருமானுக்கு சாந்தீக மகோற்சவ பெருவிழா பங்குனி உத்தரத்தை தேர்த் திருவிழாவாகக் கொண்டு 10 நாள்கள் நடைபெறு கிறது. அதுமட்டுமல்ல ஒவ் வொரு மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத் திரத்திலே கார்த்திகைத் திருவிழா விசேட பூசை வழிபாடுகள், அபிஷேகம் ஆகியவற்றுடன் நடைபெறும்.

தைப்பூசம், வைகாசி விசாகம் ஆகிய நாள் களில் விசேட வழிபாடுகளும், கந்தசஷ்டி விரதம் நூற்றுக்கணக்கான அடியார்களால் இந்த ஆலயத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. நவராத்திரி விழாவானது இந்த ஆலயத்தில் உள்ள மனோன் மணி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு களுடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

பூதேவி, ஸ்ரீதேவி சமேத மகாவிஷ்ணு பெரு மானுக்கு கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி போன்றவை விழா வாக நடத்தப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மாதத்தில் வருகின்ற பரணி நட்சத் திரத்தின் போது வைர வப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை உற்சவமும் இடம் பெறுகின்றது. இது தவிர தை மாதத்தில் வரும் முதல் ஞாயிற் றுக்கிழமை வைரவப் பெருமானுக்கு விர தம் அனுஷ்டிக்கப் பட்டு வழிபாடுகள் இடம் பெறுகின்றன. மேலும் ஆனி மாத அனுசத்தை இறுதி நாளாகக் கொண்டு பத்து நாள்கள் லட்சார்ச்சனை பெருவிழா மேற் கொள் ளப்படுகிறது. மேலும் சித்திரகுப்த விரதம், திரு வெம்பாவை போன்ற ஏனைய விசேட விழாக் களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. இந்த ஆலய அடியார்கள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 5 மணி தொடக்கம் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆலயத்தில் பெருந்திருவிழா ஆரம்பிக்கப் பட்ட காலம் தொடக்கம் தீர்த்தத் திருவிழாவின் போது எம் பெருமான் தீர்த்தமாடக் குளம் இல்லை யென அடியார்கள் மனதில் கவலையாக இருந்தது. இந்தக் குறையைப் போக்க அடியார்கள் ஒன்றி ணைந்து "திருத்தணிகை தீர்த்தத் தடாகம்" என்னும் அறுகோண வடிவ தடாகத்தை அமைத்து கடந்த 22.03.2008 தொடக்கம் தீர்த்தத் திருவிழாவுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆலயத்தில் முருகப் பெருமான் பிர திஷ்டை செய்தகாலம் தொடக்கம் நூற்றுக்கணக் கான அடியவர்கள் கந்தசஷ்டி விரதம் அனுஷ் டித்து வருகின்ற போதிலும் முருகப் பெருமான் சூரனை சங்காரம் செய்கின்ற காட்சியைக் காண ஏனைய கோயில்களுக்குச் சென்றுவந்தனர். மேற்படி ஆலய அடியவர் ஒருவரின் நிதி உதவி யுடன் 2010 ஆம் ஆண்டு புதிய சூரன் ஆலயத் துக்கு வழங்கப்பட்டு சூரசம்ஹாரம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**ஐயந்தன்**

ஆலயப் பெருந்திருவிழாவின் போதும் லட்சார்ச் சனைப் பெருவிழாவின் போதும் அடியவர்களால் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக அன்னதானம் ஆலய மண்டபத் திலேயே வழங்கப்பட்டு வந்தது. ஆலய அடிய வர்களின் முயற்சியினால் ஆலயத்துக்கு அன்ன தான மண்டபம் இல்லையென்றிருந்த நிலை மாற் றப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "அமுத சுரபி" என்னும் திருத் தொண்டர் மடம் கடந்த 27.02.2011 இல் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு எல்லா வகை யிலும் சிறப்புப் பெற்று நுணாவில் மக்களை இந்த ஆலயம் காத்து வருகின்றது. (முற்றும்)

# இந்திய மீனவர்கள் 4 பேர் கொலை; இலங்கைக் கடற்படை மீது சந்தேகம்

## மதுரை மேல் நீதிமன்றில் வழக்கு

இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் 4 பேரை சித்திரவதை செய்து கொலை செய்தமை தொடர்பாக இந்திய குற்றப் புலனாய்வுத் துறையினர் விசா ரணை மேற்கொள்ள உத்தர விடக் கோரி மதுரை மேல் நீதி மன்றில் மனுத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் மண் டபம் பகுதியைச் சேர்ந்த மீன வர்கள் விக்டஸ், அந்தோனி ராஜ், மாரிமுத்து, ஜான்பால் ஆகி யோர், ஏப்ரல் 2ஆம் திகதி கட லுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் கரை திரும்ப வில்லை. விக்டசின் சகோதரர் நல்லதம்பி, அந்த மீனவர்களைக் கண்டு பிடிக்க கோரி மதுரை மேல் நீதி மன்றில் ஆள் கொணர்வு மனுத் தாக்கல் செய்தார்.

விக்டஸின் உடல் இலங்கை யிலும், அந்தோணியின் உடல் கண்கள் இல்லாத நிலையில் திரு வாடானை அருகே சாலி யக்குடி கடற்பகுதியிலும், ஜான் பாலின் உடல் பாசிப்பட்டினத் திலும், மாரிமுத்துவின் உடல் தலையில்லாத நிலையில் புதுக் கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்திலும் மீட்கப்பட்டன.

நல்லதம்பி தாக்கல் செய்த ஆள்கொணர்வு மனு, மேல் நீதி மன்ற நீதிபதிகளான ஜனார்த் தனராஜா, அருணா ஜெகதீசன் ஆகியோர் முன்நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது.

நல்லதம்பி சார்பில் ஆஜரான சட்டத்தரணி அழகுமணி, சி.ஜே. ராஜன் ஆகியோர், 4 மீனவர் களின் கொடூர மரணம் குறித்து குற்றப் புலனாய்வுத் துறையி னரை விசாரிக்கக் கோரி மனுத் தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில், சடல மாகக் கண்டெடுக்கப்பட்ட மீனவர் களின் உடல்களிலும் காயங்கள் இருந்துள்ளதுடன் அவர்களின் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்தன. கொடூரமான முறை யில் சித்திரவதை செய்து அவர் கள் கொல்லப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்தியா விடம் தோற்ற ஆத்திரத்தில் இலங்கை கடற்படையினர் 4 மீனவர்களையும் கொடூரமாகக் கொலை செய்திருக்கலாம் என அஞ்சுகிறோம்.

இலங்கை கடற்படையால் நூற்றுக் கணக்கான தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ள னர். எனவே இந்த வழக்கில் குற் றப் புலனாய்வுத் துறை விசா ரணைக்கு உத்தரவிட வேண் டும் எனத் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, குற்றப் புல னாய்வுத்துறை இணை இயக் குனர் மற்றும் மண்டபம் கடற் படை காவல் நிலைய பொலிஸ் அதிகாரி ஆகியோர் 4 வாரங் களுக்குள் இந்த மனுவுக்கு பதி லளிக்க வேண்டும் என்று நீதி பதிகள் உத்தரவிட்டனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)




நல்லூர் கந்தன்
மஹோற்சவம்

மனக் குறைகள் தீரும்
நல்லூருக்கு வாருங்கள்
எங்கள்
முருகன் நல்லாட்சி
புரிகின்றான்
அவ்வழகைப் பாருங்கள்
மனக்குறைகளைக் கூறுங்கள்
அத்தனையும்
அவன் தீர்த்து
வைப்பான்
அவ்வற்புதத்தைப்
பாருங்கள்
சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை.

உதித்தனன் முருகன்
பல்லவி
அருளோங்கு நல்லூரில் அருள்பாலித்திடவே
அழகன் முருகன் வந்துதித்தனனே
அனுபல்லவி
பொருளோடும் புகழோடும் சிறந்தோங்கி வாழ
செங்கோலாய் செவ்வேலை நன்றெனவே கொண்டு
சரணம்
வள்ளலாய் அருளைப் பல்கிப் படைத்தருளும்
நல்லையினை நாடிவரும் நல்லவர்க் கெல்லாம்
துல்லியமாய் துன்பமே இல்லாதகற்றி
பாரினிலே மேன்மையுடன் வாழ வழி செய்ய
சுபாஷினி பிரணவன், அச்சுவேலி.

தேன் சொரியும் நல்லை
தேன் சொரியும் நல்லையிலே
திரள்கின்ற உன் னடியார்
வான்முகட்டை எட்டு முந்தன்
வளங்காணத் துடிக் கின்றார்
கைகூப்பி உனை வணங்கக்
காரியங்கள் கை கூடும்
செய்கருமம் ஓங்கி நிதம்
செகத்தினையே வாழ வைக்கும்
உள்ளம் உயர்வு பெற
உனை பழுத்த வேண்டுமையா
கள்ளம் கரைந் தகல (க்)
காசினியே தேசு பெறும்
விழிவழியே உனைத் துதிக்க
விக்கினங்கள் தீருமையா
ஒளிபரப்பி உலகாளும்
உன்னதமே ஓங்குமையா
- கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

நீதிக்கு உரமிடுவாய்...!
சங்கிலி மன்னன் ஆட்சி செய்த நல்லூர்ப் பதியினிலே
பங்கமின்றி அமர்ந்திருந்து அருளாட்சி செய் முருகா
பொங்கி எழும் மலங்கள் அகற்றி மனிதத்தை ஈர்த்திடுவாய்
செங்கோல் உயர்ந்து என்றும் நீதிக்கு உரமிடுவாய்
மங்களமான காரியங்கள் மகிழ்வுடனே கைகூட
எங்களுடன் கைதருவாய் நல்லைக் குமரா கனிந்து
மானந்தன், அல்வை.

பித்தனாய்ப் பிதற்றுகின்றேன்
சத்தியம் நீதி நேர்மை
சமத்துவம் சமையப் பெற்று
இத்தலம் இறும்பூ தெய்த
இனியவே லவனே வாராய்
பித்தனாய்ப் பிதற்று கின்றேன்
பீடுடை வாழ்வு கொள்ள
அத்தனாய் உலகை யாண்டு
அருள்தனை ஈகுவாயே...!
விதுரன் தங்கேஸ்வரன், கம்பர்மலை.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
Jaffna Electrical
Show Rooms :
141,Power House Road, Jaffna. T.P: 021 222 5766
No.135, A-9 Road, Kilinochchi. T.P: 021 228 0008







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - கொழும்பு பஸ்களில் கப்பம் கேட்கும் பொலிஸார்

## பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 19

யாழ். - கொழும்புக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ்களில் தமிழ் பஸ் சாரதிகளிடம் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கப்பம் பெறுகின்றனர் என பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். - கொழும்புக்கு இடையில் இரவு நேர சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகளிடம் 100 ரூபா முதல் 200 ரூபா வரையில் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கப்பம் பெறுவதை நேரில் கண்ட ஊடகவியலாளர் ஒருவர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

சிலாபம், குருநாகல், மதவாச்சி, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் கடமையில் ஈடுபடும் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் இவ்வாறு கப்பம் பெறுகின்றனர் என இந்த ஊடகவியலாளர் கூறியுள்ளார்.

பஸ் சாரதிகளுக்குத் தண்டப்பணம் விதிப்பதாக எச்சரிக்கும் பொலிஸார், தண்டப்பணம் விதிப்பதற்குப் பதிலாக சாரதிகளிடம் பணம் பெறுகின்றனர் என ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, ஒரு நாளுக்கு ஆயிரம் ரூபா வரை சாரதிகளிடம் இருந்து பொலிஸார் பெற்று வருகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொள்வதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (சி)



யுத்தத்திற்குப் பின்னர் 'இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்' எனும் தலைப்பிலான ஆராய்ச்சி மாநாடு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

# எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் முதியவர்களுக்கான உதவித்திட்டம்

கொழும்பு, ஓக.19

அடுத்த இரண்டு வருடங்களில் நாடளாவிய ரீதியில் முதியவர்களுக்கான வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும் என சமூக சேவைகள் அமைச்சர் அ.பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும்சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுநுவர டி. பி. விஜேதுங்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

எனது அமைச்சின் மூலம் மக்களுக்கு பல சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முதியவர்களுக்கு கொடுப்பனவாக மூவாயிரம் ரூபா வழங்கும் திட்டத்தை எதிர்வரும் இரு வருடங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சர்வதேச நாடுகளின் உதவி பெறப்படும்-என்றார்.

இந்த நிகழ்வில் உயர்கல்வி அமைச்சர் எஸ். பி. திசாநாயக்கவும் கலந்து கொண்டார். (ச)

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு அரசு இணக்கம்

## பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக 19

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் அரசு ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென் பல போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இன்று ஆயிரத்துக்கும் அதிகமான படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கான விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் வேலைவாய்ப்பற்ற தமிழ்ப் பட்டதாரிகள் உடனடியாக எனது அலுவலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வார்களாயின் அவர்களுக்கு உடனடியாக வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரக்கூடியதாக இருக்கும். அதே போல் மேல்மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கும் மேல்மாகாண கல்வி அமைச்சினூடாக ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொடுக்கப்படும்.

கடந்த மாதம் வழங்கப்பட்ட 178 மேல்மாகாண தமிழ் ஆசிரியர் நியமனங்களில்; 26 தமிழர்களுக்கும் 152 முஸ்லிம் சமூகத்தினருக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

வேலைவாய்ப்புகளுக் காக தமிழ் பட்டதாரிகளும், தகுதி பெற்ற வர்களும் எமது சமூகத்தில் முன்வராமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்- என்றார். (ச)

**வீடு விற்பனைக்கு**

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.
தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0772267191.

**மொழி வகுப்புகள்**

GERMAN, SWISS மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் A1, EXAM இற்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
அடுத்த வகுப்புகள் 01.09.2011 ஆரம்பமாகிறது.
தொடர்புகளுக்கு:- No.10, PALALY ROAD, JAFFNA. 077 160 4823.

**கிளி/ அருள்மிகு கந்தசாமி தேவஸ்தான**

**விசேட பொதுக் கூட்ட அழைப்பு**

இடம்: ஆலய மண்டபம்
காலம்: 20.08.2011 சனிக்கிழமை.
நேரம்: மு.ப. 10 மணி

இவ்வாலய பொதுச் சபை உறுப்பினர்கள், திருவிழா உபயகாரர்கள், தேர்த் திருப்பணிச்சபை உறுப்பினர்கள், விஷேஷ தின உபயகாரர்கள், கந்தசஷ்டி உபயகாரர்கள், நிர்வாக உறுப்பினர்கள், தர்மகர்த்தா உறுப்பினர்கள், முருகன் அடியார்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து 03.09.2011 ஆரம்பமாகும் திருவிழா விடயங்களை கலந்துரையாடி தீர்மானங்களை நிறைவேற்றுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்.

ச.ஸ்ரீகௌரிபாலா.
தலைவர்

(சி/306)

**80ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

**(அமுத விழா)**

2011.08.19



இணுவில்
**செல்லத்துரை சோதிப்பெருமாள்**
(முன்னாள் அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)

இன்று (2011.08.19) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 80 ஆவது பிறந்தநாளை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இணுவில் கந்தப்பெருமான் வயிரவப்பெருமான் ஆசியுடன் பல்லாண்டு இனிது வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்: சோ.இராசன், 'சரஸ்வதி மகால்', மஞ்சத்தடி, இணுவில்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7002)

**விற்பனைக்கு**

சொக்கட்டான் பந்தல், மணவறைகள், கதிரைகள் போன்ற பந்தலுக்குரிய பொருள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு -0777179778

**வீடு வாடகைக்கு**

யாழ். புகையிரத நிலையத்திற்கு அருகில் நான்கு அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு -021-222-9210
0776011625

**தவறிவிட்டது**

இல.41, சென். பற்றிக்ஸ் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய தனதாசன் கிரிதரன் என்பவரின் தே.அ. அ (781934224v) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரிக்கோ அல்லது இல.5, சென். செபஸ்ரியன் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோ தொடர்பு கொள்ளவும்.

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள C50 சுப்பர்க்கப் ஓண்டி மோட்டார் சயிக்கிள் விற்பனைக்கு தாவடி கொக்குவிலில் அத்துடன் லிஸ்ரர் எஞ்சினுக்கு உரிய [illegible] விற்பனைக்கு.
தொடர்பு: 0777102200, 2226368

# போலியான பிறப்புச் சான்றிதழை தயாரித்த உப முகவர் கைது

கொழும்பு, ஓக.19

சவூதியில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டு சிறையிலிருக்கும் ரிஸானா நபீக்கிற்கு போலியான பிறப்புச் சான்றிதழ் ஒன்றைத் தயாரித்து வழங்கி அவரை சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்பொன்றுக்கு அனுப்பிவைத்த உப முகவரை கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் வைத்து இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரிஸானா சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது அவரது உண்மையான வயது 17 ஆகும்.

ஆனால் அவரது வயதை 22 ஆகக் காட்டும் போலி பிறப்புச் சான்றிதழ் ஒன்றைத் தயாரித்து அதற்கமைய அவருக்கு வெளிநாட்டுக் கடவுச்சீட்டொன்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது.

ரிஸானாவுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் ரிஸானாவின் தாயாரிடம் வாக்குமூலமொன்று பெறப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவரின் வயது பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

**ஆள்கள் தேவை**

யாழ். மாவட்டத்துக்குள் பொருள்களை வாகனத்தில் கொண்டு சென்று விநியோகிக்கும் ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

1. சாரதி - கனரக சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்.
2. பணம் வசூலிப்பவர்- சிட்டையின் பிரகாரம் பொருள்களை (CASH Collecor) விநியோகித்து பணத்தை வசூலித்தல் வேண்டும்.
3. உதவியாளர்கள்- பொருள்களை கடைகளுக்கு விநியோகிப்பவர்.

தொடர்புகளுக்கு:- 077 3041447.

**கடை ஏலம் போடுதல்**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவத்திதை முன்னிட்டு கடை ஏலம் போடவுள்ளோம். பாக்கிப் பணம் செலுத்தாதோர் ஏலத்தில் கலந்துகொள்ள முடியாது.

இடம் : தெல்லிப்பழை இந்து இளைஞர் பணிமனை
காலம் : 20.08.2011 சனிக்கிழமை
நேரம் : மு.ப. 10 மணி

இணைச் செயலாளர்

(7008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹசாரேயின் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்கா காங்கிரஸ் குற்றச்சாட்டு; வோஷிங்ரன் உறுதியாக மறுப்பு

டில்லி, ஒக 19

இந்தியாவில் ஊழலுக்கு எதிராக அண்ணா ஹசாரே நடத்தும் போராட்டத்தில் அமெரிக்கா பின்னணியில் இருப்பதாக காங்கிரஸ் கட்சி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தியாவில் நடக்கும் ஒரு போராட்டத்துக்கு ஆதரவாக அமெரிக்கா ஏன் பேச வேண்டும் எனக் கேட்டுள்ள காங்கிரஸ் கட்சி இந்தப் போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இருக்கலாம் என்று சூசகமாகத் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவை சீர்குலைய வைக்க மறைமுகமாக முயற்சிக்கும் சக்தி குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் வரைவு லோக்பால் மசோதாவை திணிப்பதன் மூலம் அண்ணா ஹசாரே குழுவினர் பிளாக்மெயில் செய்கின்றனர் என்று குற்றம்சாட்டை முன்வைத்துள்ளது. நாடாளுமன்றத்தின் கண்ணியத்துக்கு இழுக்கு ஏற்படும் எதையும் சகித்துக் கொள்ள முடியாது.

இதுகுறித்து கங். கட்சிச் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்:

இந்தியாவில் உள்ள எந்த இயக்கத்தைப் பற்றியும் அமெரிக்கா ஒருபோதும் பேசியதில்லை. இப்போதுதான் முதன் முறையாகப் பேசி உள்ளது. மற்றவர்களுக்கு ஜனநாயகத்தின் பாதையை நாம் காட்டுகிறோம். அமெரிக்கா அதை எமக்குச் சொல்ல வேண்டியதன் அவசியம் என்ன? எனவே இது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது - என்றார் அவர்.

### அமெரிக்கா மறுப்பு

இதேவேளை அண்ணா ஹசாரே நடத்தும் போராட்டத்தின் மூலம் இந்தியாவை சீர்குலைக்கச் செய்ய அமெரிக்க முயற்சிப்பதாகக் காங்கிரஸ் வெளியிட்ட குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்துள்ளது.

இதுகுறித்து ஊடகங்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் விக்டோரியா நூலந்த்

இந்தியாவில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானவை என்று கூறியுள்ளார்.

மேலும் இந்தியாவை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது குறித்து ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்டபோது:

எந்த அடிப்படையில் இது போன்ற தகவல்கள் வெளியாகின்றன என்பது தெரியவில்லை. முற்றிலும் தவறான செய்திகள் இந்தியாவில் வெளியாகி உள்ளன. இந்த விவகாரத்தில் நாம் தலையிடவில்லை என்று அமெரிக்கா உறுதியான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

கருத்து சுதந்திரத்தை நாம் ஆதரிக்கிறோம். அனைத்து நாடுகளையும், அனைத்துக் கட்சிகளையும் இந்த விடயத்தில் நாம் ஊக்கப்படுத்துகிறோம். அமைதியான போராட்டத்தையும், எதிர்ப்பையும் அனுமதிக்கும் பொறுப்பு அனைத்து ஜனநாயக அரசுகளுக்கும் உள்ளது. அதே சமயம் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணியாற்ற வேண்டும் - என்று அவர் கூறினார். (வ)

## இலங்கை தமிழர் முகாம்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள்

இந்தியாவில் உள்ள இலங்கை தமிழர் முகாம்களில் வசிப்போருக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன. தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடை பெற உள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் பாலசுப்பிரமணியன் விடுத்துள்ள ஒரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இலங்கை தமிழர்கள் முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு சிறப்பு மருத்துவமுகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இதனடிப்படையில் குல்லூர் சந்தை மற்றும் மல்லாங்கிணர் முகாம்களில் நேற்று முன்தினம் முதல் இன்று வரையும், கண்டியாபுரம், அனுப்பங்குளம், செவலூர், ஆணைக்குட்டம், மொட்ட மலை ஆகிய முகாம்களில் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையிலும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறையினரால் முகாம் நடத்தப்பட உள்ளது.

இந்தச்சிறப்பு மருத்துவ முகாம்களில் பெண்களுக்கான கர்ப்ப வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். 30வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் குருதி அழுத்தம், நீரிழிவு நோய், இருதய நோய் ஆகியவை தொடர்பாக சோதனைகள் நடத்தப்படவுள்ளன என்று அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்: கோத்தபாயவின் கொடும்பாவி எரிப்பு



இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தமிழக முதல்வரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, விமர்சித்து கருத்து வெளியிட்டமையைக் கண்டித்து கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பாளையங்கோட்டை அரசு சட்டக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் நம்பிராஜன் தலைமையில் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது கோத்தபாய ராஜபக்ஷவின் உருவ பொம்மை எரிக்கப்பட்டது.

மேலும், கோத்தபாய ராஜபக்ஷ விமர்சனம் தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்வரும் 23 ஆம் திகதி நெல்லை சட்டக்கல்லூரி முன்பு உண்ணா விரதம் மேற்கொள்வோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் தண்டனைக் குறைப்பு கருத்தரங்கம்

கோவை, ஒக.19

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை தொடர்பில் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டு பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையில் இருந்து காக்கும் நோக்கில் ''மனிதம் காக்க மரணதண்டனை ஒழியட்டும்'' என்னும் தலைப்பில் நாளை கருத்தரங்கம் ஒன்று இடம் பெறவுள்ளது.

உலக மனிதாபிமானக் கழகத்தின் ஏற்பாட்டில் மேற்படி கருத்தரங்கம் கோவையில் உள்ள குசராத்தி சமாசத் தில் நாளை பிற்பகல் 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கத்தில் நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் நடுவராக அங்கம் வகிக்கிறார். கொளத்தூர் மணி, சட்டத்தரணி ம.பிரிட்டோ, இயக்குநர் மணிவண்ணன் அ.கு.இராமகிருட்டிணன், பாமரன், சட்டத்தரணி ப.பா. மோகன், கலையரசன், தொல்காப்பியன், பிரபாகரன், சட்டத்தரணி சிவக்குமார் ஆகியோர் ராஜீவ் படுகொலை குற்றவாளிகள் மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனை தொடர்பாக விவாதிக்கவுள்ளனர்.

## திகார் சிறையில் வெடிகுண்டு பரிசோதனை

திகார் சிறையில் வெடிகுண்டு வைக்கப் பட்டிருக்கிறதா என்பது குறித்து வெடிகுண்டு நிபுணர்கள் நேற்று அதிகாலை திடீரென பரிசோதனை நடத்தினர்.

ராம்லீலா மைதானத்தில் உண்ணாவிரதம் இருக்க அண்ணா ஹசாரே குழுவினர் ஒப்புக் கொண்டு சிறையில் இருந்து வெளியேற உள்ளதாக அறிவித்த பின்னர் இந்த பரிசோதனை நடத்தப்பட்டது.

இதனால் சிறைக்கு வெளியே நின்றிருந்த அண்ணா ஹசாரே ஆதரவாளர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் சிறையில் வெடிகுண்டு எதுவும் வைக்கப் பட்டிருந்ததா என்று விசாரித்த வண்ணம் இருந்தனர்.

ஹசாரே சிறையில் இருந்து வெளியே வரும்போது பயங்கரவாதத்தை உருவாக்கும் வகையில் சந்தேகத்துக்குரிய பொருள்கள் ஏதாவது வைக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவதற்காவே இந்த சோதனையை இடம்பெற்றது.

## இந்தியாவில் சிங்களவர்களுக்குப் பயிற்சியா?

### வன்மையாகக் கண்டிக்கிறார் வைகோ



சென்னை, பெரம்பூர் ரயில் பெட்டி தயாரிப்பு ஆலையில் சிங்கள அதிகாரி களுக்கு பயிற்சி அளிப்பது தொடர்பாக ம.தி.மு.க. செயலர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சென்னை, வில்லிவாக்கத்தில் உள்ள மத்திய அரசின் பெரம்பூர் ரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையில், இலங்கையைச் சேர்ந்த 12 சிங்கள அதிகாரிகளுக்கு உயர் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதை எண்ணி மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

மத்திய காங்கிரஸ் அரசு தொடர்ந்து தமிழர்களுக்கு துரோகம் செய்வதையே தங்கள் அரசின் செயற்றிட்டமாக வைத்து இருக்கிறது என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

எனவே, மத்திய அரசின் ரயில் பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலையில் சிங்களவர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடாது என்று வலியுறுத்தி ம.தி.மு.கவினர் ஐ.சி.எப். தொழிற் சாலையை முற்றுகையிட்டு கடந்த புதன்கிழமை கண்டனப் போராட்டம் நடத்தினார்கள்.

7 கோடி தமிழர்கள் குடிமக்களாக இருக்கும் இந்தியாவின் எந்த மூலையிலும் சிங்கள வர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் அளிக்கக்கூடாது என்பதோடு, அவர்களை உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன் - இவ்வாறு அந்த அறிக்கையில் வைகோ தெரிவித்துள்ளார்.

## இந்திய எல்லையில் இருந்து பாகிஸ்தான் படைகள் வாபஸ்

இந்திய, பாகிஸ்தான் வரலாற்றில் இந்தியாவால் தனக்கு ஆபத்து இல்லை என்பதை உணர்ந்து எல்லையில் இருந்து தனது படைகளை முதன் முதலாக பாகிஸ்தான் வாபஸ் பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியாகியுள்ளன.

அமெரிக்காவில் கடந்த ஜூலை 21 ஆம் திகதி நடந்த பல்வேறு நாடுகளின் ராணுவ தூதர்கள் பங்கேற்ற 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற கூட்டத்தில் பாகிஸ்தான் கலந்து கொண்டது.

இதில் பங்கேற்க இந்தியாவுக்கு அழைப்பு அனுப்பப்பட வில்லை. இந்தக்கூட்டத்தில் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் உசேன் ஹக்கானியும் ராணுவத் தூதரும் இணைந்து விளக்கம் அளிக்கையில்:

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த படைகளில் மூன்றில் இருந்து ஐந்து பிரிவுகள் வாபஸ் பெறப் பட்டுள்ளன.

அவை உட்பட மொத்தம் ஒன்பது பிரிவுகள் ஆப்கானிஸ்தான் எல்லையில் நிறுத்தப் பட்டுள்ளன. மேலும் 142 கவச வாகனங்களும், 450 பீரங்கிகளும் இந்திய எல்லையில் இருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளன.

அதேநேரம் கிழக்குப் பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மட்டும் சில படைப் பிரிவுகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. இந்த நிகழ்வுகள் அனைத்தும் பாகிஸ்தானுக்குக் கிழக்குப் பகுதியில் தான் அச்சுறுத்தல் என்ற பொதுக் கருத்தை முறியடித்துள்ளன.

ஆப்கான் எல்லையில் தலிபான்கள் மற்றும் அல்குவைதாவினரைத் தடுத்து நிறுத்த அந்தப்படைகள் அங்கு நிறுத் தப் பட்டுள்ளன.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரத்து 560 மில்லியன் செலவில் வவுனியாவில் குடிதண்ணீர்த் திட்டம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவுகிறது

யாழ்ப்பாணம்,ஒக.19

வவுனியா பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆசிய அபிவிருத்தி வங்கி 3 ஆயிரத்து 560 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டம் இவ்வாண்டு ஒக்ரோபருக்குள் முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

இந்த திட்டத்தினை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தாவிடில் நிதி மீண்டும் திரும்பி விடும் எனவே இந்த அபிவிருத்தி திட்டத்தை ஒருங்கிணைத்துச் செயற்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என வவுனியா தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் திருமதி கே. நந்தினி தெரிவித்தார்.

வடக்குமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தலைமையில் மாகாண திட்டமிடல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். பொது நூலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட வவுனியா தேசிய நீர் வழங்கல் சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் திருமதி கே.நந்தினி மேலும் தெரிவிக்கையில்;

சாஸ்திரி கூழாங்குளம் பிரதேசத்தில் இருந்து வரும் பேராறு திட்டத்தை வழிமறித்து குடிதண்ணீர்த் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதன்போது 50 விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்படும் 50 விவசாயிகளுக்கும் மாற்று காணிகள் வழங்க வவுனியா அரச அதிபரும் பிரதேச செயலரும் அதற்கான திட்டங்களை முன்வைத்துள்ளனர்.

எனவே இந்த திட்டம் ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவுபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி கூறுகையில்; விவசாயிகளின் பிரச்சினைகளை குறைத்து அவர்கள் பாதிக்கப்படாத வகையில் வவுனியா அரச அதிபரின் ஒத்துழைப்புடன் திட்டத்தை நகர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உட்படப் பல உயர் அதிகாரிகள் கலந்துகெண்டனர். (த-302)

## மோசமாகச் சேதமடைந்துள்ள வல்லிபுரக் கோயில் வீதி

யாழ்ப்பாணம், ஒக.19

மந்திகைச் சந்தியில் இருந்து வல்லிபுரம் கோயிலுக்குச் செல்லும் பிரதான வீதி கடந்த பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் பெரும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால் இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகன நெரிசல் அதிகரித்துக் காணப்படும் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வீதியால் வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்துக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் பக்தர்கள் தூக்குக் காவடி எடுத்துத் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றி வருகின்றனர். வீதியின் சேதத்தால் இவர்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## உப்பைக் கரைத்தது திடீர் மழை

நாவற்குழி, ஒக.19

ஞாயிற்றுக்கிழமை திடீரெனப் பெய்த பலத்த மழையால் கோப்பாய் - கைதடி கடற்பகுதியில் விளைந்த உப்பு மழை வெள்ளத்தில் கரைந்தது.

நீண்ட பல வருடங்களின் பின்பு இக் கடற் பகுதியில் மிகவும் வெண்மையாக விளைந்த உப்பை பொதுமக்கள் அள்ளியெடுக்க ஆரம்பித்து சில நாள்களிலேயே மழை உப்பைக் கரைத்து விட்டது. இதனால் உப்பை அள்ளிய வறிய மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர். (த-121)

## இந்தியாவில் நீதிபதிகள் மாநாடு நீதிவான் கணேசராசா பங்கேற்பு



தென்மராட்சி,ஒக.19

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா நீதிச்சேவை ஆணைக் குழுவின் அனுமதியுடன் வட இந்தியாவில் போபல் நகரிலுள்ள இந்தியாவில் தேசிய நீதிச்சேவை அக்கடமியில் கடந்த 8 ஆம் திகதிமுதல் 12 ஆம் திகதிவரை நடைபெற்ற நீதிபதிகளுக்கான மாநாட்டில் கலந்துகொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் சிறீஸ்கந்தராசாவின் தலைமையில் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

அங்கு உயர் நீதிமன்ற, மேல் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் சட்டத்துறை பேராசிரியர்களுடன் இந்திய, இலங்கை குற்றவியல் குடியியல் சட்டங்கள் தொடர்பாகவும் நடைமுறைகள் தொடர்பாகவும் கருத்தரங்கு நடைபெற்றது.

நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா தாய்லாந்திலுள்ள ஆசிய பசுபிக் பிராந்திய சர்வதேச ஜூரர்கள் சபையினால் கௌரவ அதிதியாக அழைக்கப்பட்டிருந்ததுடன் சர்வதேச ஜூரர்கள் சபையினால் சிறந்த நீதிபதியாக பாராட்டுப் பெற்றிருந்தார்.

மேலும் லண்டனில் உள்ள நோட்டிங்ஹாம் பல்கலைக் கழகம் அவருக்கு மனித உரிமைகள் காவலர் விருது வழங்கிக் கௌரவித்திருந்தது.

இவர் சர்வதேச குற்றவியல் சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகிய வற்றில் அமெரிக்காவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகமான நொட்றெடாம் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை சட்டக்கல்லூரி பண்டார நாயக்க சர்வதேச கற்கை நிலையம் ஆகியவற்றிலும் சட்டத்துறையில் இவர் பட்டங்களை பெற்றுள்ளதுடன் முகாமைத்துவத்திலும் இராஜதந்திரக் கற்கை நெறியிலும் பட்டமும் தேர்ச்சியும் பெற்றுள்ளார். (த-207)

## வாடகைக்கு

யாழ்.நகருக்கு அண்மையில் களஞ்சியசாலை (Store) ஆக பயன்படுத்தக்கூடிய பழைய கட்டடம் பாரவூர்தி நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777110383

## மரண அறிவித்தல்

### திருமதி விசுவலிங்கம் சர்வேஸ்வரி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசுவலிங்கம் சர்வேஸ்வரி 16.08.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் அப்புத்துரை - முத்தம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும் சுமதி (கனடா), சிறீதரன் (ஜேர்மனி), யசோதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் செந்தில்முருகன், சுமதி, பாமா (ரீச்சர்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திருமதி இராசரட்ணம் மதனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் திருமதி பொன்னுத்துரை-மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவச்சந்திரனின் பெரிய தாயும் இராகுலேந்திரனின் அன்பு மாமியும் இராசவர்மன், இரமணன், ஹரிய்பிரசாத், சாயிப்பிரகாத், பிரசன்னா, அபூர்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமை உள்ள விசாகம் 2 ஆம் பாதம் கிரக பாவம் 20, 1978, உயரம் 5 ' 8", கனடாவில் Computer Engineer ஆக கடமை புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. 1970 இல் பிறந்த உத் தரட்டாதி 2 ஆம் பாதம் 8 இல் செவ்வாய் கிரக பாவம் 55 உயரம் 5' 7" Computer Engineer இற்கு மணமகள் தேவை. இரு மணமகன்களும் யாழ். வந்துள்ளனர்.

தொடர்புகளுக்கு: 0771307185, 0778501013
www.keethannet.com
Vani international Marriage Bureva
எமது மட்டக்களப்பு கிளை - 0772848495

## தவறிவிட்டது

சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் கோபிதாஸ் என்பவருடைய (892674043V) என்னும் இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் என்பன வடக்கம்பரைச் சந்திக்கும் சங்கானைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0778448819
(சன்மானம் வழங்கப்படும்)

## தேவை

பிரபல்யமான கூரியர் சேவை நிறுவனமொன்றுக்கு பணியாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

19, 20, 21.08.2011 ஆகிய திகதிகளில் நேரில்வரவும்.

NO.233,Navalar Veethy,
Jaffna.
T.P- 0772231142

## செபம்

எனது வேண்டுதலை ஏற்று எனது மன்றாட்டுக்கு செவிசாய்த்து புனித கன்னி மரியாளுக்கு, புனித ஆரோக்கிய மாதாவுக்கு, மடுமாதா சதா சகாய மாதாவுக்கும் [illegible] விசேஷ விதமாக எனது நன்றியை சமர்ப்பிக் கின்றேன்.

அடியாள்.

## கண்ணீர் அஞ்சலி



கரவெட்டி கமநலசேவை நிலையப் பதில் பெரும்பாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி விசாலாட்சி தன பாலசிங்கத்தின் அன்புக் கணவர்

### மாணிக்கம் தனபாலசிங்கம்

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரத்தில் தவிக்கும் குடும்பத்தினருக்கு கமநல அபிவிருத்தி திணைக்கள சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல திணைக்கள நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா கமலாம்பிகை



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொட்டடி, 67/37, சீனிவாசகம் வீதியில் வசித்தவருமான திருமதி நடராசா கமலாம்பிகை நேற்றுமுன்தினம் (17.08.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு நடராசாவின் அன்பு மனைவியும் திருச்செல்வி (றெபேகா), கலைச்செல்வி (கனடா), சசிக்குமார் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான நடராஜா, சாம்பசிவம் மற்றும் பகவதி, நல்லம்மா, மனோன்மணி ஆகியோரின் சகோதரியும் ராஜன், சிறிகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் இனுசன், சங்கீத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணியளவில் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67/37, சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உளவு விமானத்தை சீன அதிகாரிகள் ஆராய பாக். அனுமதி

## அந்தச் செய்தி ஆதாரமற்றது என மறுக்கிறது சீனா

பீஜிங், ஓக.19

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் உள்ள, ஒசாமா பின்லேடன் வீட்டில் வீழ்ந்த அமெரிக்க உளவு விமானத்தை ஆராய்வதற்கு, சீன அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் அனுமதி அளித்ததாக வெளியான செய்தியை சீனா மறுத்துள்ளது.

பாகிஸ்தானில் பின்லேடன் பதுங்கி இருந்த இடத்துக்குச் சென்ற அமெரிக்க உளவுத்துறையின் ஹெலிகொப்டர் தரையில் விழுந்து சேதம் அடைந்தது. இந்த ஹெலிகொப்டரை மற்ற நாடுகள் பார்த்து அமெரிக்காவின் தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொண்டுவிடக்கூடாது என்பதற்காக அமெரிக்க ராணுவம் அந்த விமானத்தை வெடி வைத்துத் தகர்த்தது. இருந்த போதிலும் சில பகுதி சேதம் அடையாமல் அப்படியே இருந்தன.

இதைப் பாகிஸ்தான் உளவுத்துறை சீனாவுக்குத் தெரிவித்து அந்த நாட்டின் பொறியியலாளர்களை வரவழைத்து அவர்களுக்குக் காட்டியது. கடந்த 14 ஆம் திகதி, சர்வதேச பொருளாதாரப் பத்திரிகையான 'பினான்சியல் டைம்ஸ்', உளவு விமானத்தை ஆராய சீன அதிகாரிகளுக்கு, பாகிஸ்தான் அனுமதி அளித்ததாக செய்தி வெளியிட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சீன ராணுவ அமைச்சகம் வெளியிட்ட ஒற்றை வரி அறிக்கையில், "அச் செய்தி ஆதாரமில்லாதது; முட்டாள்தனமானது'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாகிஸ்தானும் இந்த செய்தியை மறுத்து உள்ளது.

# பாகிஸ்தானில் வன்முறை 8 பேர் பலி; 12 பேர் காயம்

இஸ்லாமாபாத், ஓக. 19

பாகிஸ்தானில் இரு வேறு இடங்களில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் பலியாகினர். 12 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் கடந்த இரு வாரங்களாக அரசியல் கட்சிகளிடையே வன்முறை ஏற்பட்டு வருகிறது. இதில் நூற்றுக் கணக்கானோர் பலியாகியுள்ளனர். நேற்றுமுன்தினம் துறை முக நகரான கராச்சி அருகே உள்ள பெரம்பூரா, கிராதர் பகுதிகளில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 8 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலியாகினர். இவர்கள் பாகிஸ்தான் மக்கள்கட்சி, முத்தாகிதா குவாமி இயக்கம், அவாமிக் லீக் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் எனப் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. கடந்த ஜூலை மாதம் தொடங்கி நேற்று முன்தினம் வரையில் 350 க்கும் மேற்பட்டோர் கலவரத்தால் பலியாகியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# குடியரசுக் கட்சி மீது ஒபாமா குற்றச்சாட்டு

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் ஜனாதிபதி ஒபாமா பிரசாரப் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்த நிலையில் அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில் குடியரசுக்கட்சியினரின் கடுமையான போக்கைத் தாக்கி உள்ளார்.

அமெரிக்காவின் வலிமையான பொருளாதார வளர்ச்சிக்கு சமரச முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் குடியரசு கட்சியினர் அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பை அதிகரிப்பதில் கடுமையாக நடந்து கொண்டனர் என அவர் தெரிவித்தார்.



இஸ்ரேலில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சீன மக்கள் விடுதலைப் படையின் இராணுவத் தலைமைத் தளபதி சென் பிங்டெ(இடது) தலைநகர் ஜெருசலேமில் ஜனாதிபதி சைமன் பியர்ஸை சந்தித்துப் பேசுகிறார்.

# தீவிரவாதத் தடுப்பு வேட்டை சீன ஷின்ஜியாங்கில் ஆரம்பம்

பீஜிங், ஓக. 19

சீனாவின் ஷின்ஜியாங் மாகாணத்தில், சமீபத்தில் நடந்த தீவிரவாதத் தாக்குதலை அடுத்து, அந்த மாகாண அரசு இரு மாதகால தீவிரவாதத் தடுப்பு வேட்டையை ஆரம்பித்துள்ளது.

ஷின்ஜியாங்கில் நடந்த தீவிரவாதத் தாக்குதல்களின் பின்னணியில், பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற தீவிரவாதிகள் இருக்கின்றனர் என சீனா சந்தேகம் எழுப்பியது.

அதைத் தொடர்ந்து தற்போது, அந்த மாகாணத்தில் இரு மாதகால தீவிரவாதத் தடுப்பு வேட்டையை ஆரம்பித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த நடவடிக்கை, ஒக்ரோபர் 15 ஆம் திகதி முடிவடையும்.

இதில், 24 மணி நேர ரோந்து, சந்தேகப்படும் நபர்களைப் பரிசோதித்தல், தெருக்களில் செல்லும் மக்களையும், வாகனங்களையும் பரிசோதித்தல் ஆகிய நடவடிக்கைகள் உள்ளடங்கின.

இந்த நடவடிக்கைகளால், மனித உரிமை மீறல் அதிகரிக்கும் என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள சீனா, இது வழக்கமான பாதுகாப்பு நடவடிக்கைதான் என விளக்கம் அளித்துள்ளது.

# சிரியாவில் ராணுவத் தாக்குதல் நிறுத்தம் அந்த நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

டமாஸ்கஸ், ஓக.19

சிரியாவில் ராணுவத் தாக்குதல் நிறுத்தப்பட்டு விட்டது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூனிடம் சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பான் கீ மூன் பொது மக்கள் மீது ராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கூறினார். அதற்குப் பதிலளித்த அசாத் போராட்டக்காரர்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டது எனத் தெரிவித்தார்.

போராட்டம் நடத்துபவர்கள் மீதான ராணுவத் தாக்குதலை நிறுத்த அசாத்திற்கு சர்வதேச நாடுகள் நெருக்கடி அளித்து வருகின்றன. கடந்த மார்ச் மாதம் முதல் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியா ராணுவத்தின் சமீபத்திய தாக்குதலாக லடாகியா நகரில் தாக்குதல் நடந்தது. இதில் ஏராளமானவர்கள் இறந்தனர். அங்குள்ள முகாமில் இருந்த பலஸ்தீன அகதிகள் முகாமை விட்டு வெளியேறியுள்ளனர்.

சிரியாவில் மனித உரிமை மீறப்படுகிறது. அங்கு பொது மக்களுக்கு எதிராகக் கடுமையாக ராணுவம் பயன்படுத்தப்படுகிறது என ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிலும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே சிரிய ஜனாதிபதி அசாத் இவ்வாறு அறிவித்துள்ளார்.

மக்களைக் கைது செய்யும் நடவடிக்கையையும் அரசு கைவிட வேண்டும் என பான் கி மூன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# லண்டனில் வன்முறையால் பாதிக்கப்பட்ட இடங்களை வேல்ஸ் இளவரசர் பார்வை

லண்டனில் சமீபத்தில் வன்முறை நடந்த இடங்களை வேல்ஸ் இளவரசர் சார்னும், இளவரசியும் பார்வையிட்டனர். அவர்கள் முதலில் டாட்டன்ஹாம் பசுமை ஓய்வு மையத்துக்கு வந்தனர். வன்முறை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய உதவி மையமாக இது மாற்றப்பட்டிருந்தது.

வன்முறையில் பாதித்த 5 பகுதிகளை சேர்ந்த இளைஞர்களுக்கு இரு மடங்கு ஆதரவு அளிக்கப்படும் என இளவரசர் வேல்ஸ் அறக்கட்டளை அறிவித்து இருந்தது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து அரச குடும்பத்தினர் வன்முறை பாதித்த பகுதிகளைப் பார்வையிட வந்தனர்.

கடந்த 1976 ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசரால் வேல்ஸ் அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. 35 ஆண்டுகளாக இந்த அறக்கட்டளை வாய்ப்பு வசதி இல்லாத 6 லட்சம் இளைஞர்களுக்கு உதவி அளித்துள்ளது வருகிறது.

# ஆபிரிக்க மக்களுக்கு கனடா 2 கோடி டொலர் நன்கொடை

ஆப்ரிக்க மக்களின் துயரத்தை போக்க உலக நாடுகள் உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வரிசையில் கனடா மக்களின் பங்களிப்பாக 2 கோடி டொலரை நன்கொடையாக அளித்துள்ளது. நாடாளுமன்ற செயலாளர் லோயிஸ் பிரௌன் நேற்று முன்தினம் இதனை கூறினார். இந்த நன்கொடைப் பணிகள் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பசி, பட்டினியால் வாடும் மக்களுக்கு எப்போதும் உதவிக் கரம் நீட்டுபவர்கள் கனேடியர்கள் என்ற பெருமை உண்டு. ஆபிரிக்காவின் வரலாற்றில் கனடா பெருமளவு உதவி செய்துள்ளது என்றும் அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டார்.

# எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த ஏமன் ஜனாதிபதி சலே இணக்கம்

சானா, ஓக. 19

எதிர்க்கட்சிகளுடன் பேச்சுகள் நடத்தத் தயார், தேர்தல் நடத்தவும் தயார் அதற்காக விரைவில் நாடு திரும்புவேன். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பேன் என ஏமன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடான ஏமனில் கடந்த 33 வருடங்களாக ஆட்சி செய்து வந்தார் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே. தற்போது ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஜூன் மாதம் கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதி மாளிகை மீது நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் ஜனாதிபதி சலே, பிரதமர் ஆகியோர் படுகாயமடைந்தனர். இருவரும் சவூதி அரேபியாவுக்கு தப்பிச்சென்று அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

ஜனாதிபதி சலே உடல் முழுவதும் 40 சதவீதம் தீக்காயங்கள் ஏற்பட்டு இருந்ததால், சிறப்புச் சிகிச்சை பெற்று தற்போது குணமடைந்துள்ளார். இதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை சவூதி அரேபியாவில் இருந்தவாறே தொலைக்காட்சி வாயிலாக ஏமன் மக்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

ஏமனின் அரசியல் சிக்கல் தீர எதிர்க்கட்சியினருடன் பேச்சுகள் நடத்தத் தயார். நாட்டில் பொதுத்தேர்தலையும் சந்திக்கத் தயார். விரைவில் நாடு திரும்புவேன்.

இவ்வாறு ஜனாதிபதி சலே கூறினார்.

# இளவரசர் ஹரியின் காதல் முறிந்தது

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா தம்பதியின் 2ஆவது புதல்வர் இளவரசர் ஹரியினதும் மொடல் அழகி பிளோ ரெஸ்பூருடெனல் புரூஷினதும் காதல் முறிவடைந்து விட்டது என ஹரியின் நண்பர்கள் தெரிவித்துள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகை 'டெய்லி மிரர்'செய்தி வெளியிட் டுள்ளளது.

# விண்வெளியில் ஹோட்டல் நிர்மாணம்

## ரஷ்யா திட்டம்

மொஸ்கோ, ஓக.19

விண்வெளியில் செயற்கை முறையில் ஹோட்டல் ஒன்றை நிர்மாணிக்க ரஷ்யா முடிவு செய்துள்ளது.

பூமியிலிருந்து 217 மைல்கள் உயரத்தில் அமையவிருக்கும் இந்த ஹோட்டலில் ஒரே நேரத்தில் 7 பேர் தங்கும் வகையில் நான்கு அறைகள் மற்றும் பூமி கீழே சுற்றுவதை எளிதாகப் பார்க்கும் வகையில் அமைந்த பெரிய ஜன்னல்கள் ஆகியவை இடம்பெறும். ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தின் உதவியுடன் 2 நாள்கள் பயணம் செய்து இதனை அடையலாம்.

விண்வெளிக்கு சுற்றுலா செல்ல விரும்பும் பணக்காரர்கள், விண்வெளி ஆராய்ச்சி மேற்கொள்வோர் ஆகியோருக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்படும் இங்கு 5 நாள்கள் தங்குவதற்கு 1 லட்சம் முதல் 5 லட்சம் பவுண்ஸ்கள் வரை செலவாகும். மேலும், சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணிபுரியும் விண்வெளி வீரர்கள் அவசர காலத்தில் பூமிக்குத் திரும்புவதற்குப் பதிலாகத் தங்குமிடமாகவும் இந்த ஹோட்டல் இருக்கும். இதனை ஆர்பிடல் டெக்னோலஜிஸ் என்ற நிறுவனம் உருவாக்குகிறது. எதிர்வரும் 2016ஆம் ஆண்டுக்குள் இதன் பணிகள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றில் ஜொலிஸ்ரார் 3 விக்கெட்டால் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் முக்கோண வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் ஜொலிஸ்ரார் 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கடந்த வாரம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 49.5 ஓவர்கள் நிறைவில் 203 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.சென்றல் அணியினர் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினை இழந்த நிலையில் றஜீவ்குமார், கலிஸ்ரன் சோடி 4 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 126 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கலிஸ்ரன் 65 ஓட்டத்தினையும் றஜீவ்குமார் 56 ஓட்டத்தினையும் பாலேந்திரா 42 ஓட்டத்தினையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிசார்பாக சன்ஜித், ஜனார்த்தனன் ஆகியோர் முறையே தலா 3 விக்கெட்டினையும் மணி 2 விக்கெட்டினையும் பகீதரன், லக்சுமிகாந் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

204 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 42.5 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஜொலிஸ்ரார் அணியினர் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினை இழந்த நிலையில் கார்த்திக் லச்சுமிகாந் சகோதர சோடிகள் 4ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பெற்றனர். கார்த்திக் 66 ஓட்டங்களையும் லக்சுமிகாந் 32 ஓட்டங்களையும் ஜனார்த்தனன் 22, நிரஞ்சன் ஆட்டம் இழக்காமல் 24, பகீதரன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பாக சுபாதீஸ் 4 விக்கெட்டினையும் றஜீவ்குமார் 2 விக்கெட்டினையும், விமலகாந் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (எ-23)

# அரியாலை சனசமூக நிலைய ஆண்டு நிறைவு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.19

அரியாலை சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கானஐம்பது மைல், பெண்களுக்கான பத்து மைல் ஓட்டப் போட்டிகள், ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் உட்பட மெய்வன்மைப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் இரண்டு தினங்கள் நடைபெறும். 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஐம்பது மைல் ஓட்டப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு சைக்கிள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 46ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட ரீதியில் இடம் பெற்ற செற் அப் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்துக்கான வெற்றிக் கிண்ணத்தை அணித் தலைவரிடம் சரசாலை வடக்கு கிராம அலுவலர் க.முல்லைமாறன் வழங்குகிறார். (23)

# சென்.ஜோன்ஸ் கல்லூரி 7 விக்கெட்டுகளால் வெற்றி

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 15 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியான கிரிக்கெட் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 7 விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 38.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுவிற்சன் 12 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார். பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக லோகதீஸ்வர் 9 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு 4 இலக்கையும் துவாரகசீலன் 7.2 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர். 99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 22.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டினை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றனர்.

அஜீத் 19, கபில்ராஜ் 16 ஓட்டங்களையும் பிரிசங்கர், சிந்திஜன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 24, 20 ஓட்டங்களைத் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் கதியோன் 9 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எ-23)

## ஹொக்கி சுற்றுப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை, யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் ஹொக்கி சுற்றுப்போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஒல்கோல்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (எ-23)

# கிரிக்கெட் சுற்றின் மூன்றாவது போட்டி

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் முக்கோண வெற்றிக் கிண்ணத்துக்கான50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் மூன்றாவது போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (எ-23)

# திட்டமிட்டு மழுங்கடிக்கப்படும் கடந்தகால சாதனைகள்

வலி.வடக்கு, ஓக.19

வடக்கு, கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்தகாலச் சாதனைகள் பலவும் மழுங்கடிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவிக்கின்றார்கள். கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்திருந்த வேளையில் வடக்கு, கிழக்கு மாகாணக்கல்வி விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் அடிப்படையில் வீர, வீராங்கனைகளின் சாதனைப் பட்டியல்கள் காணப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தற்போது புதிய சாதனைப் பட்டியல்களைப் பேணத் தொடங்கியுள்ளது. இதனால் முன்னைய சாதனையாளர்கள்பலரின் சாதனைகள் மறைக்கப்பட்டுள்ளதுடன் கடந்தகாலச் சாதனைகள் முறியடிக்கப்படாமலே வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் புதிய சாதனைப் பட்டியலைப் பேணிவருகின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் உள்ள புதிய சாதனைப் பட்டியலையும் வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்திருக்கும்போது பதிவு செய்யப்பட்ட சாதனைப் பட்டியலையும் இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என வடக்கு, கிழக்கின் முன்னிலை சாதனையாளர்களும் விளையாட்டுஆர்வலர்களும் கூறுகின்றார்கள். (எ-86)

# ஆண்களுக்கான பூப்பந்தாட்டம் மானிப்பாய் இந்துவுக்குச் சம்பியன்




மானிப்பாய் இந்துக் கல்லூரி




உடுவில் மான்ஸ் வித்தியாலயம்




யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி

வலி.வடக்கு,ஓக.19

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் பாடசாலை அணிகளிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலிடத்தைப்பெற்றுச் சம்பியனானது. இரண்டாம் இடத்தை உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் மூன்றாமிடத்தை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாங்களும் வென்றதை நினைவினில் கொள்க!

## பிளெச்சருக்குச் சொல்கிறார் கங்குலி



லண்டன், ஓக.19

இங்கிலாந்தில் இந்திய கிரிக்கெட் அணி வென்ற வீடியோ பதிவுகள் பயிற்சியாளர் பிளெட்சருக்கு அனுப்பத் தயாராக இருப்பதாக முன்னாள் அணித்தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் பந்துகள் எதிர்பாராத அளவுக்கு 'ஸ்விங்' ஆவதே தோல்விக்குக் காரணம் என்று பிளெட்சர் கூறியிருந்தார். இதற்கு பதில் அளிக்கும் வகையில் கங்குலி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் 'மிட் டே' பத்திரிகையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

4 ஆவது டெஸ்ட் ஆட்டம் நடக்கும்(நடைபெற்றுக் கொண்டிருக்கும்) ஓவல் மைதானத்தில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் தடுமாற மாட்டார்கள். ஏனெனில் அது துடுப்பாட்டக்காரர்களுக்கு சாதகமான ஆடுகளம். இந்த ஆட்டத்தில் இந்தியா குறைந்தபட்சம் 400 ஓட்டங்களையாவது தாண்ட வேண்டும். இதுவே தோல்வியில் இருந்து மீள்வதற்கான முதல் முயற்சியாக இருக்கும்.

இங்கிலாந்து அணி நன்கு திட்டமிட்டு, முழு ஆர்வத்துடன் விளையாடியதால்தான் இந்த வெற்றி அவர்களுக்கு சாத்திய மாயிற்று.

மற்றபடி அந்த அணி மிகவும் ஆக்ரோஷமாக ஆடியது என்றோ, அவர்களின் ஆட்டம் இந்திய வீரர்களைத் திணறடிக்கும் வகையில் இருந்தது என்றோ கூற முடியாது.

இந்த அளவுக்கு பந்துகள் 'ஸ்விங்' ஆவதை எனது வாழ்நாளில் பார்த்தது இல்லை என்று பிளெட்சர் கூறியுள்ளார். நாங்கள் முன்பு இங்கிலாந்தில் விளையாடிய போதும் இதே போன்ற பந்து வீச்சைத் தான் எதிர்கொண்டோம். 2007 ஆம் ஆண்டு நட்டிங்ஹாம் ஆட்டத்திலும், 2002 இல் லோட்ஸ் மைதானத்திலும் 'ஸ்விங்' ஆகும் பந்துகளை எதிர்கொண்டுதான் வெற்றி பெற்றோம். அந்த வீடியோ பதிவுகளை வேண்டுமானால் பிளெட்சருக்கு அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறோம்.

இந்திய அணியில் சகீர்கான் இல்லாதது பெரிய பலவீனம். கிரிக்கெட்டில் அனைத்துத் துறைகளும் பலமாக இருந்தால்தான் வெற்றி பெற முடியும். இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய பந்து வீச்சு பலம் இழந்த நிலையில்தான் இருந்தது - என்றார். (15)



# அசைக்க முடியாது

சிட்னி, ஓக. 19

டெஸ்ட் ஆட்டத்தில் தற்போது முதலிடம் பிடித்த அணியான இங்கிலாந்து அடுத்த சில ஆண்டுகளுக்கு உலக கிரிக்கெட்டில் அசைக்க முடியாத அணியாக விளங்குமென்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் கூறியுள்ளார்.

அணியாகவோ அல்லது தனிப்பட்ட வீரர்களைப் பொறுத்தளவிலோ ஆஸ்திரேலியாவை விட இங்கிலாந்து சிறப்பாக இருக்கிறது. இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் நல்ல திறனில் உள்ளனர் என்றும் வோர்ன் பாராட்டினார்.

அணியின் பலம், உடல்தகுதி, உறுதி வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது இங்கிலாந்து அணி நீண்டகாலம் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தும் என்று நம்புகிறேன். 11 வீரர்கள் மட்டுமல்ல 24 25 வீரர்கள் நிறையத் திறமையுடன் இங்கிலாந்து அணியில் இடம்பெறக்கூடிய தகுதியுடன் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இதேநேரம் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த இங்கிலாந்து அணிக்கு பாராட்டுகள் குவிந்து கொண்டிருக்கிறது. (15)

# ஆட்டம் மழையால் நிறுத்தம்

இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டதின் முதல் நாளில் மழை காரணமாக 26 ஓவர்கள் மாத்திரமே வீசப்பட்டுள்ளது. நேற்றைய ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி விக்கெட் இழப்பன்றி 75 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்திய அணி இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. முன்னதாக 4 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வருகின்றது. இதில் நடைபெற்று முடிந்த 3 டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்று தொடரை வெற்றி கொண்டுள்ளது. அத்துடன் இரண்டு வருட காலமாக இந்திய அணி வசம் இருந்த முதலிடத்தையும் தட்டிப் பறித்தது. இந்த நிலையில் முக்கியமில்லாத 4 ஆவது டெஸ்ட் ஆட்டம் ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

அதன்படி களமிறங்கிய அலிஸ்ரர் குக் - ஸ்ரோரஸ் ஜோடி இங்கிலாந்து அணிக்கு மிகச் சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய இருவரும் இணைப்பாட்டமாக 75 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆட்டம் மதியபோசன இடைவேளைக்காக நிறுத்தப்படும் போது இங்கிலாந்து அணி 26 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குக் 82 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 34 ஓட்டங்களையும், ஸ்ரோரஸ் 74 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். 3 ஓட்டங்கள் உதிரிகளாக இந்திய அணியால் வழங்கப்பட்டது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பல் ஆர்.ப.சிங் 10 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களையும், இசாந் 8 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களையும், ஸ்ரீசாந் 6 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களையும், ரெய்னா 2 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களையும் வழங்கினர். (15)

# இந்தியாவுக்கு தும்மல் எனில் மற்றைய நாடுகளுக்கு காய்ச்சலே...!

**இப்படிக் கூறுகிறார் ஜெப்ரி**

லண்டன், ஓக. 18

உலகின் பணக்கார கிரிக்கெட் அணியான இந்தியாவின் தோல்வி, எதிர்காலத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு ஆபத்தாக முடியும், என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் ஜெப்ரி பாய்கட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, டெஸ்ட் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. முதல் மூன்று ஆட்டங்களில் தொடர்ந்து தோல்வியடைந்த இந்திய அணி, தொடரை இழந்ததுடன் சர்வதேச தர வரிசையில் முதலிடத்தையும் பறி கொடுத்து பரிதாபமாக உள்ளது. இந்திய அணியின் இந்த வீழ்ச்சி குறித்து ஜெப்ரி பாய்கட் கூறியதாவது:

பெரும்பாலான நாடுகள் டெஸ்ட் ஆட்டத்தை, காலியான மைதானங்கள் முன்பு தான் விளையாடுகின்றன. இதிலிருந்தே, டெஸ்ட் கிரிக்கெட் எந்தளவுக்கு மோசமான நிலையில் உள்ளது என்பது தெரிந்திருக்கும். இந்த வீழ்ச்சியால் தான், 'ரி-20' ஆட்டங்களுக்கு வரவேற்பு அதிகம் உள்ளது. இளம் வீரர்களும் இதைத் தான் விரும்புகின்றனர்.

பொதுவாக, கிரிக்கெட்டை பொறுத்தவரையில் இந்தியா [illegible] [illegible] தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமைக்கு ஏலம் என்று வரும் போது, குறைந்தது ஐந்து முன்னணி நிறுவனங்கள் போட்டியில் நிற்கின்றன. பிற நாடுகளில் இந்திய அணி சுற்றுப் பயணம் செய்யும் போது, இவர்கள் தான் தேவையான செலவுகளை செய்கின்றனர். இதனால் தான் இந்தியாவுக்கு லேசான தும்மல் என்றால், மற்ற நாடுகளுக்கு சளி பிடித்து விடும் என்கிறேன்.

இந்த நிலையில் டெஸ்ட் தொடரில் வென்று, இங்கிலாந்து அணி முதலிடத்தை பெற்றது மகிழ்ச்சியாகவும், 'திரில்லாகவும்' உள்ளது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி முன்னேறியுள்ளனர் என்பதை மறுக்கமுடியாது.

துரதிருஷ்டவசமாக இதற்கான நேரம் தான் சரியில்லை. ஏனெனில், பல்வேறு நாடுகளில் கிரிக்கெட்டுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. பயங்கரவாத மிரட்டலால் பாகிஸ்தானில் எந்த அணியும் சுற்றுப் பயணம் செய்ய மறுக்கின்றது. அரசியல் தலையீடு காரணமாக சிம்பாப்வேயும் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட்டில் நிதிமுறை கேடுகள் நடப்பதாக அந்த அணியின் முன்னாள் அணித்தலைவர் சங்ககரா வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில், தற்போதைய வலுவில்லாத இந்திய அணிக்கு, இங்கிலாந்து கொடுக்கும் ஒவ்வொரு அடியும், உலக கிரிக்கெட்டுக்கு பெரும் சிக்கலை கொண்டு வரும். ஏனெனில் இந்திய அணி பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்ததாக உள்ளது. இந்திய அணி பின்தங்க நேரிட்டால், வர்த்தக ரீதியில் பார்க்கும் போது பாதிப்பை ஏற்படுத்தும். இது தொடரும் பட்சத்தில் பார்வையாளர்கள் விலகத் தொடங்குவார்கள்.

ஐ.பி.எல் தொடரில் இருந்து வீரர்கள் ஓய்வில்லாமல் தொடர்ந்து பங்கேற்கின்றனர். விறு, விறுப்பான தொடராக ஐ.பி.எல் இருந்தாலும், கடைசியில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இதற்கெல்லாம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தான் சரியான பதில் தர வேண்டும்.

அதுவரை டெஸ்ட் கிரிக்கெட் இப்போதுள்ள வடிவத்தில் இருக்குமா என்று தான் சந்தேகம் தான். இவ்வாறு பாய்கட் கூறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரைத் தாக்க முயன்றதாக நேற்று மாலை 18 பேர் கைது

கொழும்பு, ஓக.19

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசத்திலுள்ள பாவக்குடி கிராமத்தில் கடமையிலிருந்த இரு பொலிஸாரை தாக்க முயற்சித்த குற்றச்சாட்டில் 18 பேரை நேற்று வியாழக்கிழமை மாலை கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாவக்குடி சமுர்த்தி வங்கியில் கடமையிலிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டாம் என அந்தப் பகுதி மக்களுக்குப் பொலிஸார் கூறினர்.

எனினும் வங்கியைச் சுற்றி 150 க்கும் மேற்பட்ட பொது மக்கள் திரண்டனர். இவர்களை கலைப்பதற்கு விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதன் போது 18 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். வவுணதீவு பொலிஸார் இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தாண்டியடி நடராசானந்தபுர பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் மர்ம மனிதர்கள் என்று சந்தேகிக்கப்படும் நால்வரை பிடிக்கச் சென்ற பொது மக்களை படையினர் தடுத்ததாகவும் இதனால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து பொதுமக்களை படையினர் தடிகளாலும் விக்கெட் பொல்லாலும் மோசமாக தாக்கியதாகவும் தன்னிடம் பொது மக்கள் முறைப்பாடு செய்ததாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் பெண்கள் உட்பட பலர் காயமடைந்தாகவும் இச்சம்பவம் குறித்து சிரேஷ்ட பொலிஜ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்டவிடம் தான் முறைப்பாடு செய்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கூறினார். (த-10)

## இதய அஞ்சலி



பிரதிப்பொது முகாமையாளர் வலயம் II
செலான் வங்கியில் பணிபுரியும்
கலாநிதி **பத்மநாதன் நிறஞ்சன்** அவர்களின்
அன்புத் தாய்

**பத்மநாதன் திருப்பதி**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**23/1, 4 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**லக்ஸ்மி ஏஜென்சி.**

## கண்ணீர்க் காணிக்கை



பிரதிப் பொது முகாமையாளர் வலயம் II
செலான் வங்கியில் பணிபுரியும்
கலாநிதி **பத்மநாதன் நிறஞ்சன்** அவர்களின்
அன்புத் தாய்

**பத்மநாதன் திருப்பதி**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதோடு அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**உதயன் வெளியீட்டகம்.**

## மரண அறிவித்தல்கள்

### *கணபதிப்பிள்ளை கந்தசாமி* (இளைப்பாறிய ஆசிரியர்)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் தற்போது அராலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கணபதிப்பிள்ளை கந்தசாமி நேற்று (18.08.2011) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானாம்பிகையின் (இளைப்பாறிய சங்கீத ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற செந்தில்குமரன் (கணக்காய்வாளர்) அன்புத் தந்தையும், தெய்வமாலினியின் (இளைப்பாறிய உபதபால் அதிபர்) மாமனாரும், ஐங்கரன், அச்சுதனின் அன்புப் பேரனும், நவரத்தினம் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்), பாக்கியலட்சுமி, கந்தராசா(இலங்கை, மின்சார சபை), முத்துமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பத்மாதேவி, கணேசன் (இளைப்பாறிய ஆசிரியர்), கதிர்காமராஜா (பனிக்கட்டி ஆலை, குருநகர்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயபவானி (ஜமுனா), சண்முகராசா, ஜெயபவன் (ரஞ்சன் - கணக்காளர், லண்டன்), சூரியஜோதி (லண்டன்), மணிபவன் (மோகன்- கொழும்பு) Dr.கிருஷ்ணபவாணி (கீதா- தேசிய வைத்தியசாலை, கொழும்பு), விக்கினராஜா (பொறியியலாளர், ரெலிகொம் - கொழும்பு), பத்மபவன் (வசந்தன்), சுகுணபவானி நிர்மலன் (பணிப்பாளர்- My Linx கொழும்பு), அனுசியா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அராலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூனாவோடை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நவரத்தினம், பத்மபவன் (வசந்தன்).**

**அராலி தெற்கு,**
**வட்டுக்கோட்டை**

### *சின்னராசா சிவராசா*

**(உரிமையாளர், ராசா டீசல் பெற்றோல் இஞ்சினியறிங்)**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சிவராசா நேற்று (18.08.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவ்ரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மு.சந்திரகாந்தன் (சந்திரன்).**

**வைரவர் கோயில் வீதி,**
**மல்லாகம்.**

## அதிக விலைக்கு சோடா விற்ற இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.19

சோடா வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்தமை மற்றும் காலாவதியான சோடா வகைகளை விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்களில் இரண்டு பேருக்கு யாழ். நீதிமன்றம் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

அபாரதம் செலுத்தத் தவறின் அவர்களை தலா ஒவ்வொரு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

யாழ். நகரப் பகுதியில் சோடா வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்த நபருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் காலவதியான சோடா வகைகளை விற்பனை செய்த குற்றத்துக்காக மற்றொரு நபருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்து நீதிபதி ஏ.ஆனந்தராசா தீர்ப்பளித்தார்.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினரால் இவை இனங்காணப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவை குறிப்பிடத்தக்கது. (த-4)

## கண்ணீர் அஞ்சலி



பிரதிப் பொது முகாமையாளர் வலயம் II
செலான் வங்கியில் பணிபுரியும் கலாநிதி
**பத்மநாதன் நிறஞ்சன்**
அவர்களின்
அன்புத் தாயார்

**பத்மநாதன் திருப்பதி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளர்,**
**முகாமையாளர்கள்,**
**ஊழியர்கள்.**

செலான் வங்கி,
வடபிராந்தியம்.

## நூல் வெளியீடு

**திகதி: 19.08.2011** **நேரம்: பி.ப. 3.00**

**இடம்: பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 077716 5147, 0212226085**

### ஆசிரியத் தலையங்கம் ஓர் அறிமுகம்

| | |
|---|---|
| தலைமை | : **ப.றெஜீஸ் நியூட்டன்**<br>இணைப்பாளர், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்<br>ஆசிரியர், மன்னார் மூன்றாம் பிட்டி அ.த.க.பாடசாலை<br>கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர் |
| பிரதம விருந்தினர் | : **பேராசிரியர் சி.விசாகரூபன்**<br>தலைவர், தமிழ்த்துறை கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம் |
| சிறப்பு விருந்தினர் | : **அருள்திரு. தமிழ்நேசன் அடிகள்**<br>இயக்குநர், மன்னார் மறைமாவட்ட சமுகத்தொடர்பு அருட்பணி மையம்<br>தலைவர், மன்னார் தமிழ்ச் சங்கம், ஆசிரியர் - மன்னா பத்திரிகை |
| ஆய்வுரை 1 | : **கிருத்திகா தர்மராஜா**<br>உதவி விரிவுரையாளர், ஊடக கற்கை யாழ். பல்கலைக்கழகம் |
| ஆய்வுரை 2 | : **ந.விஜயசுந்தரம்**<br>பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை |
| இறைவணக்கம் | : **புளோரன்ஸ் சூசைதாஸ் - பத்திரிகையாளர் - பாதுகாவன்** |
| முதற் பிரதி | : திருமதி இமானுவேல் சவரியம்மா - கனடா ஓய்வூதியர் |
| சிறப்புப் பிரதி | : **என்.ஜனகன்** - முகாமையாளர், யாழ். வீரகேசரி, லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம்- பொன்மனச்செம்மல், மனிதநேய ஈகையாளன் கல்விக் காருண்யன் |
| ஏற்புரை | : **அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**, இயக்குநர் -பிசப் சவுந்தரம் மீடியசென்ரர்<br>ஊடக விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம் |
| நன்றியுரை | : **எம்.நிரூநிட்டன்** - ஊடக தொடர்பாளர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்<br>ஊடகவியலாளர் - வீரகேசரி. |

## கோழிகளுக்கான தடுப்பு மருந்து வழங்கல்

**கோழிகளுக்கான தடுப்பு மருந்துகள் றோயல் கால்நடை வைத்தியசாலையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் வழங்கப்படுகின்றன.**

**★இல.71, பலாலி வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,**
(திருநெல்வேலி சந்திக்கும் விவசாய பண்ணைக்கும் இடையில்)
**தொ.பே.: 0213207561**
**நேரம் - காலை 6.30 -7.30மணி வரை**

**★ இல.49, மானிப்பாய் வீதி,**
**கூழாவடி ஆனைக்கோட்டை,**
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை ஆனைக்கோட்டைக்கும் இடையில்)
**தொ.பே.: 0213202220**
**நேரம் - காலை 7.30 -8.30 மணி வரை**

தொலைபேசி மூலமான முற்பதிவுகளும் ஏற்கப்படும்

(6087)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 10.07.2011 ஞாயிற்றுக்கிழமை**
**சிவபதம் அடைந்த**

**அமரர்**

**பாலகிருஸ்ணன்**

**சிந்துஜா**

**அவர்களின் அந்தியோட்டிக் கிரியைகள் இன்று (19.08.2011) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர்.**

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலைக்கு வருவோர் நகைகள் அணிய வேண்டாம்

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களைப் பார்வையிடச் செல்பவர்கள் வைத்தியசாலைக்குத் தங்க நகைகளை அணிந்து செல்ல வேண்டாம் என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா கேட்டுள்ளார்.

வைத்தியசாலையில் கிசிக்சை பெறுபவர்களாயினும் சரி, சிகிச்சை பெறுபவர்களைப் பார்வையிடுபவர்களாயினும் சரி, வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் செல்பவர்களாயினும் சரி மருத்துவ சிகிச்சைக்கெனச் செல்லும்போது தங்க நகைகளை அணிந்து செல்ல வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு அணிந்து செல்வதனால் அவர்களது நகைகள் திருட்டுப் போவது ஒருபுறமிருக்க, திருடர்களை உருவாக்க, திருட்டு முயற்சியில் ஈடுபடத் தூண்டுவனவாக இந்தச் செயற்பாடுகளும் அமைந்து விடுகின்றன.

நகை அணிந்து வருபவர்கள்தான் திருட்டுச் சம்பவங்களுக்கு இடம்கொடுக்கின்றார்கள். இதனால்தான் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

கடந்த காலங்களிலும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காக வைத்தியசாலைக்குச் செல்லும் சகலரும் பெறுமதிமிக்க தங்க நகைகளை அணிந்துசெல்ல வேண்டாம் என்று பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-4)

# ஐ.தே.கவில் இணையப் போகிறேனா? செய்தி பொய் என மறுக்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஓக. 19

ஐக்கிய தேசிய கட்சியில் ஒருபோதும் இணையப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப்போவதாக வெளியான செய்திகளுக்கு அவர் மறுப்புத் தெரிவித்தார்.ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவின் வாழ்க்கை வரலாறு உள்ளடக்கிய நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், தான் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே இருப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு விலகுவது குறித்து ஒருபோதும் எண்ணவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-சி)

## பாலியல்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பாலியல் முறைகேடுகளுக்குச் சிறுவர்கள் உள்ளாக்கப்படுவது தொடர்பில் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற போதும், பாதிக்கப்பட்ட பெண்பிள்ளைகளின் பெற்றோர் சட்ட நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க மறுக்கின்றனர் என்றும் அதிகாரிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

பெற்றோரின் இத்தகைய செயலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆசிரியர்கள் தொடர்ந்தும் பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவதால் பண்பாட்டுச் சீரழிவு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேசமயத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்ல அஞ்சுகிறார்கள் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த விவகாரம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடும் ஆசிரியர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார், சட்ட உதவிக் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுக்களின் கவனத்துக்கு இந்த விவகாரங்களை உடனடியாகக் கொண்டு வந்து தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (உ-207)

## தமிழரின்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்துத் தொடர்பாகத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவான பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. நந்திக்கடல் கடற்கரைப் பகுதி முற்றுமுழுவதுமாக இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் வடக்கு, மேற்கு, தெற்கு அம்பலவன் பொக்கணை ஆகிய பிரதேசத்து மக்களை கோம்பாவில் பகுதியில் இப்போது அரசு மீள்குடியமர்த்தியுள்ளது. இது அகதி முகாம் போலவே உள்ளது. இந்தப் பகுதியிலேயே இவர்களுக்கு நிரந்தர காணிகள் வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவின் கடற்கரைப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் இராணுவத்தினர் சிங்கள மக்களை இரகசியமாகக் குடியமர்த்தத் திட்டமிட்டு வருகின்றனர். மீன் வளத்தைச் சுரண்டுகின்றனர்.

தவிர போர்க்குற்றத்தை மறைக்கும் வகையில் இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது உடலங்கள், எச்சங்கள் அழியும் வரை அந்தப் பகுதியை உயர்பாதுகாப்பு பகுதியாகவே வைத்திருக்க அரசு முயல்கிறது.

தற்போது வடக்கில் புதியகாணிச் சட்டங்களை அமுல்படுத்தி தமிழ் மக்களது காணிகளை அபகரிக்கும் முயற்சியிலும் அரசு ஈடுபட்டுள்ளது.

வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் என்று எவையும் இல்லை என இராணுவத்தினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஏன் யாழ். அரச அதிபரும் கூடக் கூறுகின்றனர்.

ஆனால் மயிலிட்டி, கட்டுவன், தெல்லிப்பழையில் பல இடங்களில் மக்களை மீளக் குடியமர அனுமதி வழங்கப்படவில்லை.

இவைதவிர வடக்கில் மண்டைதீவில் 42 செம்மண் தோட்டங்களில் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

பூநகரியில் இரணைதீவு 12 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்டது அங்கு 1990க்கு முன்னர் 900 குடும்பங்கள் இருந்தன. இப்போது இராணுவத்தினரே அங்கு நிலை கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி பரவிப் பாஞ்சான் கிராமம் உயர்பாதுகாப்பு வலயமாக உள் ளது. இங்கு வசித்த 400 குடும்பங்கள் வேறு இடங்களிலேயே தங்கியுள்ளன. 120 ஏக்கருக்கும் அதிகமான பரப்புடைய வெள்ளாங்குளம் பண்ணையை கார்கில்ஸ் நிறுவனத்துக்கு அரசு இரகசியமாக விற்றுள்ளது.

இவ்வாறு தமிழ் மக்களது பூர்வீக நிலங்களை பல்வேறு கோணங்களில் அரசு ஆக்கிரமித்து வருகிறது.

இவ்வாறான அரசின் இனப்பாரபட்சமான நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. இதனை வெளி உலகுக்கு அம்பலப்படுத் துவதுடன் பொதுமக்களை இணைத்து ஜனநாயக ரீதியில் வெகுஜனப் போராட்டங்களை நடத்தவுள்ளோம் எனறார் சிறீதரன் எம்.பி. (த-10)

## அரசு - ரணில்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

களில் அரசு தலையிடாது. அத்துடன் சஜித் பிரேமதாஸ கூறுவது போன்று, அரசுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவொரு இரகசிய ஒப்பந்தமும் கிடையாது. அதை மறுக்கின்றோம்.

எனினும், தருஸ்மன் அறிக்கை போன்ற வெளிநாட்டுப் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் லியாம் பொக்ஸ் போன்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் அரசு சிறந்த உறவைப் பேணி வருவது போன்றே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடனும் இந்த இராஜதந்திர ரீதியிலான உறவு பேணப்பட்டு வருகிறது.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவுக்கு முன்பாகவுள்ள வீதி திடீரென நேற்று புனரமைக்கப்பட்டது. ஏனென்றால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அந்த வீதியைப் புனரமைப்பு செய்யுமாறு கோரியிருந்தனர். எனினும், அவசரமாக அவ்வீதி நேற்றைய தினம் புனரமைக்கப்பட்டமை தொடர்பாக ஆராய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். - என்று தெரிவித்தார். (த-சி)

## ரஷ்யப்போர்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மற்றும் விமானப் படையின் பேச்சாளர்கள் தெரிவித்தனர். இலங்கை விமானப் படை தற்போது மேற்கொண்டு வரும் பொதுமக்கள் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதாக விமானப் படைப் பேச்சாளர் அன்ட்ரூ விஜயசூரிய தெரிவித்தார்.

உள்நாட்டு பொதுமக்கள் விமானப் போக்குவரத்தை 'ஹெலி ட்ரூவர்ஸ்' என்ற பெயரில் விமானப்படை தற்போது நடத்தி வருகின்றது.

"ரஷ்யாவின் ஆயுதங்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்யும் பொருட்டு 2010இல் உருவாக்கப்பட்ட கடன் கணக்கின் ஊடகவே இந்த ஹெலிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன" என இது தொடர்பில் ரஷ்ய அரச செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

அமெரிக்காவிற்கு அடுத்து ஆயுத விற்பனையில் இரண்டாவது இடத்தில் உள்ளது ரஷ்யா. இந்த ஆண்டு லிபியா மீது ஐ.நா. விதித்த ஆயுதத்தடையை அடுத்து அதற்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டது. அதனை மீளவும் பெறவேண்டும் என்பதில் மொஸ்கோ தீவிரமாகவுள்ளது. அதனால் ஆபிரிக்கா, தென்னமெரிக்கா மற்றும் தென் கிழக்காசியா போன்ற நாடுகளிலும் ரஷ்யாவானது தனது ஆயுத விற்பனையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. (உ)

## முள்ளிவாய்க்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

றஞ்சாட்டுகின்றன. பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்ட போர்க் குற்ற ஆதாரமான இராணுவ அதிகாரி மற்றும் சிப்பாய் ஆகியோர் வழங்கிய சாட்சியங்களில் இந்தப் பகுதிகளிலேயே பொதுமக்கள் படையினரால் ஈவு இரக்கமற்றுச் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்திருந்தனர்.

ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுக் கிடந்த மக்களைப் புதைக்க முடியாத நிலையில், சடலங்களை ஒரே இடத்தில் போட்டு பெக்கோ இயந்திரத்தின் மூலம் அதன் மீது மண்ணைக் குவித்து மண் அணையை ஏற்படுத்தியிருந்தனர் என்றும் இராணுவச் சிப்பாய் தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் அடியோடு மறுக்கும் அரசு போர்க் குற்றங்களோ மனித உரிமை மீறல்களோ இடம்பெறவில்லை என்று தொடர்ந்து கூறிவருகிறது. (உ)

## மனிதாபிமானப்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உலக மனிதாபிமான தினம் இன்று கொண்டாடப்படுவதால் இலங்கையுடன் இணைந்து நாம் மனிதாபிமானப் பணிகளில் எட்டிய சாதனைகளை நினைவுகூர முடிகின்றது. வடக் கில் 3 லட்சம் அகதிகளுக்கு இலங்கை அரசுடன் இணைந்து நாம் வழங்கிய மனிதாபிமான உதவிகள் மிகவும் மெச்சத்தக்கன.

ஐ.நா. சபை இலங்கைக்கான மனிதாபிமான மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக தனது உதவிகளை மேலும் அதிகரிக்கும் - என்றார். (த-சி)

## மேயர்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

முஹம் மட் மஹ்ரூப், மேல் மாகாண சபை உறுப்பினர்கள் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் கே.வை.பி.ராம் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், அனைத்து மாநகர சபைகளுக்குமான மேயர் வேட்பாளர்களின் பெயர்கள் நாளையே தீர்மானிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாநகர சபைகளுக்கு மேயர் வேட்பாளர்களாகப் பல பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு மாநகர சபைக்கு முன்னாள் எம்.பி. முஹம்மட் மஹ்ரூப், மாகாண சபை உறுப்பினர்கள் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் கே.வை. பி.ராம் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன. சஜித் தரப்பால் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெயர் பிரேரிக்கப்பட்டுள் ளபோதிலும் இம்தியாஸ் அதற்கான விருப்பத்தை தெரிவிக்கவில்லை - என்றார்.

இதேவேளை, கண்டி மாநகர சபைக்கு காமினி திஸாநாயக்கவின் மகன் மாயத்த திஸாநாயக்க அல்லது கம்பஹா நகர சபையின் முன்னாள் மேயர் ஹரேந்திர துவவில் மேயர் வேட்பாளராக நியமிக்கப்படலாம் என்று ஐ.தே. கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

மேயர் வேட்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து வேட்பாளர்களையும் தெரிவு செய்யும் ஐ.தே.கட்சியின் வேட்பு மனுக் குழுவுக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமை தாங்குகின்றார். பிரதித் தலைவர்கள் கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் அக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரவி கருணாநாயக்க, சஜித் பிரேமதாஸ, காமினி ஜயவிக்ரம பெரேரா மற்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்த கொலைச் சந்தேக நபர்களுக்கு செப். 1 வரை விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 19

சிரேஷ் ஊடகவியலாளரும், சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை அடுத்த மாதம் முதலாம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சிரேஷ் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கல்கிஸை நீதவான் நீதிமன்றில் 52ஆவது தடவையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த கொலைச் சம்பவம் தொடர்பான இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு, கல்கிஸை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நிரோஷா பெர்னாண்டோ இரசாயன பகுப்பாய்வாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வாகன திருத்துமிட உரிமையாளரின் அடையாள அட்டையை பயன்படுத்தி பெற்றுக் கொள்ளப் பட்ட ஐந்து சிம் அட்டைகள் தொடர் பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தனர். இந்த நிலையில் வழக்கு எதிர்வரும் மாதம் முதலாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (சி)

# முல்லையில் மீள்குடியேற்றப் பணி தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குக

**தேர்தல்கள் ஆணையாளர்நாயகம் கோரிக்கை**

கொழும்பு, ஓக. 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக தனக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதனிடம் கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படாதிருக்கும் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கு எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான சாத்தியப்பாடு தொடர்பில் ஆராயும் முகமாகவே தேர்தல் ஆணையாளர் இவ்வறிக்கையை முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோரியுள்ளார் என்று தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

# வேட்புமனு நேற்று முதல் ஏற்பு

கொழும்பு, ஓக. 19

23 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நேற்று 18ஆம் திகதி முதல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

ஏற்கனவே, வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்படாத முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் மக்கள் மீளக் குடியமர்த்தப்படாத காரணத்தால் திட்டமிட்டபடி ஒக்டோபர் மாதம் நடைபெறாது எனத் தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

23 உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படும் திகதி, வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 25ஆம் திகதி அறிவிக்கப்படும். (சி)

# ஐந்து மாநகரசபை தேர்தல்களில் மு.கா.தனித்துப்போட்டி

கொழும்பு, ஓக.19

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு, கண்டி, காலி, கல்முனை, நீர்கொழும்பு ஆகிய மாநகர சபைகளில் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிடும் என்று அதன் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி நேற்று 'சுடர்ஒளி'க்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

குருநாகல் உட்பட ஏனைய உள்ளூராட்சி சபைகளில் இணைந்து போட்டியிடுவது குறித்து இன்று மு.கா. தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## சிறுமியை காணவில்லை

சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 8 வயதுச் சிறுமி ஒருத்தியை நேற்றுமுன்தினம் முதல் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் பாண்டவெட்டைகாட்டுப் புலம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி சாளினி (வயது-8) என்ற சிறுமியே காணமற் போனவர் ஆவார்.

சிறுமியின் தாயும் தந்தையும் அலுவல் நிமித்தம் வன்னிக்குச் சென்று விட்டனர். சிறுமி பேர்த்தியாருடன் வீட்டில் இருந்துள்ளார். நேற்று முன்தினம் பேர்த்தியார் கோவிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பிய வேளைசிறுமிகாணமல் போயுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

யாழ்.பேராலய முன்றலில்
இசை மாலைப் பொழுது
தேவகான இசைமழையில் யாழ். பிரபல பாடகர்களான அருட் தந்தையர்கள், பொதுநிலையினர் ஒன்றிணைந்து நடத்தும் இசை மாலைப் பொழுதில் கலந்து மகிழ வாருங்கள்; இசை இன்பத்தில் நனைந்து இறைபுகழ் பாடுங்கள்
பிரவேசம் இலவசம்
காலம்: 19.08.2011 வெள்ளிக்கிழமை.
நேரம்: மாலை 6.00 மணி
விளம்பர அனுசரனை: A.எட்வேட் பாண்டியன் தாழ்வு.
பங்குத் தந்தையும், பங்கு மக்களும் யாழ். பேராலயம்.

இறுதி நேரத்தில் வந்துவிட்டது
தரம் 05
புலமைப் பரிசில் பரீட்சைக்கான முற்றிலும் எதிர்பார்க் கத்தக்க வினாக்களைக் கொண்ட மாதிரி வினாத்தாள்கள் விடையுடன் வந்துவிட்டது
கிடைக்கு மிடங்கள்
முற்பகல் 10 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.
(பதிவுகளை விரைவாக உறுதிப்படுத்தவும்)
★ பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
★ அன்னை - யாழ்ப்பாணம்
★ துர்க்கா - சுன்னாகம்
★ மொடேன் - நெல்லியடி
★ செல்லாச்சி - பருத்தித்துறை
★ பொதிகை - சாவகச்சேரி
★ பாக்கியா - கொக்குவில்
★ வலம்புரி - வட்டுக்கோட்டை
★ நாயகபாலன் - மானிப்பாய்



மொத்தமாக 50/- மட்டுமே
கொழும்பு எக்ஸ்பிரஸ் வெளியீடு
தொடர்புகளுக்கு 0778448763, 0778448762, 0779352395, 0771103395

Cey Labs
ஒரு வருட உத்தரவாதத்துடன் குறைந்த கட்டணத்தில் தரமான கண்காணிப்புக் கமரா பொருத்தும் சேவை
CCTV Security Camera
(கண்காணிப்புக் கமரா)



உங்கள் நிறுவனங்களை எங்கிருந்தும் கண்காணிக்கக் கூடிய வசதி
Alarm System



உங்கள் நிறுவனத்தில் திருடர்கள், தீ விபத்து போன்றவற்றின் தாக்கத்தினை முன்கூட்டியே தெரிவிக்கும் கருவி.
Finger Print System



உங்கள் நிறுவனங்களில் கைரேகைப் பதிவின் மூலம் ஊழியர்களின் விபரங்களையும், ஊதிய விபரங்களையும் துல்லியமாகக் கணிக்க உதவும் கருவி.
CeyLabs Solutions (Pvt) Ltd.
204,Brown Road, Jaffna.
Hot Line : 021 222 1807 General : 077 251 7223
Web: www.ceylabs.com Email: contact@ceylabs.com

English and Music Classes
அனைவருக்குமான Spoken with Grammar and ஒகன், கிற்றார் வகுப்புகள் குழுவாகவோ தனியாகவோ வீடுகளுக்கு வந்து கற்பித்துத் தரப்படும்.
தொடர்பு: 0777110523

வேலை ஆள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் Communication & Net Cafe ஒன்றுக்கு பெண் பிள்ளை தேவை. Computer அனுபவம் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
T.P-0772833601, 0772238507

No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்யலாம்
MCS
Supported By UNDP/JRRP
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
CIMA-UK Engineering-USA BIT University of Colombo Multimedia_USA Visual Communication
Closing Date 21.08.2011
Diploma Courses MsOffice, DTP, English, AutoCAD, Hardware, Accounting, Web Designing
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Government Schol
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free Course fee :BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

யாழ்நகரில் 3ம் ஆண்டில் காலடிபதிக்கும் நளினின் புதிய காட்சியறை
19.08.2011 முதல் யாழ் நகர் லக்சன் பிளாசாவில்
NALIN Information Technologies Pvt Ltd.



NALIN CITY SHOW ROOM
Authorized Business Partner
hp TP-LINK metropolitan Canon Debug EPSON



356,Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna. www.nit.lk nalin@nit.lk Tel: 021 222 0838/ 0777667975 Fax: 021 222 4994
எம்மோடு தோளோடு தோள்நின்று உழைத்த அன்பர்கள் வாடிக்கையாளர்கள் நண்பர்கள், விற்பனைப்பங்காளர்கள் ஊழியர்கள், அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு
தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



சரா.புவனேஸ்வரன்
விரிவுரையாளர்.
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை.

பரீட்சை இலக்கம்: 16

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்- I** நேரம்: 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளியுங்கள். மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. இப்பாடலில் மிக நன்றாக விபரிக்கப்படும் பறவை எது?

*கிடைக்கும் அனைத்தும் உண்ணுமாம்*
*தோட்டி வேலையும் பார்த்திடுமாம்*
*சனீஸ்வரனின் வாகனமுமாம்*
*முட்டை இட்டு சந்ததியைப் வெருக்கிடுமாம்.*

1) 2) 3) 4)



02. வேற்றுமையுள்ள உருவின் கீழ்க் கோடிடுக.

1) 2) 3) 4)



03. 1) 2) 3) 4)



பின்வரும் பாடலை வாசித்து 4, 5 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

"வளமும் அறிவும் பண்பட
உயர்ந்து நாமும் சிறந்திட
பள்ளி சென்று படித்திடு
நிதம் நல்லதையே நாடிடு"

04. நாம் சிறந்த வாழ்வு வாழ்வதற்கு
*1) நல்ல பழக்கங்களைப் பின்பற்றுதல்*
*2) பாடசாலை சென்று மாசறக் கற்றல்*
*3) அன்றாடக் கடமைகளைத் தவறாது செய்தல்*
*4) சூழலை சுத்தமாக வைத்திருத்தல்*

05. இப்பாடல் வரிகளிற்கு மிகவும் பொருத்தமானவர்கள்
*1) மாணவர்கள்* *2) பெரியோர்* *3) ஆசிரியர்கள்* *4) சிறியவர்*

06. இக்கொடி அரைச்சுழற்சியின் பின் தோன்றும் சரியான உரு



1) 2) 3)

07. இவ்வுரு 7 தீக்குச்சிகள் மூலம் 2 சதுரங்கள் ஆக்கப்பட்டுள்ளது எனின் இவ்வாறான 6 சதுரங்கள் ஆக்கத்தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கை



*1) 24* *2) 19* *3) 20* *4) 21*

08. பின்வருவனவற்றுள் எது ஓர் அபிப்பிராயம் ஆகும்
*1) பூமியை நம்பியே வானம் உள்ளது*
*2) பூமி கோள் சூரியன் நட்சத்திரம்*
*3) கோள்கள் சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றுகின்றன*
*4) விண்வெளி வீரர்கள் சூரியனிற்கும் செல்லலாம்*

09. உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க

1) 2)



10. மடக்கேறும் அரவும், கீழ்க்கால் எனும் உயிர்க்குறிகள் கொண்ட சொல்
*1) தும்பு* *2) புவி 3) தூசு* *4) கம்பு*

11. பிரசாந் ஓட்டப்போட்டியில் முதலாவதாக வரமுடியாது போனதற்கான காரணம்
*1) பிரசாந் சிறந்த பயிற்சிகள் எடுக்காமை*
*2) பிரசாந் முன்னால் வேறு ஒருவர் ஓடியமை*
*3) பிரசாந் ஆரம்பிப்பாளரை அவதானிக்காமை*
*4) பிரசாத் ஓட்வில்லை.*

12. மாணவர்கள் நுனிப்புல் மேய்வது போலக் கற்றனர் இதன் கருத்து
*1) மாணவர்கள் ஆழமாக ஆராய்ந்து கற்றனர்*
*2) ஓடியோடிக் கற்றல்*
*3) குறிப்புகள் எழுதிவைத்துக் கவனமாகப் படித்தனர்*
*4) புத்தகங்களை மேலோட்டமாக வாசித்துக் கற்றனர்*

13. பின்வரும் பழமொழிகளுள் வேறுகருத்தைத் தரும் பழமொழி எது?
*1) எறும்பூரக் கற்குழியும்*
*2) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்*
*3) அழுத பிள்ளை பால் குடிக்கும்*
*4) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்*

14. பின்வரும் வாக்கியங்களில் வழுவற்ற வாக்கியம் எது?
*1) விஹானி சுகயீனம் காரணமாக பாடசாலை செல்லவில்லை*
*2) நாவலர் கலாச்சார மண்டபத்தில் பண்ணிசைக்கச்சேரி நடைபெற்றது*
*3) புலமைப்பரிசில் பரிட்சையில் சித்திபெறுவது பெருமை*
*4) நாம் பெரியவர்களுடன் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும்*

15. வியப்புக்குறி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்
*1) வாக்கியங்களைத் தொடராக எழுதும்போது*
*2) ஒருவருடைய கூற்றை அப்படியே எழுதும் போது*
*3) பல்வேறு பொருள்களை ஒரு தொடராக எழுதும் போது*
*4) மகிழ்ச்சி, இரக்கம், அச்சம் கொண்ட வாக்கியம் எழுதும் போது*

16. தந்தை ஒருவரின் தற்போதய வயது அவரது மகனின் தற்போதய வயதின் 3 மடங்கு 5 வருடங்களிற்கு முன்னர் தந்தையின் வயது 55எனின் மகனின் தற்போதய வயது என்ன?
1) 60 2) 75 3) 20 4) 50

17. A,B,C ஆகிய 3 தட்டங்களில் வாழைப்பழங்கள் வைக்கப்பட்டிருந்தன B தட்டத்திலுள்ள வாழைப்பழங்களின் தொகை A தட்டத்திலுள்ள தொகையின் இருமடங்கிலும் 8 கூட C தட்டத்தில் B தட்டத்திலுள்ள வாழைப்பழங்கள் போன்று 2 மடங்கிற்கு 8 குறைவு C தட்டத்திலுள்ள வாழைப்பழங்களின் எண்ணிக்கை 48 எனின் A,B ஆகிய தட்டங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை வாழைப்பழங்கள் இருக்கின்றன.
**1) A 10 B 28** **2) A 28 B 20** **3) A 28 B 10** **4) A 10 B 26**

**வர்ணாவிடம் ரூபாய் 100.00 காசுத்தாள்கள் மூன்றும் ரூபாய் 50.00 காசுத்தாள்கள் நான்கும் ரூபா 20.00 காசுத்தாள்கள் மூன்றும் ரூபா 10.00 காசுத்தாள்கள் நான்கும் உண்டு. எனின்**

18. வர்ணா ரம்சியாவிற்கு ரூபா 360.00 கொடுத்தாள். வர்ணா தன்னிடமிருக்கும் அதிக தாள்களைக் கொண்டு இத்தொகையைக் கொடுத்தாளாயின் அவள் கொடுத்த காசுத்தாள்களின் எண்ணிக்கை
1) 8 2) 10 3) 12 4) 14

19. வர்ணா மதனிகாவிற்கு ரூபா 190.00 ஐ குறைந்த காசுத்தாள்களாகக் கொடுத்தாள் எனின் வர்ணா கொடுத்த காசுத்தாள்களின் எண்ணிக்கை
1) 2 2) 5 3) 3 4) 4

20. 2007ம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை எனின் 2008ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் இறுதிநாள் என்ன கிழமை
1) செவ்வாய் 2) திங்கள் 3) சனி 4) புதன்

21. கோலங்களை அவதானித்து (?) வினாக்குறி இடப்பட்ட இடங்களில் வரவேண்டிய இலக்கத்தையும் ஆங்கில எழுத்தையும் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 12 | 21 | 32 | 45 | ? |
| A | E | H | L | O | ? |

**1) 60 S** **2) 65 Q** **3) 64 R** **4) 63 P**

22

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | E | 8 | M | 5 | U | ? |
| A | 24 | I | 40 | Q | 30 | ? |

**1) 6 Y** **2) 13 X** **3) 7 W** **4) 7 Y**

**23, 24ம் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தராசுகளின் அடிப்படையில் உள்ளவை.**



**கீழ்வரும் தராசுகளைச் சமன் செய்வதற்குத்தேவையான மற்றைய பக்கத்தைத் தெரிவுசெய்க.**

23. 1. 2. 3.



24. 1. 2. 3.



(II ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதத்தில் இருபத்தோராம் திகதி அறிவு ஆற்றலால் மகத்தான வெற்றிகள் மலர்ந்திட மனமகிழ்ந்து மாணவச் செல்வங்களை வாழ்த்துகின்றோம்.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சில ஆலோசனைகள்

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! நீங்கள் இப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவது நிசசயம் என்ற உணர்வுடன் பரீட்சைக்குத் தோற்றுங்கள். பரீட்சைக்குத் தேவையான தயார்ப்படுத்தல் களை நன்கு திட்டமிட்டு மேற்கொண்டுள்ளீர்கள். கடின பயிற்சிகளைச் செய்து பெரும் முயற்சி செய்த நீங்கள் நிச்சயமாக புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவது உண்மை.

**வெற்றி உங்களுக்கே!** பரீட்சை என்பது உங்கள் திறமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்த கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம். ஆகவே பரீட்சையை எண்ணி நீங்கள் ஏங்கவோ தயங்கவோ அஞ்சவோ வேண்டாம். நீங்கள் எல்லோருமே திறமைசாலிகள் தான். உங்கள் எல்லோரிடமும் நல்ல ஆற்றல்கள் இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தினால் நிச்சயம் வெற்றி உங்களுக்கே.

**பரீட்சைக்கு முன் -** பரீட்சை தினத்திற்கு முதல்நாள் அதிக நேரம் கண்விழித்து படிப்பதைத் தவிர்த்து நன்கு ஓய்வெடுங்கள். அன்றைய நாட்களில் மரக்கறி உணவுகளை உண்பது உடலுக்கு ஆரோக்கியமானது. குளிர்பானங்கள், செயற்கை உணவுகளைத் தவிர்ப்பது மிகவும் நல்லது. மனதை ஒருநிலைப்படுத்தி மகிழ்ச்சிகரமாக இருங்கள். பரீட்சைக்குத் தேவையான பொருட்களாக இரண்டு பேனாக்கள், இரண்டு பென்சில்கள், ஓர் அடிமட்டம், ஓர் அழிப்பான், சுட்டிலக்கம் மட்டும் எழுதப்பட்ட புதிய File என்பவற்றைக் கொண்டு செல்ல ஆயத்தப்படுத்துங் கள். இரவு 9.00மணிக்கு முன்பதாக நித்திரைக்குச் சென்றுவிடுதல் சாலச் சிறந்தது.

**பரீட்சை அன்று காலையில் -** காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து உடலை நன்கு சுத்தமாக வைத்திருங்கள். அதுபோல் உங்கள் உள்ளத்தையும் உற்சாகப்படுத்த தங்கள இல்லங்களுக்கு அருகில் உள்ள வணக்கத் தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுங்கள். காலையில் இலகுவாக சமிபாடடையக்கூடிய வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளை அளவாக உட்கொள்ளுங்கள். பரீட்சை ஆரம்பமாவதற்கு குறைந்தது 30 நிமிடங்கள் முன்பதாக பரீட்சை மண்டபத்திற்குச் சமுகமளியுங்கள்.

**பரீட்சை மண்டபத்தில-** நீங்கள் எழுதப் போவது ஒரு போட்டிப் பரீட்சை. ஆகவே அதில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்காக நீங்கள் உங்கள் முழுத் திறமைகளையும் ஆற்றல்களையும் அங்கே வெளிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்தில் இருக்கும் அவ்வளவு நேரத்தையும் பயன படுத்துங்கள்.

**வினாத்தாள் I எழுதும்போது-** வினாத்தாள் தந்ததும் முதலாவதாக உங்கள் சுட்டிலக் கத்தை எழுதிவிடுங்கள். பரீட்சைத் தாள்களில் அளவான பெரிய எழுத்துக்களில் அழகாக எழுதுங்கள் மிகச் சிறிய தெளிவில்லாத எழுத்துக்களில் எழுதும் போது சரியான விடைகள் கூடத் தெளிவின்மையால் பிழையாகக் கணிக்கப்படலாம் விடைகளை எழுத முன்பு வினாக்களில் கேடகப் பட்டுள்ள விடயத்தை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். இது மிக அவசியமானதாகும். ஏனெனில் கேட்கப்படும் கேள்விகளுக்கான விடைகள் தரப்பட்டுள்ள விடயங்களிலேயே மறைந்திருக்கலாம். அவற்றை வாசித்து அறிந்து கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டா? என்று உங்களை பரீட்சிக்கின்றார்கள். ஆகவே வினாத்தாளில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தெளிவாக அறிந்த பின்பே விடைகளை அளிக்கத் துணியுங்கள். அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விடையளியுங்கள். கவனத்தைச் சிதையவிடாது வினாவை அவதானித்து விடை எழுதுங் கள். செய்கை வழித்தாளில் வந்த விடையை மிக அவதானத்துடன் விடைத்தாளில் எழுதுங்கள்.

கேட்கப்படும் கேள்விகள் மிகவும் இலகுவானவை. ஆனால் அவை கேட்கப்படும் முறைதான் கடினமாகவும் சிக்கலாகவும் தோன்றும். ஆகவே கேள்விகள் தெளிவாக விளங்கும் வரை திரும்பத் திரும்ப வாசியுங்கள். தெளிவான பின் கேள்வி எவ்வளவு இலகுவானதென்பது உங்களுக்கே நன்கு விளங்கும். விடை எழுதுவதற்குத் தரப்பட்ட நேர அவகாசம் நீங்கள் தெளிவாக வாசித்து ஒழுங்காக விடையளிக்க போதுமானதாகும். நீங்கள் நேரம் போதாது என்ற பதற்றத்தை விட்டு விடுங்கள். ஆயினும் சுறுசுறுப்பாக விடையளியுங்கள்.

01) இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களை உள்ளடக்கியது.
02) 45 நிமிட நேரமே வழங்கப்படும்.
03) குறிப்பிட்ட நேரத்துக்குள் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
04) வினாப்பத்திரம் I இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே செயலாற்றுவது மிகப பிரதானமாகும். உதாரணமாக ஒரு வினாவுக்கு 4 விடைகள் தரப்பட்டு சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக எனக் குறிப்பிடப்பட்டிருப்பின், சரியான விடைக்கு கோடிடப்படுமாயின் அவ்விடைகளுக்குரிய புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
05) ஒரு வினாவுக்கு இரு சொற்களோ இரு எண்களோ எழுத வேண்டியிருப்பின் ஒன்று மாத்திரம் எழுதப்பட்டிருப்பின், அவ்வினாவுக்கு ஒரு புள்ளியேனும் வழங்கப்படுவதில்லை.
06) நீங்கள் எழுதும் விடைகளில் எழுத்துப் பிழைகள் வருவதைக் கூடுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
07) சரியான விடையின் கீழ்க் கோடிடுக என்றவாறு கேட்கப்படும் வினாக்களில் மிகச்சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை மட்டும் கோடிடாமல் முழு விடைக்கும் ஒழுங்காகக் கோடிடுங்கள்.சரியான விடையின் கீழ்க் கோடிடும்போது அடிமட்டத்தை வைத்துக் கோடு வரைவதற்கு நேரம் விரயமாகலாம். எனவே, அதனைத் தவிர்த்துச் சுயமாக கோடிடுவது நல்லது.
08) சரியான விடைக்குக் கோடிடும்போது ஒரேயொரு விடைக்கு மட்டும் கோடிடுங்கள். இரு விடைகள் கோடிடப்பட்டு அதில் சரியான விடை இடம்பெற்றிருந்தாலும் அது பிழையான தெரிவாகவே பரீட்சகரால் கருதப்படும்.
09) செய்கை வழிகள் எதுவும், உமக்குத் தரப்படும் பரீட்சை விடைத்தாளில் இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள். தேவையேற்படின் பென்சிலால் குறித்து விடைகளைப் பெறலாம்.
10) வினாத்தாள் I இல் உங்கள் வேகமும் விவேகமும் சரிவர துலங்க வேண்டும்.

45 நிமிடங்களில் செய்து முடிக்க வேண்டிய வினாத்தாள் I இனை முப்பது நிமிடங்களில் செய்து முடித்து விட்டீர்களானால் மிகுதியாக உள்ள 15 நிமிடங்களில் பரீட்சைத்தாள்களைத் திரும்ப முதலாவது வினாவில் இருந்து திருப்பிப் பாருங்கள். சில வேளையில் நீங்கள் சரியென நினைத்தது தவறாக இருக்கலாம். அதைத் திருத்திக் கொள்ள பதினைந்து நிமிடங்களையும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துங்கள். எப்படியாயினும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைத் தாளை மூடி விட்டுப் பராக்குப் பார்த்துக் கொண்டு இருப்பது மிக மிக முட்டாள் தனமான செயலாகும். அங்கு நீங்கள் பராக்குப் பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் பெறும் புள்ளிகளை குறைத்து விடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**வினாக்களில் கேட்கப்பட்டுள்ள முறைகளில் விடையளியுங்கள்.** அதாவது கீறிட்ட இடத்தில் நிரப்புங்கள் என்று கேட்கப்பட்டால் கீறிட்ட இடத்தில் தெளிவாக எழுதுங்கள். சரியான விடையின் கீழ்க் கீறிடுங்கள் எனக் கேட்கப்பட்டால் சரியான விடையின் கீழ்க் கீறிடுங்கள். அறிவுறுத்தல் களுக்கமைய செயற்படுங்கள். கண்டிப்பாக எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். விடையளிக்காது விட்டு விடாதீர்கள்.

**வினாத்தாள் II**

இவ்வினாப்பத்திரத்திற்கு விடையெழுத 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் தரப்படும, இவ்வினாப்பத்திரம் தரம் 1 தொடங்கி 5 வரையுள்ள அரச பாடத்திட்டத்தை அடிப்படை யாகக் கொண்டு தயாரிக்கப்படும, தமிழ்மொழி, சுற்றாடல் செயற்பாடுகள், கணிதம், ஆங்கிலம், அழகியல், ஆக்கம், உடற்கல்வி, சிங்களம் ஆகியவற்றிலிருந்து வினாக்கள் தொகுக்கப்படும். குறிப்பிட்ட நேரத்துள் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும், வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே செயலாற்றுவது மிகப் பிரதானமாகும், நீங்கள் எழுதும் விடைகளில் எழுத்து பிழைகள் வருவதைக் கூடுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள், செய்கை வழிகள் எதுவும், உமக்குத் தரப்படும் பரீட்சை வினாத்தாளில் இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள், விடைகள் யாவும் தெளிவாக கையெழுத்தில் இருக்க வேண்டும், கணித வினாக்களில் அலகுகளை கவனமாக எழுதுங்கள்.

**கட்டுரைக்கு விடையளிக்கும் போது.......**

காலத்தைத் தீர்மானிக்க வேண்டும், ஆறு வாக்கியங்களுக்கு எதை எழுதுவது எனத் திட்டமிடவேண்டும், கருத்துத் தெளிவாக இருக்க வேண்டும், கேட்கப்பட்ட அளவு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும், எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்த வாக்கியங்களாக இருக்க வேண்டும், வாக்கியங்கள் தலைப்பிற்குப் பொருத்தமானதாக எழுதப்பட்டிருக்க வேண்டும், எழுத்துப்பிழைகளின்றியிருக்க வேண்டும், பேச்சு மொழியில் எழுதப்படலாகாது, வாக்கியங்கள் கூறியது கூறலாக அமையக் கூடாது, வினா வினவப்பட்டுள்ள காலத்தைக் கருத்திற்கொண்டு விடையெழுத வேண்டும், ஆங்கிலச் சொற்கள் கலத்தல் கூடாது, உறுப்பான எழுத்தாக இருக்க வேண்டும், தலைப்பை திருப்பி எழுதக்கூடாது.

**நிறைவாக -** உங்களது சிறந்த பெறுபேற்றைக் கேட்டு ஆனந்தப்படுவதற்காக பெற்றோர், ஆசிரியர், பாடசாலைச் சமுகத்தினர் யாவரும் எப்போதும் ஆவலாக இருப்பர். உங்கள் பெறுபேறு குறித்து உங்கள் வளர்ச்சியில் அக்கறைகொண்ட யாவருக்கும் அறியப்படுத்துங்கள். வளமான எதிர்கால நல்வாழ்விற்கும், கல்விப் பாதையில் வெற்றிகள் பல குவித்திடவும் இப் பரீட்சை ஒரு படிக்கட்டாக அமையட்டும். நல்வாழ்த்துக்கள்!

**மு.வே. அன்பழகன்,**
ஆசிரியர்,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கீழே தரப்பட்டுள்ள நான்கு படிமுறைகளின் கீழ் சட்டை தைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.**

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| *1* | *30 நிமிடம்* |
| *2* | *படிமுறை 1இன் அரை மடங்கு* |
| *3* | *படிமுறை 2 இன் 3 மடங்கு* |
| *4* | *படிமுறை 1 இன் 2 மடங்கு* |

25. மு.ப. 9.45 மணிக்கு சட்டை தைக்கத் தொடங்கினால் எத்தனை மணிக்கு சட்டை தைத்து முடிக்கப்படும்
 1) மு.ப. 11.45 2) பி.ப. 13.15 3) பி.ப. 12.45 4) பி.ப. 12.15

26.  இவ்வுருவிலுள்ள நாற்பக்கல்கள் எத்தனை?
 1) 10 2) 8 3) 5 4) 9

27. 4 மாடுகள் 4 சாக்குப் புல்லை 4 நாள்களில் சாப்பிடும் எனின் 1 மாடு 4 சாக்குப் புல்லை எத்தனை நாள்களில் சாப்பிடும்.
 **1) 4 நாள் 2) 10 நாள் 3) 8 நாள் 4) 16 நாள்**

28. பின்வரும் மின் சுற்றுக்களில் S எனும் ஆளியை X, Y, Z எனும் ஆணிகளில் தொடும் போது 3 மின் குமிழ்களும் தனித்தனியாக ஒளிரும் உரு எது?




**இவ் உருவை அவதானித்து 29 - 31 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**




29. மூன்று நிறங்கள் பூசப்பட்டுள்ள சதுரமுகிகள் இவ்வுருவில் எத்தனை உண்டு?
 1) 8 2) 12 3) 10 4) 6

30. ஒரு நிறம் மட்டும் பூசப்பட்ட சதுரமுகிகள் எத்தனை?
 1) 26 2) 14 3) 28 4) 22

31. A பக்கமும் அதன் எதிர்ப்பக்கமும் மஞ்சள் நிறம் பூச ரூபா 1200.00 செலவாகி யது எனின் B பக்கமும் அதன் எதிர்ப்பக்கமும் நீல நிறம் பூச எவ்வளவு பணம் செலவாகும்?
1) ரூ. 600.00 2) ரூ. 450.00 3) ரூ. 900.00 4) ரூ 1200.00

**பின்வரும் தரவுகளைவைத்து 32வது வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிக.**

| | | | |
|---|---|---|---|
| 1kg சீனியும் 500g தேயிலையும் | = 170.00 | 1kg சீனியும் 250g தேயிலையும் | = 130.00 |
| 500g தேயிலையும் 1kg பிஸ்கட்டும் | = 215.00 | 1 பால்மாவும் 500g சீனியும் | = 335.00 |

32. பால்மா ஒன்றின் விலை என்ன?
 1) ரூ. 290.00 2) ரூ. 135.00 3) ரூ. 200 4) ரூ. 465

33. பாசுபதன் ஒரு கடதாசியை அதன் சரி மத்தியில் இரண்டாக மடித்து மீண்டும் அதனைச் சமனான மூன்று பகுதிகளாக மடித்து அதனை மீண்டும் இரண்டாக மடித்து மடிப்புக்கோடுகளின் வழியே வெட்டினான். பாசுபதன் வெட்டிய பின் எத்தனை கடதாசித்துண்டுகள் கிடைக்கும்?
 1) 6 2) 12 3) 9 4) 8

ஒரு சதுரமுகியின் 3 நிலைகள் இங்கு காட்டப்படுகிறது.




34. [3] இவ்வுருவிற்கு எதிரே உள்ள உரு
 1) [6] 2) [4] 3) [5]

35. குறித்த சதுரமுகியை விரித்துப் பார்த்தால் தோற்றமளிக்கும் சரியான வடிவம




36. பகீரதன் 30 நிமிடங்களில் 20 கடதாசிப்பூக்கள் செய்தான். திலக்ஷன் 15 நிமிடங்களில் அதைப் போன்று ஏழு பூக்கள் செய்வான் இதன்படி பகீரதன அறுபது பூக்கள் செய்யும்போது திலக்ஷன் எத்தனை பூக்களைச் செய்வான
 1) 45 2) 40 3) 44 4) 42

37. 5kg பெரியவெங்காயமும் 8kg சிறிய வெங்காயமும் வாங்கிய தர்சனா ரூபா 352.00 ஐ கடைக்காரனிடம் கொடுத்தாள். 1kg பெரிய வெங்காயத் தின் விலை 1kg சிறிய வெங்காயத்தின் விலையிலும் ரூபா 8.00 கூட எனின் 1kg பெரிய வெங்காயத்தினதும் 1kg சிறிய வெங்காயமும் வாங்க எவ்வளவு தேவை?
 1) 36.00 2) 56.00 3) 58.00 4) 62.00

**கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடைகளை எழுதுக.**

38. 15ml பாலில் இருந்து 2பால் தேநீர் தயாரிக்கமுடியும் 1.5l பாலில் இருந்து எத்தனை பால் தேநீர் தயாரிக்கமுடியும்? ....................................

39. ஓரிடத்தில் இருந்து இரு வாகனங்கள் எதிர்ப்பக்கங்களால் புறப்பட்டன. ஒரு வாகனம் 100m தூரம் சென்று பின் இடப்பக்கம் திரும்பி 50m தூரம் சென்று மீண்டும் இடப்பக்கம் திரும்பி 125m தூரம் சென்று நின்றது. மற்ற வண்டியும் எதிர்ப்பக்கமாக 100m தூரம் சென்று பின் வலப்பக்கம் திரும்பி 75m தூரம் சென்று மீண்டும் வலப்பக்கம் திரும்பி 75m தூரம் சென்று நின்றது. தற்போது இரு வண்டிகளுக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு? ..........................................

40. ஐந்து சொற்கள் எழுத்துக்கள் குழம்பியபடி இருக்கின்றன. எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களை கண்டுபிடிக்கும் போது பொருத்தமற்ற சொல் ஒன்று காணப்படும். அச்சொல்லை எழுதுக.
 கம்ள / துபந் / தாமைம்ன / ம்லத / லம்நி ....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான

# கல்விச்சுடர்

தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



சரா.புவனேஸ்வரன்
விரிவுரையாளர்.
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

பரீட்சை இலக்கம்: 16

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ வினாத்தாள்-II நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளியுங்கள்.

பின்வரும் பாடல்களை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1)
எண்ணும் எழுத்தும் இரு கண்கள்
இல்லாவிட்டால் அவை புண்கள்
மண்ணில் கல்வி கற்றிடுவோம்
மனிதர் எனப் பெயர் பெற்றிடுவோம்

2)
கல்வி அறிவை உயர்த்தி விடும்
காலம் முழுதும் தொடர்ந்து வரும்
பள்ளி சென்று படித்திடுவோம்
பண்பும் பயனும் அடைந்திடுவோம்

3)
நன்மை தீமை உணர்ந்திடுவோம்
நாட்டுக்காக உழைத்திடுவோம்
புன்மை நீங்கி வாழ்ந்திடுவோம்
புவியில் மேன்மை கண்டிடுவோம்

01. இப்பாடல்கள் எதன் பெருமையை எடுத்துக் கூறுகின்றன? -------------
02. புண்கள் போன்ற கண்கள் யாருடையவை? ---------------------------
03. மனிதர் எனப்பெயர் பெற்றவர்கள் யாவர்? -----------------------------
04. இப்பாடல்களில் உள்ள இணைமொழி ஒன்று எழுதுக? ------------------
05. இப்பாடல்களில் உள்ள உயர்திணைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக? ---------------------------
06. கற்றிடுவோம் என்பதை இறந்த காலத்தில் தருக? ----------------------
07. சினைப்பெயர்ச் சொல் ஒன்று எழுதுக? -----------------------------
08. ''மனிதர் எனப்பெயர் பெற்றிடுவோம்'' எனும் வாக்கியத்தின் எழுவாயை எழுதுக?
09. இப்பாடற் பகுதியில் காணப்படும் வினையெச்சம் ஒன்று எழுதுக? ------------
10. ''உயர்வு'' எனும் சொல்லிற்குரிய ஒத்த பதத்தைப் பாடல் வரிகளில் இருந்து தெரிவு செய்து எழுதுக? -------------------------------

பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வசனமாக்குக.

11. நேரங்களிலும் / விடுமுறை / வேண்டும் / நாட்களிலும் / பயன்படுத்த / நூலகங்களை / ஒய்வு
----------------------------------------------------------------
12. உலகில் / ஊக்கம் / உயர்வுடன் / இவ் / அயராத / வாழ்வர் / உடையவர்
----------------------------------------------------------------

பின்வரும் சொற்றொடர்களின் கருத்தை எழுதுக.

13. மூலை முடுக்கு - ..........................
14. மலரும் மணமும் - ..........................

பின்வரும் வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.

15. சிறுவன் வியாபாரியிடம் தரவேண்டிய மீதிப்பணம் குறைகிறது என்றான்

பின்வரும் ஆங்கிலச் சொற்றொடர்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

16. Shall we start the game? ------------------------------
17. Please bring me a piece chalk ------------------------------
18. I want to watch a match ------------------------------

பின்வரும் சிங்களச் சொற்றொடர்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

19. மானெல் மல் பிபீ ------------------------------
20. ஒயா இன்னே கீவெனி பந்தியே த? ------------------------------
21. தும்ரிய ஸ்தானயட்ட யன்னே கொஹொ மத? ------------------------

22 தொடக்கம் 47 வரையுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடையின் கீழே கோடிடுக.

22. S. M. S மூலம் செய்திகளை அனுப்ப உதவுவது
1) தபாற்கந்தோர் 2) தொலை பேசி
3) கையடக்கத் தொலைபேசி 4) தந்தி

23. பெருவீதி, சிறுவீதி, ஒற்றையடிப் பாதை, மாகாண எல்லைகள் என்பவற்றை தேசப்படம் ஒன்றிற் குறிக்கப்பயன்படுத்தப்படும் நியம நிறங்களைக் காட்டும் சரியான விடை.
1) சிவப்பு, மஞ்சள், கறுப்பு, பச்சை 2) சிவப்பு, மஞ்சள், கறுப்பு, சிவப்பு
3) சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம் 4) சிவப்பு, மஞ்சள், சிவப்பு, கறுப்பு

24. தத்தித் தத்திச் செல்லும் பறவை
1) காகம் 2) வாத்து 3) செண்பகம் 4) புளுனி

25. ஐரோப்பிய விளையாட்டு அம்சங்களுடன் கூடிய எம் நாட்டு விளையாட்டு எது?
1) கரப்பந்து 2) எல்லே 3) காற்பந்து 4) கிட்டிப்புள்

26. தேசியக் கொடி பறக்க விட்ட படங்களில் சரியானது..




27. அந்நியர் ஆட்சிகளினால் இலங்கையில் பரப்பப்படாத சமயம் எது?
1) றோமன் கத்தோலிக்கம் 2) பௌத்த சமயம்
3) புரட்டஸ் தாந்து சமயம் 4) கிறிஸ்தவ சமயம்

28. நீரைக்கொண்டு ''TS'' செய்து தம்மைச் சுத்தம் செய்யும் மதத்தவர்கள்
1) முஸ்லிம் 2) பௌத்தர் 3) இஸ்லாம் 4) சிங்களவர்

29. துன்ஹிந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள நகரம்
1) மொனராகல 2) பதுளை 3) கண்டி 4) நானு ஓயா

30. சிகிரியா அமைந்துள்ள மாவட்டம்
1) அநுராதபுரம் 2) பொலன்நறுவை
3) வவுனியா 4) மாத்தளை

31. சூரியனிலிருந்து கோள்களின் ஒழுங்குமுறை
1) புதன், சுக்கிரன், புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனசு, நெப்தியூன், புளூற்றோ
2) புதன், சுக்கிரன், புவி, செவ்வாய், சனி, வியாழன், யுரேனசு, நெப்தியூன், புளூற்றோ
3) சுக்கிரன், புதன், புவி, சனி, செவ்வாய், வியாழன், யுரேனசு, நெப்தியூன், புளூற்றோ
4) புதன், சுக்கிரன், சனி, புவி, செவ்வாய், வியாழன், யுரேனசு, நெப்தியூன், புளூற்றோ

32. இரண்டு வர்ணங்களைக் கலப்பதால் உண்டாக்கக் கூடிய வர்ணம்
1) சிவப்பு 2) மஞ்சள் 3) பச்சை 4) நீலம்

33. துருப்பிடிக்கக்கூடிய உலோகம்
1) உருக்கு 2) ஈயம் 3) அலுமினியம் 4) இரும்பு

34. பின்வருவனவற்றில் தொற்று நோய் எது?
1) தடிமன் 2) பற்கொதி 3) நீரிழிவு 4) புற்றுநோய

35. கார் பற்றறி ஒன்றில் தீப்பொறி தோன்றும் சந்தர்ப்பம்
1) நேர்முனையையும் நேர்முனையையும் கம்பியால் தொடும் போது
2) மறைமுனையையும் மறைமுனையையும் கம்பியால் தொடும் போது
3) நேர்முனையையும் மறைமுனையையும் கம்பியால் தொடும் போது
4) நேர்முனையையும் மறைமுனையையும் தடியால் தொடும் போது

36. தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களை அழைப்பதற்கு பயன்படுத்தப்படும் ஒலி
1) மணியொலி 2) சங்கொலி
3) விசில் ஒலி 4) ஒலிபெருக்கி ஒலி

37. கணனியில் எமக்குத் தேவையானவற்றைத் தெரிவு செய்ய உதவுவது
1) தட்டச்சுப்பொறி 2) சுட்டி
3) மையச்செயலகம் 4) மொனிற்றர்

38. பின்வருவனவற்றில் தொலைக்காட்சி அலை வரிசை எது?
1) FM 2) MW 3) UHF 4) SW

39. நகரசபைகளின் செயற்பாடு அல்லாதது
1) நகர வீதிகளை அழகுற வைத்திருப்பது
2) வீதிகளைப் புனரமைப்பது
3) கடைத்தொகுதிகள், சந்தைகளில் உள்ள குப்பைகளை அகற்றுதல்
4) நகர மக்களுக்கு வீடு அமைத்துக் கொடுத்தல்

40. பெருமணல்மண் காணக்கூடிய இடம்
1) ஆறு பாயுமிடம் 2) கிணற்றடி 3) வயல்வெளி 4) ஏரிக்கரைகளில்

41. இவற்றுள் தள்ளு வண்டியை இலகுவாகக் கொண்டு செல்லும் படம் எது?




42. ஊடு தெரியும் தாளில் எழுதப்பட்டவற்றை திரையில் விழச்செய்யும் சாதனம்
1) மேன்தலை எறியி 2) கணனி
3) எக்ஸ்ரே கதிர் 4) இணையம்

43. பின்வருவனவற்றுள் எரிபொருள் அல்லாதது
1) டீசல் 2) மண்ணெண்ணெய் 3) விறகு 4) அடுப்பு

44. வளையக்கூடியது, தட்டும்போது ஓசையெழுப்புவது, வெப்பத்தைக் கடத்துவது
1) பிளாஸ்ரிக் 2) உலோகம் 3) மரம் 4) இறப்பர்

45. இலங்கையின் கடற்கரையோரமாக உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை
1) 2 2) 3 3) 4 4) 5

46. கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச்செல்லும் புகையிரதம் எத்தனை சந்திகளில் திரும்பிச் செல்லும்
1) 4 2) 3 3) 5 4) 2

47. ஒரு முகம் மட்டுமுள்ள திண்ம உருவைத் தெரிவு செய்க.




அடைப்பிற்குள் உள்ளவற்றைத் தெரிவு செய்து உரிய இடத்தில் எழுதுக.

ஸ்ரீலங்கா, மாலைதீவு, பாகிஸ்தான், பூட்டான், பங்களாதேஷ், நேபாளம், இந்தியா



48. _ _ _ 49. _ _ _ 50. _ _ _ 51. _ _ _

றம்பட், பியானோ, ஆர்மோனியம், ஜால்ரா, றபான், தலோ, தாளம், தம்பட்டம், ரம், சல்லாரி



52. _ _ _ _ 53. _ _ _ _ 54. _ _ _ _ 55. _ _ _ _

(IV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்வரும் கருவிகளின் பெயர்களை எழுதுக.



56. _ _ _ 57. _ _ _ _ 58. _ _ _ _ 59. _ _ _ _

60. வவுனியாவில் இருந்து புத்தளம் வரை உள்ள தூரம் 120km ஆகும். இவ்விரு நகரங்களுக்கிடையில் அநுராதபுரம் உள்ளது. புத்தளத்திலிருந்து அநுராதபுரம் வரையான தூரம் வவுனியாவில் இருந்து புத்தளம் வரை உள்ள தூரத்தின் 2/6 பங்கு எனின் வவுனியாவிலிருந்து அநுராதபுரம் வரையான தூரம் எவ்வளவு?

......................................................................

61. ½ போத்தல் தேங்காய் எண்ணெய் 62.50 எனின் $1\frac{1}{2}l$ தேங்காய் எண்ணையின் விலை என்ன?

......................................................................

62. மாலை 6.30 மணிக்கு தொடங்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 6 மணித்தியாலங்களில் முடிந்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சி முடிந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

......................................................................

63. 1 பெட்டியில் 8 பேனைகள் வீதம் 872 பேனைகள் பொதிசெய்ய எத்தனை பெட்டிகள் தேவை?

......................................................................

64.7.403 என்பதைச் சொற்களில் எழுதுக.

......................................................................

கொழும்பு வடக்கு வலயத்திலிருந்து A B C D E எனும் ஐந்து பாடசாலை களுக்கு இடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு 11, 13, 15 வயதுப் பிரிவில் பங்குபற்ற வந்த ஆண், பெண் போட்டியாளர்களின் எண்ணிக்கை அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பாடசாலை | 11 வயது | | 13 வயது | | 15 வயது | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| A | 10 | 08 | 09 | 15 | 07 | 08 |
| B | 07 | 09 | 16 | 08 | 06 | 05 |
| C | 12 | 11 | 13 | 12 | 09 | 04 |
| D | 14 | 09 | 15 | 13 | 07 | 09 |
| E | 13 | 06 | 06 | 15 | 08 | 13 |

65. 13 வயதுப் பிரிவில் பங்குபற்ற வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

......................................................................

66. C பாடசாலையில் இருந்து வந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் யாது?

......................................................................

67. விளையாட்டுப் போட்டிக்கு ஐந்து பாடசாலைகளிலும் இருந்து வந்த ஆண் போட்டியாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

......................................................................

68. அதிக போட்டியாளர்கள் பங்கு பற்றிய பாடசாலை எது?

..........................................

69. எந்த வயதுப்பிரிவு மாணவர்கள் மிகக்குறைந தளவு பங்கு பற்றினார்?

..........................................




70. A B C D E எனும் ஐந்து பாடசாலைகளிலும் இருந்து வந்த 13 வயதுப் பிரிவு ஆண், பெண் போட்டியாளர்களின் மொத்த எண்ணிக்கையை நிரை வரைபில் குறித்துக் காட்டுக.

71. கூட்டுக. $\frac{1}{9} + \frac{1}{3} + \frac{1}{2} =$

..........................................




72. இவ்வுருவின் சுற்றளவு யாது? ....................

73. இவ்வுருவின் பரப்பளவு யாது? ....................

கீழே தரப்பட்ட படங்களை அவதானித்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வோர் வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை இருப்பது அவசியம். நான்கு சொற்களுக் குக் குறையக் கூடாது.



74. ......................................................................

75. ......................................................................

76. ......................................................................

77. ......................................................................

78. ......................................................................

79. ......................................................................

## பரீட்சை இல. 15 இன்
## வினாத்தாள் I இற்கான விடைகள்

01-1 02-3 03-4 04-2 05-1 06-3 07-1 08-1 09-4
10-1 11-3 12-3 13-3 14-3 15-1 16-3 17-3 18-3
19-2 20-2 21-3 22-3 23-3 24-1 25-1 26-3 27-4
28-3 29-4 30-சமில். 31-மைத்துனி. 32-3 33-2 34-லீனா
35-சானா 36-மேற்கு 37-பாட்டி 38-மைத்துனர்.
39-ஒருவர் 40- நிருதிமூலை

## பரீட்சை இல. 15 இன்
## வினாத்தாள் II இற்கான விடைகள்

01. எல்லா இடமும்.
02. பெரிய
03. காடு
04. அவன்கால் போனபோக்கில் நடக்கிறான்.
05. ஆரத்தழுவி, வாரிஅணைத்து
06. பெற்றோர்.
07. பின்னே
08. விழி/ நயனம்
09. ஆரஅமர/ அங்குமிங்கும்
10. வகுப்பாசிரியர்.

02. 1) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
2) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.
03. 1) குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
2) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
04. 1) உள்ளம் கசியும் பசுவைப்போல. 2) பாலைப்போல நிலவு.
05. 1) மழை பெய்யும் காலங்களில் ஆற்றில் வெள்ளம்.
06. 1) நான் ஆச்சி 2) அடுப்பு 3) இவர் எனது மாமி.
07. 1) குருத்துமா பந்தியே இன்னவா. 2) மிரிஸ்பல.
08. 1) வாகனங்கள். 2) மின்னல் 3) நான் நாளை வருவேன்.
09. 1) Happy Birth Day 2) Ready
10. 1-4 2-3 3-3 4-1 5-1 6-3 7-2 8-3 9-1 10-3
11-2 12-113-4 14-3 15-2 16-1 17-3 18-4
11. 1) சனி 2) வெள்ளை 3) மைக்கல் அஞ்சலோ 4) சிவப்பு. 5) மார்க்கோனி
12. 1) பருந்து 2) கழுகு 3) நாரை
13. 1) செண்பகம் 2) இராப்பாடும் குருவி 3) குயில்.
14. 1) 9643 2) 72 3) 31 4) 8.40 மணி 5) 18 லீற்றர் 400 மில்லிலீற்றர்.
6. 6 கட்டம். 7. 20 8. 0.59 9. 12 cm 10. 4/8 அல்லது 1/2.
15. 1) ரூ 188.00 2) ரூ 22.50 3) ரூ 217.5 4) ரூ 20.00

## பரீட்சை இல. 16 இன்
## வினாத்தாள் I இற்கான விடைகள்

01. 2 02. 4 03. 3 04. 2 05. 1
06. 2 07. 2 08. 3 09. 2 10. 3
11. 2 12. 2 13. 4 14. 3 15. 1
16. 3 17. 1 18. 2 19. 2 20. 1
21. 1 22. 1 23. 1 24. 2 25. 2
26. 1 27. 2 28. 3 29. 1 30. 1
31. 3 32. 1 33. 2 34. 2 35. 1
36. 3 37. 2 38. 3 39. 2 40. பந்து

## பரீட்சை இல. 16 இன்
## வினாத்தாள் II இற்கான விடைகள்

01. கல்வி 02. கல்வியறிவில்லாதவர்களின் கண்கள்.
03. கல்வி கற்றவர்கள் 04. எண்ணும் எழுத்தும் /நன்மை, தீமை.
05. மனிதர் 06. கற்றோம் 07. கண்/கண்கள்
08. நாம் 09. சென்று/நீங்கி. 10. மேன்மை.
11. ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாள்களிலும் நூலகங்களைப் பயன்படுத்த வேண்டும்.
12. இவ் உலகில் அயராத ஊக்கம் உடையவர் உயர்வுடன் வாழ்வர்.
13. எல்லா இடமும் 14. சேர்ந்திருத்தல்
15. சிறுவன் வியாபாரியிடம் ''தரவேண்டிய மீதிப்பணம் குறைகிறது'' என்றான்.
16. நாங்கள் விளையாட்டை ஆரம்பிப்போமா
17. தயவு செய்து எனக்கு ஒரு துண்டு வெண்கட்டி கொண்டுவா.
18. நான் ஒரு போட்டியைப் பார்க்க வேண்டும்.
19. நீலோற்பல மலர்கள் மலர்கின்றன.
20. நீர் எத்தனையாம் வகுப்பில் உள்ளீர்?
21. புகையிரத நிலையத்துக்குப் போவது எப்படி?
22. 3 23. 2 24. 4 25. 2 26. 1 27. 2
28. 3 29. 2 30. 4 31. 1 32. 3 33. 4
34. 1 35. 3 36. 2 37. 2 38. 3 39. 4
40. 1 41. 2 42. 1 43. 4 44. 2 45. 4
46. 1 47.3 48. பாகிஸ்தான் 49. இந்தியா
50. பங்களாதேஸ் 51. நேபாளம் 52. பியானோ
53. றம்பட் 54. ஜால்ரா 55. தாளம்
56. நகம்வெட்டி 57. முள்ளுமண்வெட்டி
58. புரிச்சாவி 59. அமிழ்ப்பு வெப்பமாக்கி
60. 80 Km 61.ரூபா 250.00 62.00:30 மணித்தியாலம்
63. 109 64. ஏழு தசம் நான்கு பூச்சியம் மூன்று
65. 122 66. 7 67.152
68.பாடசாலை D 69. 15 வயதுப்பிரிவு
70. சரியான வரைபு 71. 17/18 72. 42 cm 73. 38 $cm^2$
74. முதல் 79 வரை பொருத்தமான வாக்கியங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org